# சிறிய தீர்க்கதரிசிகள்

அசீரியர்களால் கி.மு 722இல் சிறைப்பிடப்பதற்கு முன்பாக, தீர்க்கதரிசிகளாகிய யோனா, ஆமோஸ், ஓசியா என்பவர்கள் வடக்குராஜ்ஜியத்தில் (இஸ்ரவேல், எப்பிராயீம்) ஊழியம் செய்தார், பாபிலோனியர்களால் சிறைப்பிடப்பதற்கு முன்பாக, வடக்குராஜ்ஜியத்தில் (யூதா) யோவேல், மீகா, செப்பனியா, நாகூம், ஆபகூக், ஒபதியா ஆகிய தீர்க்கதரிசிகள் ஊழியம் செய்தார்கள். தானியேல், எசேக்கியேல் ஆகிய இருவரும் பெரிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுகின்றார்கள், இவர்கள் சிறையிருப்புக் காலத்தில் ஊழியம் செய்தவர்களாகும். சிறையிருப்பிலிருந்து மீண்டுவந்த யூதர்களுக்கு ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய தீர்க்கதரிசிகள் ஊழியம் செய்தார்கள். அவர்களுடைய செய்தியானது சிறிதாக இருக்கவில்லை அவற்றின் உள்ளடக்கம் சிறியதாக இருந்தது. சிறியது என்பது அதன் அளவை மட்டும் குறிப்பிடுகின்றது. அனேகமான சிறிய தீர்க்கதரிசிகள் மூன்றுவிதமான செய்திகளைக் கூறியிருக்கின்றார்கள். ஜனங்களின் பாவம், வரப்போகின்ற கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு, இறுதியில் இஸ்ரவேலர்கள் பழைய நிலைக்குத் திரும்புதல். நியாயத்தீர்புக்கான செய்தியிலும் நம்பிக்கை பற்றிய வாக்குறுதி கொடுக்கப்படுகின்றது.

## சிறிய தீர்க்கதரிசிகள்.

எபிரேய பாஷையிலிருந்து வேதாகமங்கள் மொழிபெயர்க்கப்பட்டன, அப்போது சிறிய தீர்க்கதரிசிகள் புத்தகங்கள் ஒரே புத்தகமாகவே பயன்படுத்தப்பட்டன. அவை **பன்னிரண்டு தீர்கதரிசனப் புத்தகம்** என்றே அழைக்கப்பட்டது. நாங்கள் பயன்படுத்தும் வரிசையிலேயே எபிரேய மொழியிலும் இந்தப்புத்தகம் அமைந்திருந்தது. சிறிய தீர்கதரிசிகள் ஒரு செய்தியையே இணைந்து தருகிறார்கள், இஸ்ரவேலின் பாவத்திற்கு அப்பால் கர்த்தரின் திட்டத்தையும், அன்பையும் மீள வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

இந்த தீர்க்கதரிசியின் பெயர்கள் வேறு புத்தகங்களில் குறிப்பிடப்படாதபடியால் இவர்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியும், இவற்றிற்கு மாறாக மீகா (எரே26:18), யோனா (2 இரா14:25), ஆகாய், சகரியா (எஸ் 5:1; 6:14). என்பவை உள்ளன. சிறிய தீர்க்கதரிசிகள் புத்தகம் ஓசியாவுடன் தொடங்கி மல்கியாவுடன் முடிவடைகின்றது.

கி.மு. 700இன் நடுப்பகுதியில் இஸ்ரவேல் ராஜ்ஜியம் சமாரியாவிலும், யூதாவின் ராஜ்ஜியம் எருசலேமிலும் தொடர்புறாமல் செழிப்படைந்து வந்தன.

ஆனால் மொசப்தோமியாவில், அசீரியர்கள் எதிர்பார்ப்புடனும், வல்லமையிலும் வளர்ந்து வந்தார்கள். இவர்கள் பலஸ்தீனத்திலும், அதற்கு மேலாக எகிப்திலும் கண்நோக்கமாக இருந்து வந்தார்கள்.

இவர்களுடைய போர்நடவடிக்கையால், 734, 721 காலப்பகுதியில் சமாரியா அழிக்கப்பட்டு ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

யூதா உயிர் தப்பி அசீரியர்களின் அடிமை நாடாக மாறியது. கி.மு. 655இற்குப்பின்பல நூற்றாண்டுகளாக பிரச்சனைகளுடன் இருந்தது. பலகிளர்ச்சிகளினால் அசீரியா பலமிழந்து, இறுதியில் கி.மு. 612இல், 609இல் பாபிலோனிடம் வீழ்ந்தது. பாபிலோன் எகிப்தை வெற்றி கொண்டு பாலஸ்தீனத்தைக் கைவசப்படுத்தியது. எருசலேம் பாபிலோனால் கி.மு. 587இல்அழிக்கப்பட்டது. பல யூதாதேசத்தவர்கள் அடிமைகளாக சிறைப்பிடித்துக் கொண்டுசெல்லப்பட்டார்கள். பெர்சியா கி.மு. 538இல் பாபிலோனை வெற்றிகொண்டு சாம்ராஜ்ஜியத்தைச் சுதந்தரித்தது. பெர்சியா மதங்களுக்கு கொடுத்த அழுத்தங்களுக்கு மத்தியில், யூதர்கள் தங்கள் ஆலயத்தைக் மீண்டும் கட்டுவதற்கு அனுமதி பெற்றுக் கொண்டார்கள். இதற்கு அவர்களின் அயல்தேசங்களின் எதிர்ப்பையும் நீண்டகாலமாக பெற்றுவந்தார்கள்.

ஆனாலும் **செருபாபேல் 520-515இலும், எஸ்றா**, **468இலும் நெகேமியா கி**.**மு 445-427 இலும்** என்பவர்களுக்கூடாக ஆலயமும், நகரமும் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டன. ஆசாரிய ஊழியம் மீண்டும் தொடங்கப்பட்டது. மோசேயின் தோறா எருசலேமின் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது, பண்டிகைகளுக்கு யாத்திரியர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகம் சரியான காலவரை ஒழுங்கில் பின்பற்றப்படவில்லை. அவைதெளிவற்றவையாகவும் காணப்படுகின்றன.

12 சிறிய தீர்க்கதரிசிகள் ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்தார்கள், அவர்களின் பெயர்கள் கீழே கூறப்பட்கின்றன.

**ஓசியா :** கர்த்தருடைய அன்பு தொடர்ச்சியானதும், வைராக்கியமானதுமாகும். இது இஸ்ரவேலுடைய கொள்கையை மறுதலிக்காது.

**யோவேல் :** பாவம் பெரியதும், பயங்கரமானதாகும். நியாயத்தீர்ப்பு வரவுள்ளது.

**ஆமோஸ் :** இஸ்ரவேலர்களுடையதும், அயலகத்தார்களுடையதும் பாவம் நிறைவாக இருந்தது. நியாயத்தீர்ப்பு சமீபமாயிருக்கின்றது.

**ஒபதியா :** கர்த்தருடைய ஆளுகை ஏதோமின் நியாயத்தீர்பின் மூலம் காண்பிக்கப்பட்டது.

**யோனா**: **கர்த்தர் நினிவேயிலும் கருசனை கொண்டுள்ளார்**.

**மீகா 4-5 :** கர்த்தருடைய வீடு (எருசலேம் தேவாலயம்) எல்லா பர்வதத்தின் மேலாகவும் உயர்த்தப்படும். ஆராதனைக்காக எல்லோரும் இங்கு வரமுடியும். பலிகளைவிட நீதியும் இரக்கமும் மேலானது.

**நாகூம் :** நினிவேயின் அழிவின் போது கர்த்தருடைய கோபம் காண்பிக்கப்பட்டது.

**ஆபகூக்:** பாபிலோன் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பொறுமையைக் கையாண்டது.

**செப்பனியா :** யோவேலின் " கர்த்தருடைய நாள்" என்ற எண்ணக்கரு தொடரப்பட்டது.

**ஆகாயும்**, **சகரியாவும்**. **1-8:** செருபபேலுடையதும் யோசுவாவினுடையதும் ஆலயம் கட்டிய செயற்பாடானது கர்த்தருடைய இரக்கமனப்பாண்மை நிறைவேறும் காலத்தைக் குறிப்பதாகும் இது நடந்து கொண்டேயிருந்தது.

**சகரியா 9-14 :** பெர்சியாவின் ஆட்சியில் இஸ்ரவேலின் சிறையிருப்புக்கு முந்திய சரித்திரத்தை யூதரவின் சிறையிருப்பிற்குப் பிந்திய பார்வையாக காண்பிக்கப்படுகிறது.

**மல்கியா :** கர்த்தருடைய அன்பு வெளிக்காட்டப்பட்டது. சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்ப டுத்துங்கள். கர்த்தருடைய கட்டளைகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கவனியுங்கள். கடும்சிக்கலான இலக்கியத்தினால், இதை மனதில் வைத்துக் கொள்வது மிக முக்கியமானதாகும். அதனால் செய்தியின் விடயத்தை மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**ஒசியா 1-3 :** இஸ்வேலர்களுக்கான கர்த்தருடைய தீர்மானிக்கப்பட்ட அன்பு.

**மீகா 4-5 :** கர்த்தருடைய நோக்கம்.— புதிய எருசலேம் ஆலய நகரமாக ஆராதனைக்காக யாவரும் வரலாம்.

**மல்கியா :** கர்த்தருடைய தீர்மானிக்கப்பட்ட அன்பு நீங்காமல் இருந்தது. இதற்கு துலங்குங்கள். யூதர்களின் கனன் புத்தகத் தொகுதியில் பன்னிரண்டு தீர்க்கதரிசிகளும் பாதுகாக்கப்படுகின்றன, கிறிஸ்தவர்களின் வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

**இதில் சேர்க்கப்பட்ட விடயங்கள்**. :

கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டவர்களால் அவரைத் தேடிக் கண்டு, விசுவாசிக்க வேண்டும் என்பதற்காக. சரித்திரத்தில் தன்னுடைய திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான கர்த்தருடைய கட்டுப்பாடு, அவரால் தெரிவு செய்யப்பட்டவர்கள் இதற்கான முக்கிய பங்கை வகிக்கின்றார்கள்.

தன்னுடைய மக்கள் தன்னை உண்மையாகவும் சந்தோஷமாகவும் ஆராதிக்க வேண்டும் என்பதே கர்த்தருடைய பிரதான நோக்கமாகும்.

எல்லாத் தேசங்களிலிருந்தும் கர்த்தர் ஜனங்களை அழைக்கின்றார், அவர்கள் தன்னுடைய மக்களுடன் சேர்ந்து தன்னை ஆராதிப்பதற்காகவேயாகும்.

தேசத்தில் 12 கோத்திரத்தாரும் யோசுவா காலத்தில் குடியேற்றப்பட்டதுபோல திரும்பி வரும் யூதர்களுக்கு இந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை.

அவர்கள் சிதறப்பட்டு எங்கே இருந்தாலும் அங்கே கர்த்தரை ஆராதிக்கவேண்டயதே அவர்கள் கடமையாகும் என்பதைக் கர்த்தர் உறுதிப்படுத்தினார்.

ஒரே வேதாகமத்தைப்பயன்படுத்தி எருசலேம் தேவாலயத்தை நோக்கி ஆராதனையில் அவர்கள் ஒருமனதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அழைக்கப்பட்டார்கள்.

ஆனால் யூதர்களும் கிறிஸ்த்தவர்களும், தேவாலயம் அகற்றப்பட்டதை நினைத்து மிகவும் துக்கமாக இருக்கின்றார்கள். கி.பி.70 இல் ரோமர்களால் தேவாலயம் இடிக்கப்பட்டது. இன்னமும் அது மீண்டும் கட்டப்படவில்லை.

# 1.ஓசியா (755-715 கி.மு.)

**அறிமுகம் :**

ஓசியா என்ற வார்த்தையின் பொருள் “இரட்சிப்பு” என்பதாகும். இவர் வடராஜ்ஜியத்தின் தீர்க்கதரிசியாவார் . எரேமிய யூதாவின் பாவத்திற்காக அழுததுபோல் இவரும் வடராஜ்ஜியத்தின் பாவத்திற்காக அழுதார்,

2. வேதாகமத்திலுள்ள புத்தகங்களில் இந்தப்புத்தகம் சற்று வித்தியாசமானதாகும், ஏனெனில் கர்த்தர் இந்தத்தீர்க்கதரிசிக்கு வேசிகளுள் பெண் கொள்ளுமாறு கட்டளையிட்டார். இவ்வாறு கர்த்தர் கட்டளையிட்டதற்குப் பல காரணங்கள் உண்டு.

a. பரிசோதனைக்கான காரணம்.

உண்மையில்லாத மனைவியைத் திருமணம் செய்வதால், ஓசியா மற்ற எந்த தீர்க்கதரிசிகளைப் போலல்லாமல், வடராஜ்ஜியத்தின் மக்களுக்காக கர்த்தர் தவிப்பதைப் போல் அந்த உணர்வை ஓசியாவால் புரிந்து கொள்ள முடியும். அந்த ஜனங்கள் ஆவிக்குரிய வேசித்தனத்தில் கர்த்தருக்கு எதிராக விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டார்கள். இவ்வாறான ஒரு திருமணத்துக்கு ஒப்பாகவே இஸ்ரவேலர்களின் உறவு தன்னுடன் இருப்பதாக கர்த்தர் எண்ணினார். (எச.62:5; ஒசி. 2:19; எரே. 3:14.)

b. **விளக்கமளிக்கும் பொருளாக காரணப்படுத்தல்**. அவருடைய சொந்த திருமணமே ஒரு நடைமுறையிலுள் உதாரணமாக இஸ்ரவேலருக்கு ஒரு செய்தியாக அமைகின்றது.

c. **தீர்க்கதரிசனக் காரணம்**. பிள்ளைகளையும் அந்தப் பெயர்களிலேயே அழைக்கும்படி கட்டளையிட்டார், எதிர்காலத்தில் இஸ்ரவேலுக்கு ஏற்படும் தண்டனைக்கானவையாகும்.

3. இவர் மற்றய தீர்க்கதரிசிகளைவிட அதிககாலம் ஊழியம் செய்தார்.

4. ஓசியா அசீரியர்களின் முற்றுகை பற்றி முன்னறிவித்தார், பிற்பாடு கி.மு.721இல் அது நிறைவேற்றப்பட்டதையும் கண்டார்.

5. இந்தப்புத்தகத்தை எப்பிராயீம் பற்றி தொடர்ச்சியாகக் கூறிவருகின்றார், காரணம், இஸ்ரவேலின் 12 கோத்திரத்தில் முதலில் பின்மாற்றமடைந்தது இந்த எப்பிராயீம் கோத்திரமாகும்.

6. ஏறக்குறைய புதிய ஏற்பாட்டில் 35 தடகைள் பழைய ஏற்பாட்டுப் புத்தகமாகிய ஓசியாவின் புத்தம்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பிட்டுப்பாரக்க.

a. ஓசியா 11:1 உடன் மத்தேயு 2:15

b. ஓசியா 6:6 உடன் மத்தேயு 9:13

c. ஓசியா 10:8 உடன் லுக்கா 23:30

d. ஓசியா 2:23 உடன் ரோமர் 9:25

e. ஓசியா 13:14 உடன் 1கொரிந்15:55

**I. ஆழ்ந்த வேதனையிலிருக்கும் கணவனும் அழிந்து கொண்டிருக்கும் மனைவியும். (ஓசியாவும், கோமாரும்) (1-3).**

A. ஓசியாவின் மனைவிசோரம் போனவள். அவனுடைய மனைவி திருமணம் முடிப்பதற்கு முன்பாகவே வேசியாக இருந்தவள், திருமணம் முடித்தபின்பு விபச்சாரியாக இருந்தவள். ஓசியா அவளைத் திருத்துவதற்கு முயற்சி செய்தார்.

1. **உலகத்தின் சந்தையிலிருந்து (பாவத்திலிருந்து) மீட்பதற்கு முயற்சி செய்தார் .** “ஆகையால், இதோ, நான் உன் வழியை முள்ளுகளினால் அடைப்பேன்; அவள் தன் பாதைகளைக் கண்டுபிடிக்கக் கூடாதபடிக்கு மதிலை எழுப்புவேன்.” (2:6). ஓசியா அவளை வீட்டில் அடக்கிவைக்கலாம் என்று முயற்சி செய்தார். அவன் தன்னுடைய முதலாவது மகன் ஜெஸ்றீலிடம் உதவிகேட்டான், அவளுக்கு இந்த மடத்தனமான செய்கைகளை நிறுத்தும்படி வேண்டிக் கொண்டான். “உங்கள் தாயோடே வழக்காடுங்கள்; அவள் எனக்கு மனைவியுமல்ல, நான் அவளுக்குப் புருஷனுமல்ல; அவள் தன் வேசித்தனங்களைத் தன் முகத்தினின்றும், தன் விபசாரங்களைத் தன் ஸ்தனங்களின் நடுவினின்றும் விலக்கிப்போடக்கடவள்.” (2:2). ஆனால் இந்த முயற்சிகள் வீனாயின. ஆனால் கோமார் தன்னுடைய வழியிலே தொடர்ந்து சென்றாள்.

2. **அவளைச் சந்தையிலிருந்து வாங்குவதற்கான முயற்சி.**

கோமார் இவ்வாறு பயன்படுத்துவதற்கு முன்பாகவும், அவள் சீர் கெடுவதற்கு முன்பாகவும், கைவிடப்படுவதற்கு முன்பாகவும் அவள், அடிமைச் சந்தையில் காணப்பட்டாள். இந்த சந்தையிலிருந்து அவளை விடுதலையாக்கும்படி கர்த்தர் ஓசியாவிற்குக் கட்டளையிட்டார். “அப்பொழுது நான் அவளை எனக்குப் பதினைந்து வெள்ளிக்காசுக்கும், ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்கும் கொண்டேன்.” (3:2).

**B. ஓசியாவின் பிள்ளைகளும் சோரமாகப் பெயரிடப்பட்டார்கள்**. தீர்க்கதரிசி கோமாரி டமிருந்து மூன்று பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு பிள்ளைக்கும் தீர்க்கதரிசனமான பெயர்கள் கொடுக்கப்பட்டன.

முதலாவது பிள்ளைக்கு யெஸ்ரயேல் (1:4), என்று பெயரிடப்பட்டது, அதன் பொருள் சிதறடிக்கப்படுவார் என்பதாகும். இதன்மூலம் எதிர்காலத்தில் இடம்பெறும் இரண்டு நிகழ்வுகள் முன்னறிவிக்கப்பட்டன.

1. **யெகூ என்று அழைக்கப்படும் வடராஜ்ஜியத்தின் ராஜா ராஜ்யத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவார்**.

யெஸ்ரயேல் இந்த ராஜா அனேகமானவர்களை குத்திக் கொலை செய்தவராகும். அவருடைய குற்றச் செயல்களாவன:

a. வடக்கு ராஜா யோராம், யூதாவின் ராஜா அகசியா இருவரும் ஒரே நாளில் கொல்லப்பட்டார்கள். (2இரா. 9:14-28)

b. யோசபேல் (2இரா. 9:33)

c. ஆகாப்பினது 70 மகன்மார். (2இரா. 10:1-10)

d. ஆகாப்பின் தூரத்துச் சொந்தக்காரனும் அரசியல் நண்பன். (2இரா. 10:11, 17)

e. யூதாவின் இளவரசன். (2இரா. 10:12-14)

f. பாகலின் ஆசாரியர்கள். (2இரா. 10:18-28)

கர்த்தர் நாபோத்தை பழிவாங்கும்படி வேண்டிக்கொண்டார், அவனுடைய குற்றமற்ற இரத்தத்தை ஆகாப் சிந்தினான், (1இரா. 21), யெகூ அதிகமாக இரத்தம் சிந்தினான். இதனாலேயே யெகூவின் நான்கு தலைமுறைமட்டும் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமர்ந்தார்கள். (2இரா. 10:30).

அவர்கள்:

1ம் சந்ததி: யோவாகாஸ்

2ம் சந்ததி: யோவாஸ்

3ம் சந்ததி: யெரொபெயாம்

4ம் சந்ததி: சகரியா

ஓசியாவின் மகன் பிறக்கும்போது யெகூவின் மூன்றாம் பரம்பரை யெரொபெயாம்II ஆட்சியில் இருந்தது. இவ்வாறாக அவர்களுடைய சாம்ராஜ்ஜியம் இல்லாது போயிற்று. இது சகரியாவின் நாட்களில் இடம்பெற்றது. இவர் ஆறுமாதம் ஆட்சியில் இருக்கும்போது கொல்லப்பட்டார். (2இரா. 15:12).

**2. அசீரியர்களின் முற்றுகையின் போது வடராஜ்ஜியம் முழுவதும் சிதறடிக்கப்பட்டது**. (1:5). இரண்டாவது மகள் **லோருகாமா** எனப்பெயரிடப்பட்டாள். (1:6). இதன் அர்த்தம் கிருபை இல்லை என்பதாகும். இத்துடன் யூதாவைக் அசீரியர்களின் முற்றுகையின் போது காத்துக் கொள்ளுவார்

(1:7.)இது 2 ராஜா 19: 35 இல் நடந்து முடிந்தது. மூன்றாவது மகனுக்கு **லோகம்மீ** என்று பெயரிட்டான். (1:9). இந்தப் பெயரின் பொருள் “என் ஜனமல்ல” என்பதாகும்.

**II. ஆழ்ந்த வேதனையிலிருக்கும் கணவனும் அழிந்து கொண்டிருக்கும் மனைவியும் (கர்த்தரும் எப்பிராயீம்.) (4:14).**

**A. எப்பிராயீம் கண்டிக்கப்படல்:**

1. **அவளுடைய அறிவின்மையினாலாகும்**: “என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்” (4:6).

2. **அவளுடைய விக்கிரக ஆராதனையின் நிமித்தம்**.: “என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள், அவர்கள் மலையுச்சியில் பலியிட்டு, மேடுகளிலே கர்வாலி மரங்களின் கீழும், புன்னைமரங்களின் கீழும், அரசமரங்களின் கீழும், அவைகளின் நிழல் நல்லதென்று, தூபங்காட்டுகிறார்கள்; எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான், அவனைப் போகவிடு. ” (4:12, 13, 17).

3. **அவர்களின் துர்நடத்தையினால்**: “எப்பிராயீமை நான் அறிவேன், இஸ்ரவேல் எனக்கு மறைவானதல்ல; எப்பிராயீமே, இப்போது நீ சோரம்போனாயே, இஸ்ரவேல் தீட்டுப்பட்டதே.” (5:3).

**B. எப்பிராயீம் விரும்பப்பட்டான்.:** அவள் துர்நடத்தையிலீடுபட்டபோதும், கர்த்தர் அவளை நேசித்தார். “எப்பிராயீமே, உனக்கு என்ன செய்வேன்? யூதாவே, உனக்கு என்ன செய்வேன்? உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப்போலவும் ஒழிந்துபோகிறது. ” (6:4).

**C. எப்பிராயீம் விபரிக்கப்படல்**.:

1. **அவள் அப்பஞ்சுடுகிறவன் எரிக்கும் அடுப்பைப்போல் இருக்கிறார்கள்** (7:4). அவர்களுடைய இருதயம் இரவில் அசுத்தத்தைச் சிந்திக்கின்றது, காலையில் கொழுந்துவிட்டு எரிகின்றது. என்று கர்த்தர் சொல்லுகிறார்

2. எப்பிராயீம் அந்நிய ஜனங்களோடே கலந்திருக்கிறான்; எப்பிராயீம் திருப்பிப்போடாத அப்பம். (7:8).

3. எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான், அவனுக்குப் புத்தியில்லை எகிப்தியனைக் கூப்பிடுகிறார்கள்; அசீரியனிடத்துக்கும் போகிறார்கள். (7:11).

4. திரும்புகிறார்கள், ஆனாலும் உன்னதமானவரிடத்திற்கு அல்ல; மோசம்போக்குகிற வில்லைப்போலிருக்கிறார்கள் (7:16).

5. அவர்கள் இனிப் புறஜாதிகளுக்குள்ளே விரும்பப்படாத பாத்திரத்தைப்போல் இருப்பார்கள். (8:8).

6. அவர்கள் தனித்துத் திரிகிற காட்டுக் கழுதையைப்போல் அசீரியரண்டைக்குப் போனார்கள்; (8:9).

7. எப்பிராயீமர் வெட்டுண்டுபோனார்கள்; அவர்கள் வேர் உலர்ந்துபோயிற்று, கனிகொடுக்கமாட்டார்கள்; (9:16).

8. இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, (10:1).

9. இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப்போல் அடங்காதிருக்கிறது (4:16).

**D. எப்பிராயீம் செவ்வைப்படுத்தப்பட்டார்: கர்த்தர் வெளிப்படுத்தினார், "**அவர்கள் காற்றை விதைத்து, சூறைக்காற்றை அறுப்பார்கள்;" (8:7). (10:13.)

1. கர்த்தர் அவர்கள்மீது கிருபையைக் காண்பிக்க மாட்டார். (2:4).

2. கிருபை இல்லாமல் அநேகநாட்கள் இருப்பார்கள். (3:4):

a. ஒரு ராஜா: கி.மு. 721இல் ஓசியா இஸ்ரவேலின் கடைசி அரசன் பதவி கவிழ்க்கப்பட்டான். கி.மு.587இல் சிதேக்கியா யூதாவின் கடைசி அரசனும் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். ஆறு நுற்றாண்டுகளுக்குப்பின்பு இஸ்ரவேலின் உண்மையான அரசனும் தள்ளப்பட்டார். (யோவ. 19:15). இவ்வாறாக கர்த்தர் மீண்டும் வரும்வரை துக்கரமான நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். (வெளி. 19:11-16).

b. இளவரசன்: இஸ்ரவேலின் அடுத்த இளவரசன் ஆயிரம்வருட அரசாட்சி வரும்வரை அரசாளமாட்டார். (எசே. 44:3.)

c. பலி: கி.பின் 70 இல் தீத்து ஆலயத்தை அழித்தான், அதனால் பலியிடுதல் இல்லாமற்போயிற்று. உபத்திரப காலத்தில் பலியிடுதல் திரும்பவுமாய் உருவாக்கப்படும், அது அந்திக்கிறிஸ்த்துவினால் நிற்பாட்டப்படும். (தானி. 9:27).

d. திருமணம்: இதன் அர்த்தம் "தூண்கள்" என்பதாகும், அதாவது ஆலயம் என்று அர்த்தப்படும். மீண்டும் ஆலயம் உபத்திரப காலத்தில் கட்டி முடிக்கப்படும். (வெளி. 13), பின்பு அழிக்கப்படும் (சக. 14:2), மீண்டும் ஆயிரம்வருட அரசாட்சியில் உருவாக்கப்படும். (எசேக். 40:48).

e. எப்போத்: இது இஸ்ரவேலின் பிரதான ஆசாரியத்துவத்திற்குரிய குறியீடாகும். இது ஆசாரியன் அணிந்து கொள்ளும் உடையாகும். தேசத்தின் மேசியாவின் கொலையை பிரதான ஆசாரியனே திட்டமிடுவார். (யோவ. 11:49-51; மத். 26:57-68.)

f. தேராபீம். : இவைகள் சிலைகளாகும், மனித உருவத்தில் காணப்படும். (ஆதி. 31:34.)

3. அவர்கள் அசீரியாவிற்குள் அடிமைகளாக உட்புகுவார்கள். (10:6).

4. இஸ்ரவேலர் விழுங்கப்படுகிறார்கள்; அவர்கள் இனிப் புறஜாதிகளுக்குள்ளே விரும்பப்படாத பாத்திரத்தைப்போல் இருப்பார்கள். (8:8; 9:17).

**E. எப்பிராயீம் விடுவிக்கப்படுவான்**. இந்த மகிமையான நிகழ்வு ஒருநாள் இடம் பெற்றாகும். கீழேகூறப்படும் பகுதிகளைக் கவனித்துக் குறித்துக் கொள்ளுங்கள். :

1. **ஓசியா** 2:19, நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்.

2. **ஓசியா** 3:5 பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசி நாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்.

3. **ஓசியா** 6:1-3 கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டு நாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம். அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப்போலவும் நம்மிடத்தில் வருவார்.
4. **ஓசியா** 11:1, 4, 8, 9 இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன். மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தேன். என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன்; எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன்; ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன்; நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர்; ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாகவரேன்.

5. **ஓசியா** 13:10, 14 எனக்கு ராஜாவையும் அதிபதிகளையும் ஏற்படுத்தவேண்டும் என்றாயே; இப்போதும் உன்னுடைய எல்லாப் பட்டணங்களிலும் உன்னை இரட்சிக்கும் ராஜா எங்கே? உன் நியாயாதிபதிகள் எங்கே? அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்.

6. **ஓசியா** 14:4-7 நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களை விட்டு நீங்கிற்று. நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்; லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான். அவன் கிளைகள் ஓங்கிப் படரும், அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப்போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப்போலவும் இருக்கும். அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள்; தானிய விளைச்சலைப்போலச் செழித்து, திராட்சச்செடிகளைப்போலப் படருவார்கள்; அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப்போல இருக்கும்.

| **ஓசியா** |
| --- |
| **ஆழ்ந்த வேதனையிலிருக்கும் கணவனும் அழிந்து கொண்டிருக்கும் மனைவியும்**.<br><br>**ஓசியாவும், கோமாரும்**<br>**ஓசியா 1-3** |
| **அவனுடைய மனைவி சோரம் போனவள்**.<br>கோமார் சோரம் போனவள். அவனுடைய மனைவி திருமணம் முடிப்பதற்கு முன்பாகவே வேசியாக இருந்தவள், திருமணம் முடித்தபின்பு விபச்சாரியாக இருந்தவள்<br>ஓசியா தன்னுடைய திருமணத்தைக் காப்பாற்ற முயற்சித்தார். இவ்வாறாக :<br>1. உலகசந்தைக்கு கோமார் வருவதைத் தடுத்தல்.<br>2. சந்தையிலிருந்து அவளை வாங்கிக் கொள்ளல்.<br>3. சொந்த மகனைக் கொண்டே தாயை நியாயப்படுத்தல். . |
| **அவருடைய பிள்ளைகள் —Ill பெயரிடப்படல்** |

| பெயர் | கருத்து |
|---|---|
| **யெஸ்ரயேல்** | **"சிதறடிக்கப்படுவார்கள்"** இது இரண்டுவியங்களைக் கூறுகின்றது:<br>1. யெகூவின் பிள்ளைகள் சிதறடிக்கப்படல்<br>2. வடராஜ்ஜியம் சிதறடிக்கப்படல். |
| லோ-ருகா-மா | "கிருபையே இல்லை" |
| லோ-கம்மீ | "என்னுடைய ஜனம் அல்ல" |

**எப்பிரகாயீம் கண்டிக்கப்படல்**

1. அவளுடைய அறிவின்மையால் (4:6)
2. அவருடைய விக்கிராதனையினால் (4:12, 13, 17)
3. அவளுடைய துர்நடத்தையினால் (5:3)

**எப்பிராயீம் விரும்பப்பட்டவன்**. **(6:4)**

இவையாவற்றின் மத்தியிலும் கர்த்தர் இன்னும் அவளை நேசிக்கிறார்

**எப்பிராயீம் விபரிக்கப்படல்**

1. இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப்போல் அடங்காதிருக்கிறது (4:16)
2. அப்பஞ்சுடுகிறவன் எரிக்கும் அடுப்பைப்போல் இருக்கிறார்கள் (7:4)
3. எப்பிராயீம் திருப்பிப்போடாத அப்பம். (7:8)
4. எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான் (7:11)
5. மோசம்போக்குகிற வில்லைப்போலிருக்கிறார்கள்; (7:16)
6. விரும்பப்படாத பாத்திரத்தைப்போல் இருப்பார்கள். (8:8)
7. அவர்கள் தனித்துத் திரிகிற காட்டுக் கழுதையைப்போல் இருக்கிறார்கள். (8:9)
8. அவர்கள் வேர் உலர்ந்துபோயிற்று (9:16)
9. இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி (10:1)

**எப்பிராயீம் ஒழுங்கு படுத்தப்பட்டார்கள்**.**(3:4)**

இவர்கள் அனேக நரட்களாக :

1. ஒரு ராஜா இல்லாமல் இருக்கிறார்கள்
2. ஒரு அரசன் இல்லாமல் இருக்கிறார்கள்.
3. ஒரு பலியில்மல் இருக்கிறார்கள்.
4. ஆசாரியனுக்குரிய ஆடையில்லாமல் இருக்கிறார்கள்.
5.. செராபீம் இல்லாமல் இருக்கிறார்கள்.

**எப்பிராயீம் விடுதலையாக்கப்படுவான்**.

1. 2:19, 23
2. 3:5
3. 6:1-3
4. 11:1, 4, 8, 9
5. 13:10, 14
6. 14:4-7

# 2 . யோவேல்.(835-796 கி.மு.)

**அறிமுகம்:**

1. ஒபதியாவைப் போல, யோவேல் தீர்க்கதரிசியைப்பற்றியும் ஒன்றும் தெரியாதுள்ளது. இவர் பெத்துவேலின் மகனாகும், அவருடைய பெயரின் கருத்து **யேகோவா கர்த்தராயிருக்கின்றார்**.

2. யோவேலின் ஊழியக்காலத்தில், யூதாதேசம் பெரிதான கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டது, இதைப்போல முன்பு பாதிக்கப்படவில்லை.

3. வரப்போகும் மகா உபத்திரப காலத்தில் நடைபெறவுள்ள பெரிய கொள்ளைநோக்குச் சரியாக யோவேலின் இந்த தெய்வீக வெளிப்பாடு அமைந்துள்ளது.

4. யோவேல் பெத்தகோஸ்தே தீர்க்கதரிசி என அறிமுகமாகின்றார், ஏனெனில் பரிசுத்த ஆவியைப்பற்றி அவர்கூறிய விடயங்கள்யாவும், சீமோன் பேதுருவினால் பெந்தகோஸ்தே நாளில் கூறப்பட்டுள்ளது.

**I. இஸ்ரவேலும் கர்த்தரின் நியாயத் தீர்ப்பும். : கடந்தகாலத்தின் ஒரு மீள்பார்வை. (1:1-20).**

**A. வெட்டுக்கிழிகளினால் ஏற்படுத்தப்பட்ட நியாயத்தீர்ப்பு மிகவும் பயங்கரமானது**. பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது; பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது. (1:4). வெட்டுக்கிழிகள் கர்த்தரின் நியாயத்தீர்ப்பாக அனுபப்பட்டுள்ளது. (உபா. 28:38-42; யாத். 10:12-15; 1இரா. 8:37; வெளி. 9:1-12.)

B. **வெட்டுக்கிளியின் நியாயத்தீர்ப்பிற்கான் பெயர். அந்த நாளினிமித்தம் ஐயோ!**

" கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது சங்காரம்போலச் சர்வவல்லவரிடத்திலிருந்து வருகிறது. (1:15). இது **கர்த்தருடைய நாள்** என்று சிறிய தீர்க்கதரிசிகளால் கூறப்படுகின்றது. இதுவேதாகமத்தில் பல பகுதிகளில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கூறப்பட்டுள்ளது. (எசா. 2:12; 13:6, 9; எசே. 13:5; 30:3; யோவேல் 2:1, 11, 31; 3:14; ஆமோஸ் 5:18, 20; ஒபதி. 1:15; செப். 1:7, 14; சகரி 14:1; மல். 4:5; அப் 2:20; 1தெச. 5:2; 2தெச. 2:2; 2பேது. 3:10.) இந்தச் சொற்தொடரின் கருத்து, ஏழுவருட உபத்திரப காலத்தைப்பற்றியதாகும் என நம்பப்படுகின்றது. ஆனால் இங்கு யோவேல்1:15ல், வரப்போகும் நியாயத்தீர்ப்பைபற்றியதாக இருக்கின்றது.

**II. இஸ்ரவேலும் கர்த்தரின் நியாயத் தீர்ப்பும்.: எதிர்காலத்திற்கான ஒரு முன்பார்வை (2:1–3:21).**

**A. இந்த முற்றுகையின் அடையாளம். .**

எந்த தேசத்தைப்பற்றி அல்லது எதிரியைப்பற்றி இந்த அதிகாரம் 2இலும் 3இலும் கூறப்படுகின்றது?

பொதுவாகப பலவற்றைப்பற்றி இவர் குறிப்பிடலாம், கடைசியானதைப்பற்றிக் குறிப்பிட்டுக்கூறுகின்றார்.

1. கி.மு.701ல் அசீரியர்களின் முற்றுகை சனகெரிப் அந்த முற்றுகையை வழிநடத்தினான், (2இரா. 19). யோவேல்2:20.

2. கி.மு.586ல் நேபுகாத்நேச்சாரால் பாபிலோன் முற்றுகையிடப்பட்டது. (2இரா. 24).

3. உபத்திரப காலத்தின் நடுப்பகுதியில் **கோக்** (**ருஷ்சியா**) தேசத்தால் முற்றுகையிடப்படும். (எசே. 38, 39).

4. அர்மகதோன் யுத்தத்தின்போது அந்திக்கிறிஸ்துவினால் இறுதி முற்றுகை மேற் கொள்ளப்படும். (வெளி. 16:13-16; 19:11-21).

**B. முற்றுகையின்போது ஒன்றுசேரும் இடம்**. நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி, அங்கு அவர்களை நியாயம் தீர்ப்பேன். (3:2). (3:9-14.)

குறிப்பு: யுத்தமானது, மிகவும் பெரியது, மிகவும் துணிகரமானது, அதிகம் இரத்தம் சிந்துதல் ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது, இது மெகிதோன் பட்டணம் தொடங்கி வடக்குப்பக்கமாகத் தொடங்கி, தொடரும். (சகரி. 12:11; வெளி. 16:16), ஏதோம் தொடங்கி தெற்குப்பக்கமாகவும (எசா. 34:5, 6; 63:1), 200மைல் தூரத்திற்கு இடம் பெறும். இது மத்தியதரைக் கடலிலிருந்து கிழக்குப்பக்கமாக மோவாப் பர்வதத்திற்கும் மேற்குப் பக்கமாகவும் 100மைல் தூரத்திற்கு இடம் பெறும். யுத்தம் நடைபெறும் இடம் இருபதாயிரம் சதுர மைல்களுக்கு மேலாக இருக்கும். முக்கிய யுத்தம் நடைபெறும் இடமாக எருசலேமின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள யோசபாத் பள்ளத்தாக்கு அமையும், இது பரிசுத்த நகரத்திற்கும் ஒலிவ மலைக்கும் இடைப்பட்ட பகுதியாக அமையும். இது கிதிரோன் பள்ளத்தாக்கு எனவும் அழைக்கப்படும்.

**C. இந்த தாக்குதல் இரண்டு நோக்கங்களைக் கொண்டதாகும்**.

1. அந்திக்கிறிஸ்த்துவின் நோக்கம் —இஸ்ரவேலர்களையும் அவர்களுடைய தேவனையும் அழித்தலாகும். (சங். 2.)

2. கர்த்தருடைய நோக்கம் —அந்திக்கிறிஸ்த்துவையும் அவனுடை தோழர்களையும் அழிப்பதாகும்.

**D. இந்த தாக்குதலின் பிரதிபலன்.**

சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும், நட்சத்திரங்கள் ஒளிமழுங்கும். கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார். (யோவேல்3:15, 16). (வெளி. 19:11-21.)

**E. இந்த தாக்குதலின் பின்பு ஏற்பட்ட ஆசீர்வாம் தகர்க்கப்பட்டது**.

1. அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் (2:28-32.) இந்த நிகழ்வு மோசேயின் ஆசையைத் திருப்திப்படுத்துவதாக அமைந்துள்ளது. (எண். 11:29.) பேதுருவும் யோவேல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட இந்த நிகழ்வை பெந்தகோஸ்தே நாள் என்று குறிப்பிட்டுள்ளார். (அப்2:16-21.)

2. எல்லா மனித தேவைகளும் அங்கு சந்திக்கப்படும். (2:21-27).

3. இங்கு இயற்கைகள் யாவும் மறுரூபமடையும். (3:18).

4. கிறிஸ்த்துவே சீயோனில் ஆட்சி செய்வார். (3:21).

பழைய சுவர்களால் சூழப்பட்ட நகரத்தின் தென்மேற்குப் பகுதியில் உயரமான சீயோன் பர்வதம் அமைந்துள்ளது. இது பழைய எருசலேமின் மதில்களுக்குள் அமைந்த இடமாக முன்பு இருந்தது. இது இஸ்ரவேலின் பரிசுத்த நகரமாக இருந்தது. இங்கு தாவீதின் கல்லறையும் இருக்கின்றது. இங்குதான் இயேசு தன்னுடைய சீடர்களுடன் இராப்போசனம் அருந்திய இடமும் இருக்கின்றது. (மாற். 14:12-16; லூக். 22:7-13). இதுவே பெந்தகோஸ்தே நாளில் சீடர்கள்மேல் பரிசுத்த ஆவி இறங்கிய முக்கிய இடமாகவும் இருக்கின்றது. (அப்1:12-14; 2:1-4).

| யோவேல் |
|---|
| எதிர்காலத்தில் நிகழப்போகும் நிகழ்வுக்கு ஒப்பான ஒரு நிகழ்வை விளக்குவதன் மூலம் தீர்க்கதரிசி இதனை விளக்குகின்றார். |
| **ஒப்பான நிகழ்வுகள்.—யோவேல் 1**<br>**இஸ்ரவேலின் நிகழும் தற்போதைய வெட்டுக்கிழளிகளின் தாக்கம்**. |
| **தன்மை:** இஸ்ரவேலர்களின் நிலங்கள்மீது வெட்டுக்கிளிகளின் பயங்கரத் தாக்குதல்கள். (1:4, 12)<br>**காரணம்:** இஸ்ரவேலர்களின் பாவம். (1:5)<br>**முன்வைக்கப்பட்ட சிகிச்சை:** பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்; மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.மனம்திரும்புங்கள். (1:14) |
| **நிகழப்போகும் நிகழ்வுகள்.—யோவேல் 2-3**<br>**எதிர்காலத்தில் வரப்போகும் எதிரியின் தாக்குல் முன்பார்வை** |
| **அடையாளம் :** இரண்டுவிதமானது :<br>1. உத்திரப காலத்தின் நடுப்பகுதியில்கோக் தேசத்தின் வழிநடத்தலில் இடம்பெறும் தாக்குதல். (எசே38-39)<br>2. உபத்திரபகாலத்தின் முடிவில் அந்திக்கிறிஸ்துவினால் வழிநடத்தப்படும் இறுதித் தாக்குதல். (வெளி. 16:13-16; 19:11-21)<br>**இடம் :** யோசபாத்தின் பள்ளத்தாக்கு. (3:2, 9-14)<br>**நோக்கம். :** |

1. சாத்தானின் நோக்கம் :- இஸ்ரவேலர்களையும் அவர்களுடைய தேவனையும் அழித்தல். (சங்.2)
2. கர்த்தரின் நோக்கம் :- சாத்தானையும் அவர்களுடைய கூட்டாளிகளையும் அழித்தல். (வெளி. 16:16)

**விளைவு :**

1. இஸ்ரவேலர்களின் இரட்சிப்பு (3:15-21)
2. இஸ்ரவேலர்கள் பரிசுத்தமாக்கப்படல். (2:21-32)


# 3.ஆமோஸ் கி.மு 801- கி.மு 773

இது மிகுந்த செழிப்புள்ள காலமாக இருந்தது. இஸ்ரவேலின் எபிரேய ராஜ்ஜியமாகிய வடக்கு ராஜ்ஜியத்தின் ராஜாவாக யெரோபெயாம் II இருந்தார். இஸ்ரவேலின் அயல் தேசங்களுடன் போர் செய்து வெற்றிகண்டுள்ளார். அத்துடன் வியாபாரப் பாதைகளையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார், அதனால் செல்வம் கொட்டியது. செழிப்பான நிலம் இருந்தபடியால் நல்ல பயிர்கள் பயிர்செய்யப்பட்டன. இது ஒரு பொற்காலமாக இருந்தது.

பொதுக்கட்டிடங்கள் கட்டப்பட்டன், பெத்தேல், தான் என்னும் ஆராதனை நிலையங்களைச் சுற்றியும் பல ஆடம்பரக் கட்டிடங்கள் கட்டப்பட்டன். ஆனால் மக்கள் மத்தியில் துக்கங்களும் குடிகொண்டிருந்தன. பணம்படைத்தவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை மறந்து வாழ்ந்தார்கள், அத்துடன் உடன் ஜீவிக்கும் யூதர்களையும் மறந்து அவர்களின் நிலங்களில் பெரிய சொந்த பண்ணைகளை அமைத்தார்கள். வியாபாரிகளால் வறுமைப்பட்டோர் ஒடுக்கப் பட்டார்கள், அவர்கள் முறையற்ற நிறுவைகளைப் பயன்படுத்தினார்கள், நீதி இல்லாது போயிற்று. பார்லியுடன் தேவையற்ற கலப்படங்களைக் கலந்து விற்றார்கள். அனேக ஜனங்கள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் அடிமைத்தனத்திற்கு விற்கும்படி வற்புறுத்தப்பட்டார்கள். பணக்காரர்களின் மனைவிமார் அதிக ஆடம்பரமாகத் திரிந்தார்கள். இந்த அழிந்து கொண்டிருக்கும் சமூகத்திற்காக குரல் கொடுப்பவர் ஒருவரும் இல்லை. இவ்வாறான சமூகத்திற்கு எதிராக ஆமோஸ் குரல் கொடுக்கின்றார். இவர் ஒரு விவசாயி, யூதாவுக்கு அண்மையில் ஜீவிப்பவர். இவர் எதிர்பாராதவிதமாக கர்த்தரால் அழைக்கப்பட்டு இஸ்ரவேல் தேசத்திற்குச் சென்று, அவர்களின் நீதியற்றதன்மைக்கும் கடவுளைத் தேடாமல் இருப்பதற்கும் எதிராக செயற்படும்படி அழைக்கப்பட்டார். இவர்களின் ஒவ்வொரு பாவத்தைக்குறித்தும் கடுமையான மொழியில், பயமின்றி அநீதிக்கு எதிராக நியாயத்தீர்ப்புக் கிடைக்கவேண்டும் என்று அறைகூவினார். ஆமோஸ் பழைய ஏற்பாட்டில் காணப்படும் புத்தகங்களில் சிறந்த புத்தகமாகும். ஒவ்வொரு வயதினருக்கும் நல்லதையே செய்யும்படி இவர் கூறுகின்றார். அத்துடன் வறுமைப்பட்டவர்களை கனவீனப்படுத்தும் எந்த சமூகத்துக்கு எதிராகவும் பேசினார்.

| ஆமோஸ் | |
|---|---|
| **முக்கியமான ஜனங்கள்** | |
| **ஆமோஸ்** | கர்த்தரின் கோபத்தை வெளிப்படுத்தும் மனிதர். இஸ்ரவேலில் அநீதியை எதிர்த்தார். ஒவ்வொரு வயதிலுள்ள ஒடுக்கப்பட்டவர்களுக்கும், வறுமைப்பட்டவர்களுக்கும் கர்த்தருடைய அக்கறையைக் கூறிவந்தார். |
| **அமத்சியா** | பெத்தேலின் பிரதான ஆசாரியர், அவர் ஆமோசின் செய்திகளை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆமோசை இஸ்ரவேலை விட்டு அகற்ற முயற்சித்தார். |
| **முக்கிய கட்டுரைப் பொருள்** | |
| **வறுமைப்பட்டவர்களின் அவலம்**. இஸ்ரவேலர்கள் பொருளாதாரமுறையில் ஒடுக்கப்படுவதைக் கர்த்தர் அவதானித்துக் கொண்டே இருந்தார். (1:6, 9; 3:9-10; 4:1; 5:12; 8:4-6). | |
| **நீதித்துறையில் இலஞ்ச ஊழல்**. பணக்காரர்களுக்கு நியாயத்தீர்ப்புக்களில் சலுகைகள் காட்டப்பட்டன. (2:6-8; 3:10) அநீதியானவையும், வஞ்சனையும் ஏமாற்றமும் கவனிப்பாரற்று விடப்பட்டன. (5:7-24; 8:5-6). | |
| **சுரூபவணக்கம் .** பெத்தேலிலும், தான் இலும் இடம்பெறும் ஆராதனைகள் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின்படி இடம்பெறுவதில்லை. (உபா. 12:1-19) விக்கிரக ஆராதனைக்கு ஒப்பாக இருந்தது. (ஆமோஸ்5:26; 8:14). இந்த தவறான ஆராதனைமுறைகள் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. | |

**இடம்பெற்ற இடம்**:- இஸ்ரவேலின் வடராஜ்ஜியத்தில் ஆமோசின் ஊழியம் இடம்பெற்றது. பணக்காரர்களுடைய வாழ்க்கை புசிப்பும் குடிப்புமாக இருந்ததை ஆமோஸ் சுட்டிக் காட்டுகிறார்.(4:1; 6:4-6).



**சுருக்கம்**.

I. நியாயத்தீர்ப்புக்கள். 1-2

II. குற்றம்சாட்டுதல். 3-6

III. காட்சிகள். 7-9

கட்டுரைப் பொருளும். (1:1-2)

தேசங்கள் மீதான  நியாயத்தீர்ப்பு (1:3-2:16)

A. சிரியா (1:3-5)

B. பெலஸ்தியா (1:6-8)

C. தீரு (1:9-10)

D. ஏதோம் (1:11-12)

E. அம்மோன். (1:13-15)

F. மோவாப் (2:1-3)

G. யூதா (2:4-5)

H. இஸ்ரவேல் (2:6-16)

III. இஸ்ரவேல் மீதான குற்றச்சாட்டுக்கள். (3:1-6:14)

A. நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டது (3:1-8)

B. சமாரியாவின் அழிவு (3:9-15)

C. சமாரியா கர்த்தரின் எச்சரிப்புக்கு கவனம் செலுத்த தவறியது. (4:1-13)

D. சமாரியா பொய்யான மதங்களைப் பின்பற்றல். (5:1-27)

E. வறியவர்களின் துன்பங்கள் குறித்து சமாரியா அக்கறைகொள்ளாதிருத்தல். (6:1-14)

IV. நியாயத்தீர்ப்பின் பார்வை (7:1-9:15)

A. வெட்டுக்கிழிகளின் கூட்டம். (7:1-3)

B. காட்டுத் தீ (7:4-6)

C. தூக்குநூல். (7:7-9)

D. ஒரு நிகழ்வு: பெத்தேலில் ஆமோசின் எதிர்ப்பு (7:10-17)

E. கோடைகாலத்துப் பழம் (8:1-14)

F. பலிபீடத்தின்நெருப்பின் அருகில் கர்த்தர். (9:1-10)

G. எதிர்காலத்தில் காணப்படும் கர்த்தருடைய நீதியான ராஜ்ஜியம். (9:11

## **ஆமோஸ் 1ம்-2ம்** அதிகாரங்கள்.

சுருக்கம்.

ஆமோஸ் தன்னைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துகின்றார். அத்துடன் தன்னுடைய ஊழியத்தின் சரித்திரப் பின்னணியையும் கூறுகின்றார். (1:1-2). எட்டுத் தேசங்களுக்கான கர்த்தர் செய்யப் போகும் நியாயத்தீர்ப்புக்களையும் கூறியிருந்தார். (1:3-2:16).

கர்த்தர் செய்யப் போகும் ஒவ்வொரு நியாயத் தீர்ப்பையும் அதன் நிச்சயத்தையும் அறிவித்தார். அவைகள் விஷேசித்த ஒழுங்கில் அமைக்கப்பட்டிருந்தன. ஆமோஸ் மிகத் தொலைவிலுள்ள தேசத்திலிருந்தே ஆரம்பித்தார், பின்பு வலப்பக்கமாக இஸ்ரவேலைச் சுற்றி கூறிவந்தார். ஒன்றன்பின் ஒன்றாக தீர்க்கதரிசி எதிரிகளைக்குறித்துக் கூறும்போது அவதானித்துக் கேட்பார்கள். நியாயத்தீர்ப்பு வேற்றுமையின்றி கூறப்பட்டது. எங்கு பாவம் காணப்பட்டாலும் அது கண்டிக்கப்படவேண்டும்.

திறவு கோல் வசனம். 2:6-8: பாவம் கர்த்தருடைய கோபத்தை அதிகரிக்கும்.

**"ஆமோஸ்" (1:1).** தெக்கோவா ஊர் மேய்ப்பருக்குள் இருந்த ஆமோஸ், யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களிலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய எரொபெ யாமின் நாட்களிலும், பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்துக்கு முன்னே, இஸ்ரவேலைக் குறித்துத் தரிசனங்கண்டு சொன்ன வார்த்தைகள்.

**நிலநடுக்கம் (1:2).** நிலநடுக்கத்திற்கு இரண்டுவருடங்களுக்கு முன்பு தன்னுடைய ஊழியம் ஆரம்பமானது என்று ஆமோஸ் கூறியுள்ளார். ஏன்? தீர்க்கதரிசியின் அழிவிற்கான செய்திசெழிப்பாக இருந்த இஸ்ரவேலைக் கலக்கியது. பரம்பரைக்கு நல்லதல்ல. பின்பு ஆமோசின் செய்தி எதிரொலிச்சுக் கொண்டே இருந்தன. ஒரு பயங்கரமான நிலநடுக்கம் பூமியைத் தாக்கியது, உலகத்தில் யாவும் நிலையற்றது என்பதை தெய்வம் உணர்த்தியது. கர்த்தரிலும் கர்த்தருடைய வழியிலும் மட்டுமே பாதுகாப்பைக் கண்டுகொள்ள முடியும்.

**அந்நிய தேசங்கள்**. **(1:3-2:3).** கர்த்தருடைய பிள்ளைகளைத் தவறாக, விரோதமாக நடத்தியபடியால் நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது.

**"மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும்,"** (1:3). இவ்வாறான பதங்கள் ஞானப்புத்தகங்களிலும் காணப்படுகின்றன. (நீதி. 6:16) தீர்க்கதரிசனப்புத்தகம் (மீகா 5:5-6). இது அனேக பாவங்களின் நிமித்தம் கர்த்தர் கட்டாயம் நியாயம் தீர்ப்பார்.

**யூதாவின் பாவங்கள் (2:4-5).** யூதாவின் பாவங்கள் பொதுவான முறையில் அடையாளப் படுத்தப்பட்டன. : தெற்கு ராஜ்ஜியத்தின் மக்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை புறந்த ள்ளி பொய்யான தெய்வங்களை பின்பற்றினார்கள். இஸ்ரவேலர்களின் ஒவ்வொரு பாவங்க ளையும் துல்லியமாக ஆமோஸ் கூறினார். மற்றவர்களின் பாவங்களை அறிவதற்கு நாம் எவ்வளவு ஆவலாக இருப்போம். ஆனால் குறிப்பாக நாம் என்ன பாவம் செய்கிறோம் என்பதை

தெரிந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.
**நீதிமானை விற்கின்றார்கள்**. **(2:6).** அவர்கள் நீதிமானைப் பணத்துக்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப்போட்டார்களே.

**நீதியைப் புரட்டுகின்றார்கள்**. **(2:7a).** அவர்கள் தரித்திரருடைய தலையின்மேல் மண்ணைவாரி இறைத்து, சிறுமையானவர்களின் வழியைப் புரட்டுகிறார்கள்;

**ஒரே பெண்ணைப் பயன்படுத்துகின்றார்கள்**. **(2:7b).** என் பரிசுத்த நாமத்தைக் குலைச் சலாக்கும்படிக்கு மகனும் தகப்பனும் ஒரு பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார்கள்.

**ஆமோஸ் 3ம்-4ம் அதிகாரங்கள் சுருக்கம்**

எபிரேய மக்கள் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இஸ்ரவேலர்களின் குற்றச்சாட்டுக்கள் இஸ்ரவேலர்களின் குற்றச்சாட்டுக்கள் பார்க்கப்பட்டன.

இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின முழுக்குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனத்தைக் கேளுங்கள். பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களைமாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன். (3:1-2).

ஆமோஸ் பலவிடயங்களை சோடிசோடியாக கூறுகின்றார். (வ. 3-6), கர்த்தர் தன்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு பாவத்தின் நிமித்தம் தேசம் எதிரிகளால் பாழாக்கப்படும் என்று அறிவிக்கின்றார். (வச. 7-12). கர்ததர் இஸ்ரவேலின் பாவங்களுக்காக அவளைத் தண்டிப்பார், (வ. 13-15). தக்கத்தில் இருக்கும் பெண்கள் யாவரும் தங்களுக்கு எதிரே காணப்படும் வாசல்வழியாய் புறுபுபட்டுச் செல்வார்கள். (4:1-3). இஸ்ரவேலர்களின் ஆராதனைகள் கர்த்தருக்குப் பிரியமில்லாது இருந்தது. (வச4-5). இதற்கு எதிராக கர்த்தர் பஞ்சத்தை உருவாக்கினார் (வ. 6), வறட்சியைக் கட்டளையிட்டார். (வச. 7-8), தாவரங்கள் பலன் கொடாமற் போனது (வ. 9), கொள்ளை நோய்கள் வந்தன (வச. 10-11). கர்த்தருடைய எச்சரிப்பை புறக்கணித்தபடியால், அவர்கள் கர்த்தரைச் சந்திப்பதற்கு ஆயத்தப்படல் வேண்டும், அவர் நியாயத்தீர்ப்புக்காக வருகின்றார். (வச. 12-13).

திறவு கோல்வசனம். 3:2: பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களைமாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்.

**சொந்த கவனம்** :- கர்த்தர் நியாயத்தீர்ப்புச்செய்வதற்கு முன் எச்சரிக்கையை அனுப்புவார். அதனால் கர்த்தரைக் கிட்டிச் சேருங்கள்.

**"தெரிவு செய்யப்பட்டோர்" (3:2).** இதற்கான எபிரேயச் சொல் *yada',* என்பதாகும். இதன் அர்த்தம் அறியப்பட்டவர் என்பதாகும். அதாவதுநெருங்கிய உறவுவைப்பவர் என்று அர்த்தமாகும். **காரணமும் செயற்பாடும் (3:3-6).** ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கும்

என்பது ஆமோசின் விளக்கமாகும். இருவர் ஒருமித்து நடக்கின்றார்கள் என்றார், அவர்கள் அதற்காக ஒருமனப்பட்டுள்ளார்கள் என்று அர்த்தமாகும். வலையில் பறவை சிக்கியுள்ளது என்றால், அதன் அர்த்தம் வலையை யாரோ விரித்துள்ளார்கள் என்பதாகும். கர்த்தரால் அழிவு வந்துள்ளது என்றால் அதற்கான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளது என்பதே காரணமாகும். **அழிவு (3:6).** பாவத்திற்கு எதிராக கர்த்தர் நிச்சயம் நியாயத்தீர்ப்பைக் கட்டளையிடுவார். அதுதேசங்களில் பெரும் அழிவுகளையும் கொண்டுவரலாம். அழிவுக்கு முன்பதாக கர்த்தர் தன்னுடைய ஊழியக்காரர்கள் மூலமாக எச்சரிப்புக்களை அனுப்பிக் கொண்டேயிருப்பார், அதை உணர்ந்து பாவத்தைவிட்டு மனம் திரும்பினால் கர்த்தர் அழிவுகளை நிற்பாட்டுவார். **கர்த்தருடைய சத்தம்**.**(3:7-8).** சிங்கத்தின் உறுமல்போல கர்த்தருடைய சத்தம் அவரால் தெரிவு செய்யப்பட்ட தீர்க்கதரிசிகளுக்கூடாகப் புறப்பட்டுவருகின்றது. கர்த்தர் நியாய்தீர்ப்பை இரகசிய மாகவைத்துக் கொள்ளமாட்டார், ஆனால் தன்னுடைய திட்டங்களை தெளிவாக வெளிப்படுத் துவார். கர்த்தருடைய வார்த்தைக்குக் கவனம் செலுத்தாவர்கள் மீது தயவு காட்டப்படவே மாட்டாது.

**சரியானதைச்செய்வது எப்படி என்று கற்றுக் கொள்ளுதல்**. **(3:10).** இஸ்ரவேலர்களுடைய கோட்டைகள் அந்த தேசத்தின் மக்களுக்குரிய மக்களின் பாதுகாப்பு நிலையமாக எண்ணப் படவில்லை, ஆனால் அது ஒரு அரணாகக் காணப்படும் செல்வங்கள் யாவும் பாதுகாக்கப்படும். அங்கு மக்களின் செல்வங்கள் யாவும் பாதுகாக்கப்படும். யாரும் அவற்றைக் கொள்ளையடிக்க முடியாது.

**"சிங்கத்தின் வாய்**.**" (3:12**). ஒருமிருகம் செம்மறியாட்டை அடித்து சாப்பிடுமாயிருந்தால், அதனுடைய மிகுதியன பகுதிகளை மேய்யப்பன் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுவார். மேய் ப்பன் இதனைக் களவு செய்துவிடவில்லை என்பதை காண்பிப்பதறகாகவாகும். (யாத். 22:13). இதைப் போலவே இஸ்ரவேலை முற்றுகையிடும் எதிரியிடமிருந்து ஒருசிலர் பாதுகாப்பாக மீண்டுவருவார்கள்.

**பலிபீடமும் கோடைகால வீடுகளும்**. **(3:14-15).** இஸ்ரவேலர்களின் குற்றங்களுக்கான அடையாளங்கள் இரண்டு இணைந்து காணப்படுகின்றன: பொய்யான மதமும், வறுமைப்பட்ட வர்களின் செலவுகளில் பணக்காரவர்க்கம் உருவாக்கப்படல். கோடைகாலத்திற்கும், குளிர்கால த்திற்கும் இரண்டு மாளிகைகளை பணக்காரர் வைத்திருக்கின்றார்கள். அதேநேரம் வறுமைப் பட்டவர்கள் ஒன்றும் இல்லாமல் தெருவோரங்களில் வாழ்ந்தார்கள்.

**"பாசானின் மாடுகளே" (4:1).** மலைகளிலுள்ள நிலப்பரப்பு மாடுவளர்ப்புக்களுக்கு மிகவும் சிறந்ததாகும். இந்த மாடுகளைப் பேலவே அந்த இடத்துப் பெண்களை நன்றாக போஷிக் கப்பட்டவர்களாக ஆமோஸ் ஒப்பிட்டுப்பார்க்கின்றார். ஆனால் வறுமைப்பட்ட பெண்கள் முற்றுமுழுவதுமாக வேறுபட்டிருந்தார்கள்.

**எச்சரிப்புக்கள் புறக்கணிக்கப்பட்டன**. **(4:6-11).** சங் 32:9. வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்." இஸ்ரவேல் இதைவிட மோசமாக இருந்தது. கர்த்தரு டைய பிள்ளைகள் தங்களை கர்த்தர் வழிநடத்துவதை விரும்பவில்லை, சில சிறிய எச்சரிப்பைக் கொடுத்தும் அவர்கள் விரும்பவில்லை.

**ஆமோஸ் 5ம்-6ம் அதிகாரங்கள்**.

சுருக்கம்.

ஆமோஸ் வரப்போகும் நியாயத்தீர்ப்பின் நிச்சயத்தை உணர்ந்து இஸ்ரவேல் மீது புலம்பல் பாடத் தொடங்கினார். துக்ககரமான கவிதை கிட்டத்து உறவினர் மரித்ததினால் ஏற்படும் துன்பத்திற்கான பாடலாக அமைந்தது. (5:1-3).

அப்படியிருந்தும் ஒரு மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் எனபதற்கான அழைப்பை ஆமோஸ் விடுக்கின்றார். வடக்கு ராஜ்ஜியத்தின் குற்றங்கள் யாவும் ஒழுங்கு படுத்தப்பட்டு சுட்டிக் காட்டப்படுகின்றது. இதன்முடிவில் இஸ்ரவேலர்கள் தன்னுடைய எச்சரிப்புக்களுக்கு செவி மடுக்கவில்லை என்பதை கர்த்தர் உணர்ந்து கொண்டார். (வ. 4-17). இதன்பின்பு கர்த்தரின் செயற்பாடுகளினால், தன்னுடைய பிள்ளைகளுக்கு இருண்ட காலமாக இருக்கும். (வ. 18-20).

கர்த்தர் அர்த்தமற்ற ஆராதனையை வெறுக்கின்றார், அந்தஜனங்கள் பாரம்பரியத்தை விரும்பு கின்றார்கள், ஆனால் நன்நடத்தையையும், நியாயத்தீர்ப்பையும் வெறுக்கின்றார்கள். (வ. 21-27). அவர்களின் அளவுக்கதிகமான ஆடம்பர வாழ்க்கை அவர்களுக்கு எதிராகச் சாட்சி கொடுக்கின் றன். (6:1-7), ஆனால் அவர்களின் பெருமை கர்த்தரின் எதிரிகளால் உடைக்கப்படும், கர்த்தர் இதனை நிகழச்செய்வார். (வச8-14). ஒடுக்கிறவர்கள் ஒடுக்கப்படுவார்கள், அத்தோடு அவர்களு க்கான அடைக்கலப்பட்டணம் கர்த்தருக்குள் எங்கும் கிடையாது.

திறவுகோல் வசனம். 5:24: நீதிக்கான மாற்றீடு எதுவும் இல்லை.

**ஆசீர்வாதம் அற்றுப் போகும்**. **(5:3).** ஆபிரகாம் பரம்பரையை ஆசீர்வதிப்பதாக கர்த்தர் கூறினார், ஆனால் அந்த ஆசீர்வாதம் கீழ்ப்படிவுள்ள பரம்பரையினரால் மட்டுமே அனுபவிக்கமுடியும். பாவம் ஆசீர்வாதங்களை அற்றுப் போகப்பண்ணும்: பத்துமடங்கு ஆசீர்வதிப்பதங்குப்பதிலாக பத்துமடங்கு குறைவடையும்.

**நீதியைச் செய்யுங்கள்**. மனிதவர்க்கத்திற்கு உரிமையும், கடமையும் ஆகிய இரண்டும் நீதிசெய்வதற்காக கொடுக்கப்பட்டுள்ளன. நன்னத்தைக்கும் பண்பாக நடப்பதற்கும் கர்த்தரே காரணராக இருக்கின்றார், இவைகளே உரிமையையும் கடமையையும் வரையறை செய்கின்றன. கர்த்தர் தன்னுடைய இயல்புகளைக் கர்த்தருக்கு நியாயப்பிரமாணத்தில் கொடுத்தார். நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுகிறவர்கள் மற்றவர்களுடன் பழகும் போதும் நீதியைச் செய்கிறார்கள். கர்த்தரோடு இருப்பவர்கள் மற்றவர்களுடன் நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்வார்கள். (எசா.58:2-10; எரே. 22:15-17).

**கர்த்தரை எங்கே கண்டு கொள்வது**. **(5:4-5).** இஸ்ரவேலர்களுக்கு ஆராதனை செய்யும் இடங்க ளில் கர்த்தரைத் தேடவேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. கர்த்தரைத் தேடுதல் என்றால் நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் கர்த்தர் பக்கமாகத் திரும்புதலாகும் நாம் கர்த்தருக்குப் பதில் கொடுக்க வேண்டுமானால், அவரை ஒடுக்கப்பட்டவர்கள் மத்தியிலும், வறுமைப்பட்டவர் களின் மத்தியிலும் கண்டு கொள்ள முடியும், அவருக்கு விசுவாசத்தைக் காண்பிப்பதற்கு ஒடு க்கப்படுகிறவர்களுக்கு உதவ வேண்டும்

**"நல்லதும் தீமையானதும்."** **(5:14).** நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.

**"கர்த்தருடைய நாள்" (5:18-20).** இது ஒரு மதசம்பந்தமான வார்த்தையாகும், இதில் இந்த நாட்களுடன் நியாத்தீர்ப்பும், உலகத்தின் இறுதிநிகழ்வுகளும் இடம்பெறும் நாளாகும். சரித்திரத்தின் முடிவுபற்றி தீர்க்கதரிசியின் தரிசனம் மகிமையான பண்புகளைக் கொண்டது. இஸ்ரவேல் மீட்கப்பட்டு உலகத்தின் தேசங்கள் மத்தியில் முக்கிய இடம் மேசியாவின் கீழ் கொடுக்கப்பட்டது. ஆமோசின் நாட்களில் இந்த விரும்பப்பட்ட மக்கள் கர்த்தருக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆவலாக இருந்தார்கள். ஆனல் ஆமோஸ் கர்த்தருடைய நாளானது நியாயத்தீர்ப்பின் நாளாகும் என்றும் கூறினார். இந்த நாட்களில் இந்தப்பரம்பரையானது கர்த்தரு

டைய வருகையால் கசப்பானதும் உருளானதுமான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இதுபற்றியதெளிவான அறிவை நாம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கர்த்தருடைய இரண்டாம் வருகையை நாம் ஆவலோடு எதிர்பார்க்க வேண்டும், ஆனால் நீங்கள் பாவமற்ற வாழ்க்கை வாழவேண்டும்.

**செல்வம் (6:3-7).** செல்வம் இயல்பாகவே தீங்கானது அல்ல. ஆனால் அதை உடையவர்கள் வித்தியாசமான தேவைகளுக்கு அதைப்பயன்படுத்தி மற்றவர்களுக்கு வித்தியாசமாகக் காண்பிக்கின்றார்கள். செல்வங்களை தவறாகப்பயன்படுத்துகிறார் என்று ஆமோஸ் கடிந்து கொள்கின்றார்.

**ஆமோஸ் 7ம் அதிகாரம்**


சுருக்கம்.

இஸ்ரவேல்தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களுக்காக தண்டிக்கப்படல் வேண்டும். ஆமோஸ் தீர்க்கதரிக்குக் கிடைத்த தொடர் தரிசனங்களில் தேசத்தின் எதிர்காலம்பற்றிக் காண்பிக்கப்பட்டது. வெட்டுக்கிளிகளின் தரிசனம்(7:1-3) அக்கினி(வச. 4-6) என்பன ஒருபக்கமாக திருப்பபட்டன. பிற்பாடு தீர்க்கதரிசி கர்த்தரைப் பார்த்தார் துக்குநுலினால் தன்னுடைய மக்களை அளந்து பார்த்தார், இனிமேலும் இஸ்ரவேலைத் தப்பவிக்கூடாது என்று தீர்மானித்தார். (வசனம். 7-9).

பெத்தேலில் ஆசாரியனான அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவாகிய எரொபெயாமுக்கு ஆள் அனுப்பி: ஆமோஸ் இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவே உமக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணுகிறான்; தேசம் அவன் வார்த்தைகளையெல்லாம் சகிக்கமாட்டாது, ஆகவே அவனை பிரசங்கம் செய்வதிலிருந்து தடைசெய்யும்படி ஆலோசனை கூறுனான் கர்த்தருடைய ஆவிக்குரிய ஆலோசனைளை தேசத்தின் அதிகாரம் உள்ளவர்கள் புறம் தள்ளினார்கள். அதனால் கர்த்தர் அமத்தியாமீதும், இஸ்ரவேலர்கள் மீதும் அழிவைக்கூறினார். இதினிமித்தம்: உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியானவாள்; உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்படுவான் (வ. 10-17).

திறவு கோல்வசனம். 7:13: கர்த்தர் எந்த ராஜவையும்விடப் பெரியவர்.

**துக்குநூல் (7:7-9).** துக்குநூல் என்பது சாதாரணமாக கட்டிடம் கட்டுபவர்களால் உபயோக்கப்படும் சாதாரண உபகரணமாகும். இஸ்ரவேலர்களைத் தூக்குநுலினால் கர்த்தர் அளந்தபோது, அது தவறானதாகக் கட்டப்பட்டபடியால் முழுவதும் இடித்துக்கட்ட வேண்டியதாக இருந்தது. இதனாலேயெ இஸ்ரவேலர்களை அழிப்பதற்கு கர்த்தர் முடிவு செய்தார்.



**ராஜாவின்பங்கு (7:1).** முதலாவது பயிர் எரோபாயமினால் கட்டளையிடப்பட்டது, பெரிய இராணுவத்தை வைத்திருந்தார். பயிரில் ஏற்பட்ட கொள்ளை நோயானது ஜனங்களை உணவின்றி வருத்தப்படுத்தியது. இங்கு பட்டினி வதைத்து. இரண்டாவது நியாயத்தீர்ப்பானது, ஆமோஸ் ஜெபத்தினால் சிறிதுகாலம் தள்ளிப் போடப்பட்டது. அப்போது பாவிகளுக்காக நீதிமான்கள் ஜெபம் செய்தார்கள்.

**தரிசனம் பார்க்கிறவன் (7:12).** அமத்சியா, ஆமோசை தீர்க்கதரிசியாக ஏற்றுக் கொண்டான், ஆனால் அவருடைய செய்திகளைக் கேட்பதற்கு மறுத்தான்.

**"ராஜாவின் பரிசுத்த ஸ்தலம்" (7:13).** இந்த வார்த்தைகள் வெளிப்படுத்துவது என்னவென்றால், பிரதான ஆசாரியன் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாக இருக்காமல், ராஜாவுக்கு உண்மையுள்ளவனாக இருந்தான். இன்றும் கிறிஸ்தவ சமூகத்தில் இவ்வாறான தவறான விசுவாசத்துரோகங்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாக உள்ளது. மனிதர்களைப்பிரியப்படுத்த முனையும் போது, கர்த்தரின் கோபத்துக்கு உள்ளாகநேரிடும்.

**"என்னைக் கர்த்தர் அழைத்தார்" (7:15-16).** கர்த்தர் தன்னுடைய ஊழியத்திற்காக சாதாரண ஏழைமக்களை அழைக்கின்றார்.

**கணக்கு ஒப்புவித்தல் (7:16-17).** ஜனங்கள் தாங்கள் விரும்பியதைச் செய்வதற்கு உரிமையுடையவர்கள். அமத்சியா கர்த்தருக்கு உண்மையில்லாமல் ராஜாவுக்கு உண்மையாக இருந்தது போல. ஆனால் இவ்வாறான செயற்பாடுகளுக்காக கட்டாயம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

**ஆமோஸ்** **8ம்-9ம்**

சுருக்கம்

ஆமோசிற்கு மீண்டும் ஒரு தரிசனம் கிடைத்தது, அது ஒரு கூடைநிறைய பழுத்தபழம் இருப்பதைக் கண்டார்.(8:1-2) அதனுடைய அர்த்தம் இஸ்ரவேல் நியாயத்தீர்புக்கு ஏற்ற காலம் வந்துவிட்டது என்பதாகும்: அதன் நியாயத்தீர்ப்பை கர்த்தர் விபரிக்கின்றார். (வச 3-14). ஆனாலும் இன்னும் ஒரு தரிசனம் காண்பிக்கப்பட்டது, அதில் பலிபீடத்தின் அருகில் கர்த்தர் நிற்பதையும் காண்கின்றார், அதன் அர்த்தம் பாவத்திற்கான பலியிடலும், நியாயத்தீர்ப்புமாகும். (9:1). இந்த முக்கியமான இமத்திலிருந்து கர்த்தர் ஆலயத்தை இடித்துப் போடும்படியும், தேசத்தை அழித்துப் போடும்படியும் கட்டளையுடுகின்றார். (வச. 2-7). ஆலயம்கெட்டுப்போன இஸ்ரவேலர்களைப் பிரதிபலிக்கின்றது, தேசம் அநீதியுடன் விளையாடுகின்றது, இதனால் அவர்கள் யாவரும் அழிக்கப்பட்டுப் போவார்கள். கர்த்தர் பாவ ராஜ்நியத்தை அழிப்பார். ஆனாலும் கொஞ்சப் பேர் மிகுதியாக இருப்பார்கள், அவர் உலகம் முழுவதும் சிதறடிக்கப்படுவார்கள், ஒருநாள் தேசமனது தாவீதின் பரம்பரையைக் கொண்டு கட்டப்படும். (வச8-12). அந்த நாளில் ஆசீர்வாதமும் சமாதானமும் பெருகியிருக்கும். (வச. 13-15).

**திறவு கோல் வசனம்**.9:10. தீங்கு எங்களை அணுகுவதுமில்லை, எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று என் ஜனத்தில் சொல்லுகிற பாவிகளெல்லாரும் பட்டயத்தினால் சாவார்கள்.

.

***துக்கமும்வேதனையும் கூடைக்குள்ளே இருந்தது*** **8:1-10**. ஆமோஸ் ஒரு கூடை நிறைய கோடைகாலப்பழங்களைக் கண்டார், அதன் அர்த்தம் என்னவென்றால் இஸ்ரவேல் அழிவுக்கு ஆயத்தமாகிவிட்டது என்று பொருள்படும். (8:1-3). அனேகமனவர்கள் இறந்து போவார்கள் புதைப்பாரில்லாமல் அவதிப்படுவார்கள். (8:3). பணம்பெருத்த இஸ்ரவேலர்களால் வறுமையானவர்கள் ஒடுக்கப்படுவதை கர்த்தர் பாராமுகமாக இருந்துவிடமாட்டார். (8:4-7).

தேசம் பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்படும். (8:8) அந்நாட்களில் வானம் அந்தகாரப்படும். (8:9). பண்டிகைகள் காலத்தில் ஆழமான துக்கம் கொண்டாடப்படும், பெற்றோர் தங்களுடைய ஒரே குமாரனுக்காகப் புலம்புவார்கள். (8:10).

**உணவுப்பஞ்சம் மோசமாக இருக்கும் 8:11-14**

சிறையிருப்புக் காலத்தில் இஸ்ரவேலர்கள் மிகமோசமான பஞ்சத்தை அனுபவித்தார்கள். : பல நுற்றாண்டு காலமாக தீர்க்கதரிசிகளை வெறுத்தார்கள், கர்த்தரை வெறுத்தார்கள். தற்போது அவர்கள் விரும்பினாலும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கமுடியாமல் இருக்கிறார்கள்.

***ஒருசில நீதிமான்களைத்தவிர மற்றவர்கள் யாவரும் தப்பிக்கவே முடியாது***. (9:1-4). பெத்தேலில் சுருபவணக்கக்காரரைக் கர்த்தர் கண்டு, கர்த்தரின் கோபத்தில் யாரும் தப்பமுடியாது என்று கூறினார். கர்த்தர் பொறுமையின் எல்லையைத் தாண்டிவிட்டார்

சர்வ வல்லமையுள்ள தேவன் சகலத்தையும் ஆளுகை செய்கிறவர் அவரே பூமி அதிர்ச்சியையும், வெள்ளத்தையும் ஆளுகிறவர். (9:5-6), இஸ்ரவேல் போன்ற தேசத்தை அவர் நிச்சயமாக நியாயம்தீர்ப்பார். (9:7-8). அனாலும் அவர் முழு இஸ்ரவேலர்களையும் அழிக்காமல் ஒரு சிலரை மிகுதியாகவைப்பார். (9:8-10).

# 4. ஒபதியா (848 கிமு.ஏறக்குறைய.)

பின்னணி.

ஏசாவின் பரம்பரையினராகிய ஏதோமியர்கள், இஸ்ரவேலர்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினர்களாக இருந்தபோதிலும் நீண்டபால எதிரிகளாவார்கள். (ஆதி27; 2 இரா14:7; 16:6; 2நாள 28:17; ஆமோஸ் 1:6, 9; எண். 20:14-21 எரே. 49:7-22; எசே. 35:1-15; மல். 1:2-5). அவர்களுக்கு எதிரான கர்த்தரின் நியாயத்தீர்ப்பை ஒபதியா முன்னுரைத்தார். இஸ்ரவேலின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள மலைப்பகுதியில் ஏதோமியர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஏதோமியர்களின் பெருமைகளையும், சுயநிறைவையும் ஒபதியா கண்ணோக்கினார். யேர்தானில் உள்ள பழைய நகரமாகிய பேத்திரா என்ற நகரத்தில் வாழ்ந்தார்கள். அங்கு தங்கள் வீடுகளை அந்த மலைகளில் அமைத்திருந்தார்கள். இது ஏதோமியர்களின் இடமாக இருந்தது. (2 இரா14:7).

**எழுதியவர்**::- ஒபதியா (1:1). இவரின் விபரம் எதுவும்தெரியாது. திகதி:- சரியாகத் தெரியாது.

பாகால் வணக்கக்காரரினால் எருசலேம் முற்றுகையிடப்பட்டது, இதற்கு உதவியாக ஏதோமியரும் இருந்தார்கள். (1:11-14).

எருசலேம் கடைசியாக விழுந்தது கி.மு. 586 இல் ஆகும் என்று கூறப்படுகின்றது, இருந்தாலும், ஒன்பதாம் நூற்றாண்டில் பெலிஸ்தியர்களாலும், அராபியர்களாலும் வீழ்த்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (2நாள. 21:16-17) பழைய ஏற்பாட்டு எழுத்துக்களை எழுதிய முதலாவது தீர்க்கதரிசி ஒபதியா 850—840 காலப்பகுதியைச் சேர்ந்தவராகும். இவர் யோவேல் தீர்க்கதரிசிக்கு

முற்பட்டவராகும். எரேமியா தீர்க்கதரிசி ஒபதியாவின் புத்தகத்தை மேற்கோள் காட்டி கூறியுள்ளார். (1:1-9 எரே. 49:7-22).

**நோக்கம்**

• ஏதோமின் வீழ்ச்சி முன்னறிவிக்கப்படல்.

• பெருமையினால் நிறைந்துள்ள மனிதனோ அல்லது தேசமோ கர்த்தரின் நியாயத்தீர்ப்பிற்கு உள்ளாக்கப்படுவார்.

• உலகின் சர்வ்வல்லமையுள்ள கர்த்தர் இஸ்ரவேலர்களை மீண்டும் நிலைநிறுத்திக் காண்பிப்பார்.

**முக்கிய விடயங்கள்**.

• யாக்கோபின் பரம்பரைக்கும், ஏசாவின் பரம்பரைக்கும் இடையில் காணப்படும் உறவு குறித்து, ஒபதியாவின் தீர்க்கதரிசனம் கூறப்படுகின்றது. ஒரேஒரு செய்திமாத்திரம் இங்கு கூறப்படுகின்றது.

**மற்றயபுத்தகங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தல்**:- **எரேமியா**

• 1:1-9 வசனங்கள் எரேமியா 49:7-22 ஒப்பிட்டுப் பார்க்கவும். (காலத்தைப்பார்க்கவும்.).

| ஒபதியா | எரேமியா |
|---|---|
| **ஒப 1:1** ஒபதியாவின் தரிசனம்; கர்த்தராகிய ஆண்டவர் ஏதோமைக் குறித்துச் சொல்லுகிறது என்னவென்றால்: எழும்புங்கள், அதற்கு விரோதமாக யுத்தம்பண்ண எழும்புவோம் வாருங்கள் என்று அறிவிக்க ஸ்தானாபதி ஜாதிகளிட த்தில் அனுப்பப்படும் செய்தியைக் கர்த்தர் சொல்லக்கேட்டோம்.<br>ஒபத 1:2 இதோ, நான் உன்னை ஜாதிகளில் சிறுகப்பண்ணினேன்; நீ மெத்தவும் அசட்டை பண்ணப்பட்டிருக்கிறாய்.<br>ஒப 1:3 கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது.<br>ஒப 1:4 நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத் தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.<br>ஒப 1:5 நீ எவ்வளவாய்ச் சங்கரிப்பட்டுப் போனாய்! திருடராகிலும் இராத்திரியில் கொள்ளையடிக் கிறவர்களாகிலும் உன்னிடத்தில் வந்தால், தங்களுக்குப் போதுமான மட்டும் திருடுவார்கள் | ஏதோமைக்குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தேமானிலே இனி ஞானமில்லையோ? ஆலோசனை விவேகிகளை விட்டு அழிந்ததோ? அவர்களுடைய ஞானம் கெட்டுப்போயிற்றோ? தேதானின் குடிகளே, ஓடுங்கள், முதுகைக் காட்டுங்கள், பள்ளங்களில் பதுங்குங்கள்; ஏசாவை விசாரிக்குங்காலத்தில் அவன் ஆபத்தை அவன்மேல் வரப்பண்ணுவேன். திராட்சப்பழங்களை அறுக்கிறவர்கள் உன்னிடத்திலே வந்தார்களாகில், பின்பறிக்கிறதற்குக் கொஞ்சம் வையார்களோ? இராத்திரியில் திருடர் வந்தார்களாகில், தங்களுக்குப் போதுமென்கிறமட்டும் கொள்ளையடிப்பார்கள் அல்லவோ? நானோ ஏசாவை வெறுமையாக்கி, அவன் ஒளித்துக்கொள்ளக் கூடாதபடிக்கு அவனுடைய மறைவிடங்களை வெளிப்படுத்திப்போடுவேன்; அவனுடைய சந்ததியாரும் அவனுடைய சகோதரரும் அவனுடைய அயலாரும் அழிக்கப்படுவார்கள்; அவன் இனி இரான். போஸ்றா பாழும் நிந்தையும் அவாந்தரமும் சாபமுமாக இருக்குமென்றும், அதின் பட்டணங்கள் எல்லாம் நித்திய வனாந்தரங் களாயிருக்குமென்றும் என்னைக்கொண்டு ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் கூடிக்கொண்டு, அதற்கு விரோதமாக |

அல்லவோ? திராட்சப்பழங்களை
அறுக்கிறவ ர்கள் உன்னிடத்தில் வந்தால்,
சில பழங்களை விட்டுவிடுவார்கள்
அல்லவோ?
ஒப 1:6 ஏசாவினுடையவைகள் எவ்வளவாய்த்
தேடிப்பார்க்கப்பட்டது; அவனுடைய
அந்தரங்கப் பொக்கிஷங்கள் எவ்வளவாய்
ஆராய்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டது.
ஒப 1:7 உன்னோடு உடன்படிக்கை செய்த
எல்லா மனுஷரும் உன்னை எல்லைமட்டும்
துரத்தி விட்டார்கள்; உன்னோடு
சமாதானமாயிருந்த மனுஷர் உன்னை
மோசம்போக்கி, உன்னை மேற்
கொண்டார்கள்; உன் அப்பத்தைச்
சாப்பிட்டவர்கள் உனக்குக் கீழே
கண்ணிவைத்தார்கள். அவனுக்கு
உணர்வில்லை.
ஒப 1:8 அந்நாளில் அல்லவோ நான்
ஏதோமிலுள்ள ஞானிகளையும், ஏசாவின்
பர்வதத்திலுள்ள புத்திமான்களையும்
அழிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
ஒப 1:9 தேமானே, ஏசாவின் பர்வதத்திலுள்ள
மனுஷர் யாவரும் கொலையினால்
சங்கரிக்கப்படும்படி உன்
பராக்கிரமசாலிகள் கலங்குவார்கள்.

வந்து, யுத்தம்பண்ணுகிறதற்கு எழும்புங்கள் என்று சொல்ல, ஜாதிகளிடத்தில் ஸ்தானாதிபதியை அனுப்புகிற செய்தியைக் கர்த்தரிடத்திலே கேள்விப்பட்டேன்.

இதோ, உன்னை ஜாதிகளுக்குள்ளே சிறியதும்மனுஷருக்குள்ளே அசட்டை பண்ணப்பட்டதுமாக்குகிறேன் என்கிறார். கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி, மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிறவனே உன்னால் உன் பயங்கரமும் உன் இருதயத்தின் அகந்தையும் உன்னை மோசம் போக்கிற்று; நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அப்படியே ஏதோம் பாழாகும்; அதைக் கடந்து போகிறவன் எவனும் அதின் எல்லா வாதை களினிமித்தமும் பிரமித்து ஈசல்போடுவான்.

சோதோமும் கொமோராவும் அவைகளின் சுற்றுப்புறங்களும் கவிழ்க்கப்பட்டதுபோல இதுவும் கவிழ்க்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அங்கே ஒருவனும் குடியிருப்பதில்லை, அதில் ஒரு மனுபுத்திரனும் தங்குவதில்லை. ஆகையால் கர்த்தர் ஏதோமுக்கு விரோதமாக யோசித்த ஆலோசனையையும், அவர் தேமானின் குடிகளுக்கு விரோதமாக நினைத்திருக்கிற நினைவுகளையும் கேளுங்கள்; மந்தையில் சிறியவர்கள் மெய்யாகவே அவர்களைப் பிடித்திழுப்பார்கள், அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் மெய்யாகவே பாழாக்குவார். அவைகளுக்குள் இடிந்துவிழும் சத்தத்தினாலே பூமி அதிரும்; கூக்குரலின் சத்தம் சிவந்த சமுத்திரமட்டும் கேட்கப்படும். இதோ, ஒருவன் கழுகைப்போல எழும்பி, பறந்துவந்து, தன் செட்டைகளைப் போஸ்றாவின்மேல் விரிப்பான்; அந்நாளிலே ஏதோமுடைய பராக்கிரமசாலிகளின் இருதயம் பிரசவவேதனைப் படுகிற ஸ்திரீயின் இருதயம்போல இருக்கும் என்கிறார்.

# 5. யோனா கி.மு(780-750)

**அறிமுகம்.:**

A. சாத்தானால் வெறுக்கப்படும் பழைய ஏற்பாட்டு மூன்று புத்தகங்களுள் யோனாவும் ஒன்று. அவையான:

1. ஆதியாகமம், அது இயேசுக்கிறிஸ்த்துவின் மனித அவதாரத்தை ஸ்திரியின் வித்து என அறிவிக்கின்றது (ஆதி. 3:15).

2. தானியேல் புத்தகம், அது இயேசுக்கிறிஸ்த்துவின் மகிமையான இரண்டாம் வருகையை அறிவிக்கின்றது. (தானி. 7:9-12) அந்த வருகையின்மூலம் அவரது எதிரிகள் அழிக்கப்படுவார்கள்.

3. யோனா புத்தகம், அது இயேசுக்கிறிஸ்த்துவின் உயிர்த்தெழுதலைக் குறிப்பிடுகின்றது. (யோனா 2 ஐ மத் 12:38-41ஒப்பிட்டுப் பார்க்க.)

B. யோனா புத்தகத்தைப் பற்றி மூன்று விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

1. **புராணக் கதைகளாகப் பார்த்தல்**. இது ஒரு சாதாரண பார்வையாகும்.

2. **உருவகக் கதைகளாகப் பார்த்தல்**. இது ஒரு உவமைக் கதைபோல் பார்க்கப்படுகின்றது. யோனாவை ஒரு இஸ்ரவேல் தேசமாகப் பார்த்தல்.

b. கடல் இஸ்ரவேல் தேசமாகப் பார்க்கப்படுகின்றது.

c. இந்த மீன் என்பது பாபிலோனிய சிறையிருப்பாகும்.

d. கரைவந்து சேருதல் எஸ்றாவின் காலத்தில் மீண்டு வருதலுக்கு ஒப்பானதாகும்.

3. **இது ஒரு சரித்திர சம்பந்தமான பார்வையாகும்**. இது ஒரு சரியான பார்வையாகும்.

a. இது ஒரு சரித்திர நிகழ்வை வெளிக் கொண்டுவருகின்றது.

b. யூதர்களும் ஆரம்ப விசுவாசிகளும் இதை சரியானது என ஏற்றுக் கொண்டார்கள்.

c. 2 இராஜாக்களை (14:25) எழுதியவர் யோனாவை ஒரு சரித்திர நபர் என ஏற்றுக் கொள்கின்றார்கள். அவர் பிறந்த நகரம் தாய்தகப்பனுடைய பெயர்களுடன் கூறப்பட்டுள்ளது அதுமட்டுமல்லாது அவருடை ராஜாவின் பெயரும் கூறப்பட்டுள்ளது.

d. இயேசு யோனாவின் கதையைச் சாட்சியாகக் கூறினார். (மத். 12:38-41; 16:4; லூக். 11:29-32).

4. யோனா செபுலோன் தேசத்திலுள்ள காத்கேபார் என்ற இடத்தைச் சேர்ந்தவராகும். இது கலிலேயாவின் வடக்கிலுள்ள நாசரேத் ஊரில் உள்ளது. (யோசு. 19:13)

**(I. யோனா எதிர்மறையாகச் செயற்படல். (கர்த்தரின் பொறுமையை விபரிக்கின்றது)— அதிகாரம் 1:**

A. கர்த்தருடைய கட்டளை - போ என்பதகும். (1:1, 2). நினிவேய்க்குப் போய் அவர்களின் அசுத்தமான கொடிய செயற்பாடுகளுக்கு எதிராகப் பிரசங்கம் செய்யும்படி கர்த்தர் யோனாவுக்குக் கட்டளையிட்டார்.
B. ஊழியக்காரனின் செயற்பாடு— முடியாது என்பதாகும். (1:3).

1. **பயனற்ற செயற்பாடு**:- முடியாத காரியத்தை யோனா செய்வதற்கு முயற்சித்தல்:— அதுதான் கர்த்தருடைய சமூகத்தை விட்டு ஓடுதல். (சங். 139:7-12.) அவர் யோப்பா துறைமுகத்திலிருந்து தர்ஷீசிற்குப் போவதற்காக பயணச்சீட்டு வாங்கினார். (பழைய பெயர் ஸ்பெயின் என்பதாகும்.) இந்தத் துறைமுகம் மிக முக்கியமானதாகும்.

2. **அவருடைய எதிர்மறை நடவடிக்கை.** ஏன் அவர் கீழ்ப்படிய மறுத்தார் ? அனேக காரணங்கள் இதற்காக கூறப்படுகின்றன.

a. **அவர் ஒரு கோளையாக இருந்தார்**. இது 1: 12ஜ பார்க்கும் போது தவறானதாகும். (அதற்கு அவன்: நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிடுங்கள்; அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்; என்னி மித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள்மேல் வந்ததென்பதை நான் அறிவேன் என்றான். )

**b. இவர் ஒரு கடுமையான தேசியவாதியாகும்.** இது ஒரு தர்க்கரீதியான விடையாகும் இந்த சரித்திர காலத்தில், பாலஸ்தீனத்தில் அசீரியர்கள் மிகுந்த ஆதிக்கம் கொண்டிருந்தார்கள். அசீரிய இராணுவத்தின் கொடுமைகள் மிகவும் பாரதூரமானதாக இருந்தது.

**C. கர்த்தருடைய கரத்தின் அடிகள்**. —

(1:4-12). 1. கடலில் மகா புயல் தீடீரென வீசியது.

2. பிரயாணினகள் தங்கள் தெய்வங்களை வேண்டிக் கொண்டார்கள், தங்களுடைய பொருட்களையும் கடலில் கப்பலை இலகுபடுத்துவதற்காக வெளியில் எறிந்தார்கள்.

3. இந்த நேரத்தில் யோனா ஆழ்ந்த நித்திரையிர் இருந்தார். இதை அறிந்த கப்பல் அதிகாரி, அவரை எழுப்பி அவருடைய தெய்வத்தைநோக்கி விடுதலைக்காக வேண்டிக் கொள்ளும்படி வற்புறுத்தினான்.

4. நம்பிக்கை இழந்த நிலையில் இருந்த கப்பல் ஒட்டிகள், யார்மூலமாக இந்த புயல் ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்வதற்காக சீட்டுப் போட்டார்கள். சீட்டு யோனாவின் மீது விழுந்தது.

5. யோனா எந்த தேசத்தவன் என்பதையும், கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருப்பதையும் அவர்களுக்கு கூறினான். தன்னைக் கப்பலில் இருந்து வெளியே தூக்கி எறியும்படியும் வேண்டிக் கொண்டான். யோனா தான் கடலில் குதித்து ஒருவேளை மரித்துவிட்டால் அது தற்கொலையாகிவிடும் என்ற அச்சத்தினால் தன்னை தூக்கிப் போடும்படி சென்னார்.

**D. கப்பல் ஓட்டிகளின் நடவடிக்கை — தூக்கி எறிதல்**. (1:13-17).

1. அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: ஆ கர்த்தாவே, இந்த மனுஷனுடைய ஜீவனிமித்தம் எங்களை அழித்துப் போடாதேயும்; குற்றமில்லாத இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத் தாதேயும்; தேவரீர் கர்த்தர்; உமக்குச் சித்தமாயிருக்கிறபடி செய்கிறீர் என்று சொல்லி யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள்;

2. சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது. ஆச்சரியமடைந்த கப்பல் ஓட்டிகள் யேகோவா தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

3. ஏற்கனவே கர்த்தரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மீன் யோனாவை விழுங்கியது. இது பழைய ஏற்பாட்டில் இடம்பெற்ற மகாபெரிய அதிசயமாகும்.

**II. யோனாவின் மன்றாட்டு (கர்த்தரின் மன்னிப்பை விளக்குகின்றது. )—அதிகாரம் 2:**

A. வேண்டுகோள். (2:1-8).

1. யோனா மீனின் வயிற்றில் இருந்தவாறாகவே ஒரு உருக்கமான ஜெபமன்றாட்டைத் தொடங்கினார். அவருடைய பலிபீடம் சறுக்கலுள்ள மீனுடைய வயிறாகும்.

2. சில ஆய்வாளர்கள் யோனா மீனின் வயிற்றில் இறந்துவிட்டதாகவும், ஆனால் கர்த்தருடைய வல்லமையால் மீண்டும் உயிர்த்து எழுந்ததாகவும் கூறுகின்றார்கள்,

இந்த சொற்றொடர்களைக் கவனிப்போம். :

a. நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து. (வ.2).
b. நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர். (வ. 6).
c. என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் (வ.7). இவற்றை வைத்துப் பார்க்கும்போது, யோனா மரிக்கவில்லை ஆனால் மரணத்தின் வாசல் வரைக்கும் சென்றுள்ளார் என்பது புரிகின்றது.

3. இரண்டு சந்தர்ப்பங்களில் யோனா, கர்த்தரின் ஆலயத்தை நினைவு கூர்ந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது. (வசனம். 4, 7.) சாலொமோனின் ஆலயத்தில் ஏறெடுத்த ஜெபத்தை உணர்வுடன் யோனா நினைவு கூருகின்றார். (1இர. 8:38, 39). உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் அனைவரிலும் எந்த மனுஷனானாலும் தன் இருதயத்தின் வாதையை உணர்ந்து, இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும், உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னிப்பீர் என்தை யோனா உணர்ந்து ஜெபம்செய்தார். “நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டேன்; ஆகிலும் இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன்.”(2:4)

4. தண்ணீர்கள் பிராணபரியந்தம் என்னை நெருக்கினது; ஆழி என்னைச் சூழ்ந்தது; கடற்பாசி என் தலையைச் சுற்றிக்கொண்டது.

5. பர்வதங்களின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கினேன்; பூமியின் தாழ்ப்பாள்கள் என்றெ ன்றைக்கும் என்னை அடைக்கிறதாயிருந்தது; ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர். (வ. 6).!
6. யோனா மீனின் வயிற்றில் இருந்தவாறாக தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்து மனம் திரும்புகிறார். (பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள். நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்; இரட்சிப்பு கர்த்தருடையது என்றான்.) (vs. 8, 9). அதனால் கர்த்தரின் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுகிறார். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. (2:10)

**III. யோனா பிரசங்கித்தல். (கர்த்தருடைய வல்லமையை விளக்கிக் கூறுதல்)—அதிகாரம்**:3

**A. எச்சரிப்பு —(3:1-4).**

1. அவருடைய ஊழியக்களம்.: நினிவே ரைக்கிரட்டிஸ் நதியின் கிழக்குப்பக்கத்தில் அமைந்துள்ளது. இது ஒரு பெரிய முக்கிய நகரமாகும். இந்த நகரத்தில் 1200 கோபுரங்கள் உண்டு, ஒவ்வொன்றும் 200 அடி உயரம் உள்ளவையாகும். அத்துடன் இதனுடைய சுவர்கள் 100 அடி உயரமும் மூன்று தேர்கள் சமாந்தரமாக செல்லக் கூடியஅளவுக்கு அகலமானவையுமாகும். இது 60மைல் விட்டத்தைக் கொண்டதாகும். 600.000 மக்களுக்குரிய தானியங்கள் இங்கு விளைவிக்கமுடியும். இங்கு 100 எக்கர் பரப்பளவில் அழகன மாளிகையும் உண்டு. வெளிநாட்டு அடிமைகளைக் கொண்டு இவைகள் அழகாகக் கட்டப்பட்டன. இங்கு தொங்கு பாலமும் அமைக்கப்பட்டிருந்தது.

**B. துக்கப்படல்- (3:5-9**2.) **அவருடைய செய்தி** : இன்னும் நாற்பது நாட்களுக்குள் நினிவே அழிக்கப்படும். " (v. 4). வேதாகமத்தின்படி 40 நாட்கள் என்பது சோதனைக்குரிய நாட்களாகும். அவையாவன:-

a. நோவாவின் காலத்தில் வெள்ளம் 40 நாட்கள் இருந்தன. (ஆதி. 7:17).

b. மோசே நாற்பது நாட்கள் சீனாய் மலையில் இருந்தார். (யாத். 24:18).

c. 12 ஒற்றர்கள் 40 நாளாக பாலஸ்தீனத்தை உளவு பார்த்தனர். (எண். 13:25).

d. இஸ்ரவேலர்கள் 40 வருடங்களாக வனாந்தரத்தில் அலைந்தார்கள். (எண். 14:33).

e. இயேசு 40 நாள்கள் சோதிக்கப்பட்டார். (மத். 4:2).

f. உயிர்தெழுதலுக்கும் பரம் ஏறுதலுக்கும் இடைப்பட்ட காலம் 40 நாட்களாகும். (அப்1:3).

1. இந்த அதிகாரத்தில் சரித்திரத்திலேயே இடம்பெற்ற மிகப்பெரிய உயிர்மீட்சியைக் கொண்டுள்ளது. உடல் சம்பந்தமான உயிர்மீட்சியல்ல. இங்கு இடம்பெற்றது ஆவிக்குரிய உயிர்மீட்சியாகும். யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள் என்று இயேசு கூறியுள்ளார். (மத். 12:41).

**C. மனமாற்றம் ஏற்பட்டது. (3:10).**

அவர்கள் தங்களுடைய அசுத்த செயற்பாடுகளைவிட்டு மனம்திரும்பினார்கள், அதைப்பார்த்த கர்த்தரும் தான் அவர்களுக்கு செய்ய நினைத்த தீங்கைச் செய்யாமல் இரும்பதற்காக மனம்மாறினார்.

1. ***"கர்த்தர் மனம் மாறினார்."—*** *அதாவது கர்த்தர் முன்பு செய்வதற்கு எண்ணியிருந்த தீங்கைச் செய்யாமல் இருப்பதற்கு மனம் மாறினார்.* (ஆதி. 6:6; யாத். 32:14; 2சாமு. 24:16.)

**2. "கெட்ட செயற்பாடுகளுக்கு மனம் மாறுதல்"**

கெட்ட செயற்பாடுகள் என்று சொல்லும்போது அது பாவத்துடன் தொடர்புள்ளதாக காணப்படுகின்றது. கெட்ட செயற்பாடுகள் என்பவை, வேதனைப்படுத்தல், இன்னல்படுத்தல், அதிகதுன்பம், துன்புறுத்துதல், ஆழ்ந்த துன்பம், தீங்கிழைத்தல், தொல்லை கொடுத்தல், கவலை ஏற்படுத்தல் போன்றவையாகும்.

2. மீன் யோனாவை கடற்கரை நிலத்தில் கக்கிவிட்டது.

IV. யோனா விசனமடைதல். (கர்த்தரின் இரக்கத்தை வெளிப்படுத்தல்)— அதிகாரம் 4:

**A. நகரத்தைப் பார்த்துப் புலம்புதல். (4:1-5).**

1. இந்த அதிகாரம் 2 சாமு 11, 1ம் இரா 19. ஆதி 9, 13 என்பன வேதாகமம் மனிதனால் எழுதப்பட்டிருக்க முடியாது என்பதைக் கூறுகின்றது.

நினிவேயின் மக்களுக்குத் தான் கூறியிருந்த செய்தியைப் புறக்கணிப்பார்கள் என்றும் அதனால் அவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று நம்பி நினிவேக்குப் புறப்பாக ஒரு மலையின் மீது அமர்ந்து பார்த்துக் கொண்டு இருக்கின்றார்.

2. அவன் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், நன்மைகளையும் ஏற்றுக் கொள்கிறான், பின்பு அவன் ஏமாற்றத்திலே கர்த்தரைப் பார்த்து இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான். (4:3). எண்11:15 (மோசே); எரேமியா 20:14-18 (எரேமியா ); 1 ராஜா19:4 (எரேமியா)என்பவர்களும் இதேபோன்ற சூழ்நிலையில் தங்கள் உயிரை எடுத்துக் கொள்ளும்படிஜெபம் செய்தார்கள்.

3. காயீனுக்குச் கர்த்தர் செய்தது போலவே தன்னை நியாயப்படுத்த முனைகின்றார். (ஆதி4:6,7) அத்துடன் பாவிகளுக்கு இதனையே கர்த்தர் இப்போதும் செய்துவருகின்றார் (எசா. 1:18).

**B. செடியின் கீழ் இருந்து கற்றுக் கொள்ளல். (4:5-11).**

1. அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்.

2. யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன்மேல் ஓங்கி வளரப்பண்ணினார்; அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான்.

3. மறுநாளிலோ கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச் செடியை அரித்துப்போட்டது; அதினால் அது காய்ந்துபோயிற்று.

4. சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோய், தனக்குள்ளே சாவை விரும்பி: நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்.
5. அதற்குக் கர்த்தர்: நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே. வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார். (4:10, 11).

இறுதியில் யோனா மனந்திரும்பியபடியாலேயே யோனா புத்தகத்தை அவரால் எழுதமுடிந்தது.

# 6.மீகா (740-690 கி.மு.)

**அறிமுகம்**. :

1. இவர் பெலஸ்தீன எல்லைப்பகுதியாகிய மெரோசேத் என்ற நகரத்தில் வாழ்ந்தவர், இது 25 மைல் எருசலேமிற்கு தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

2. இவர் ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்திலுள்ளவர். மீகா நாட்டுத் தீர்க்கதரிசியாக இருந்தார், ஏசாயா அரசவைத் தீர்க்கதரிசியாக இருந்தார்.

3. மீகா வடக்கு ராஜ்ஜியத்தின் இறுதி தீர்க்கதரிசியாவார்.

4. இவரே வடக்கிற்கும் தெற்கிற்கும் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியாவார். இவர் எருசலேம், சமாரியா ஆகிய இரண்டு தலைநகரங்களிலும் ஊழியம் செய்தார். .

5. இவர் இன்னும் சில தீர்க்கதரிசிகளை இந்தச் சிறிய புத்தகத்தில் இணைத்துள்ளார்.

a. சமாரியாவின் வீழ்ச்சி (1:6, 7)

b. அசீரியர்களால் யூதா முற்றுகையிடப்படல். (1:9-16)

c. எருசலேமின் வீழ்ச்சியும், ஆலயத்தின் அழிவும். (3:12; 7:13)

d. பாபிலோனில் சிறையிருப்பு (4:10)

e. சிறையிருப்பிலிருந்து மீண்டுவருதலும், எதிர்காலத்தில் இஸ்ரவேல் பழைய நிலைக்குத் திரும்புதலும். (4:1-8, 13; 7:11, 14)

f. பெத்தலேமில் இயேசு பிறத்தல். (5:2)

g. எதிர்காலத்தில் இயேசுவின் ஆட்சி (2:12, 13; 4:1, 7)

6. முன்றுதரம் இதனை கூறுதல்.

a. யூதாவின் மூப்பர்களால் கூறப்படல் (எரே. 26:18, மீகா3:12)

b. மீகாவினால் எருசலேமிற்கு வருவார் என்று கூறப்படல். (மத். 2:5, 6, மீகா5:2)

c. பன்னிரண்டு சீடர்கள் இயேசுவினால் அனுப்பப்படல். (மத். 10:35, 36, மீகா 7:6)

**I. மீகாவின் பொது பிரசங்கம். (1-6).**

A. இஸ்ரவேலின்மீது தண்டனை அறிவித்தல்.(1:3).

**1. முதலாவது பிரசங்கம். (1):**

a. சமாரியாவிலும் எருசலேமிலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் கர்த்தர் கொண்டுவருவார். (1:1-5).

b. சமாரியா முழுவதுமாக அழிக்கப்படும். (1:6). இது அசீரியாவின் முற்றுகையின் போது இடம் பெறும். (2இரா. 17:1-18.)

c. எதிரி எருசலேமின் வாசல்மட்டும் வருவான். (1:9). ஆனாலும் கர்த்தர் தன்னுடைய பரிசுத்த பூமியைக் காத்துக் கொள்வார், எனினும் 115 வருடங்களுக்குப்பின் பாபிலோனியனால் இது அழிக்கப்படும். (2இரா. 19:35.)

**2. இரண்டாவது பிரசங்கம். (2):**

a. அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின்மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம்பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற்காலமாகிறபோது அதை நடப்பிக்கிறவர்களை கர்த்தர் அழித்துப் போடுவார்கள். (2:1).

b. அவர்களின் தீமைக்குத் தீமையினாலே பதில் செய்வார். என்று வாக்குப் பண்ணினார். (2:3).

c. அப்படியான தீங்கைக் கர்த்தர் செய்யமாட்டார் என்று சொல்லி, உண்மையான தீர்க்கதரிசிகளை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தார்கள். (2:6).

d. மேசியா வந்தபின் அவர்களை சிறையிருப்பிலிருந்து மீட்டு, அவர்களின் சொந்த தேசத்திற்கு வழிநடத்தும் போது இவர்களின் தண்டனை முடிவிற்கு வரும்.

3. **மூன்றாவது பிரசங்கம்**. (3):

a. இஸ்ரவேலின் தலைவர்கள் கர்த்தரால் கடிந்து கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கு சரியும் பிழையும் தெரிகிறது, ஆனாலும் அவர்கள் மோசமான பாவிகளாக இருக்கின்றார்கள். (3:1-5).

b. அவர்களுடைகேடும் ஜனங்களைச் சந்தோசப்படுத்தும் பிரசங்கமும் ஜனங்களை அழிவுக்கு நடத்திச் செல்லும். (3:6, 7).

c. மீகாவோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டுப் பிரசங்கித்தான். (3:8).

d. கள்ளத் தீர்க்கதரிசிகளின் செய்கைகளினால், சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டு மேடுகளாய்ப்போம். (3:12).

**B. இஸ்ரவேலின் மீட்சி பற்றிய தீர்க்கதரிசனம். (4-5).** இவ்வகையான பயங்கரப் பாவத்தின் நிமித்தம், கர்த்தருடைய தண்டனைகள் நிறைவேற்றப்பட்டபின்னர், கர்த்தர் ஒரு நாள், மீண்டும் பாலஸ்தீனத்தில் அவர்களை ஒன்றுசேர்ப்பார்.

1. காலக்கிரமத்தில் இந்த மீட்பு இடம் பெறும்.

a. யூதா 70 வருட சிறையிருப்பை பாபிலோனில் துக்கத்துடன் நிறைவேற்ற வேண்டும். (4:10). இது உண்மையிலே ஒரு முக்கியமான பகுதியாகும், அந்தக்காலத்தில் பாபிலோன் உலக வல்லரசாக இருந்தது.

b. யூதாவின் மேசியா பெத்தலகேமில் பிறப்பார். (5:2).

c. உபத்திரப காலத்தில் அவர்கள் ஆவியில் மறுபிறப்படையும்வரை அவர்களை ஒருதேசமாக ஒதுக்கிவைப்பார். (5:3).

d. அர்மகதோன் யுத்தத்தின் போது தேசமெல்லாம் இஸ்ரவேலர்களுக்கு எதிராக ஒன்று சேரும். (4:11). (வெளி. 16:13-16; 19:17.)

e. இந்த தேசங்கள் யாவும் முற்றாக அழிக்கப்படும். (5:15).

2. மீட்சி கொள்வதற்கான இறுதி நேரம். (மீகா4:1-6).

C. இஸ்ரவேலர்களின் மன்னிப்பிற்கான மன்றாட்டு. (6). மீகா 6:3-8.

| |
|---|
| இஸ்ரவேலின்மீது தண்டனை முன்னறிவித்தல். (மூன்று பிரசங்கங்கள்.) அதிகாரம் 1-3 |
| இஸ்ரவேலின் மீட்சிக்கான தீர்க்கதரிசனங்கள் 4-5 |
| மீட்சிக்கான காலக்கிரமம். |
| எழுபது வருட சிறையிருப்பு (4:10) |
| பெத்தலகேம் (5:2) |
| தெய்வீக நிராகரிப்பு (5:3) |
| அர்மகதோன் யுத்தம். (4:11) |
| புறஜாதியாரின் அழிவு. (5:15) |

2. மீட்சியின் முடிவு (4:1-6)

இஸ்ரவேலர்களிடமிருந்து மன்னிப்புக்கான மன்றாட்டு (6:3-8)

**அவருடைய தனிப்பட்ட ஆர்வம் 7:1-6**" ஐயோ! உஷ்ணகாலத்துக் கனிகளைச் சேர்த்து, திராட்சப்பழங்களை அறுத்தபின்பு வருகிறவனைப்போல் இருக்கிறேன்; புசிக்கிறதற்கு ஒரு திராட்சக்குலையும் என் ஆத்துமா இச்சித்த முதல் அறுப்பின் கனியும் இல்லை. (7:1).

**ஜெபவிண்ணப்பம் 7:7-20** கர்த்தருக்கான தீர்மானம் (7:7, 9) கர்த்தரைப்பற்றிய விளக்கம். (7:18-20)

# 7. நாகூம் . (630-612கி.மு.)

**அறிமுகம்:**

1. நாகூம் என்பதன் பொருள் “தேற்றுபவர் என்பதாகும்.”

2. புதிய ஏற்பாட்டில் உள்ள கப்பர்நகும் என்ற நகரம் நாகூம் கிராமம் என்று அழைக்க கப்படுகின்றது. இந்த தீர்க்கதரிசியின் பெயரிலேயே கப்பர்நகூம் அழைக்கப்படுகின்றது.

3. இந்தப்புத்தகம் ஒரேயொரு கருப் பொருளையே கொண்டுள்ளது, நினிவே பயங்கரமான அழிவைச் சந்திக்கும் என்பதாகும். இந்த தீர்க்கதரிசனம் கூறப்படும்போது, நினிவே முறியடிக்கமுடியாத பலமான நகரமாக இருந்தது. இதன் மதில்களின் உயரம் 100 அடியும் அகலம் இரதங்கள் அதில் பிரயாணம் செய்யக்கூடியவு அகலமக இருந்தது. இது 60மைல் சுற்றளவைக் கொண்டதாகவும் 1200 கோபுரங்களைக் கொண்டதாகும் இருந்தது.

4. நினிவே 612இல் வீழ்ச்சியடைந்தது. (இந்த தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 18 வருடங்களுக்குப்பின்பு நிறைவேறியது.), வடக்கேயிருந்த மேதியாவினால் முற்றுமாக அழிக்கப்பட்டது, தென்பகுதியிலிருந்து பாபிலோனியனால் முற்றுமாக அழிக்கப்பட்டது.

5. நாகூமில் நினிவேயின் வீழ்ச்சியை மட்டும் கூறவில்லை எப்படியாக இது வீழ்ச்சியடையும் என்று கூறப்பட்டது. (குறிப்பு 1:8: “ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார்; இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்.”)

நேபோபெல்சார், பாபிலோனிய இராணுவத்தின் ராஜா, நகரத்தை மூன்றுவருடங்களுக்கு முற்றுகை போட்டான், இந்த நகரத்திற்கு எதிராக மூன்று தாக்குதலை நடத்தினான், மூன்றுதரமும் தோல்விகண்டான், காரணம் நினிவேயின் மத்தியில் குடித்து கும்மளம் அடித்தார்கள். ஆனால் சடுதியில் தைகிறிஸ் ஆறுபெருக்கெடுத்து நகரத்தின் சுவருக்கு எதிராக மோதியது, இதனால் சுவரில் துவாரம் உண்டாயிற்று, இந்த வெடிப்பின் ஊடாக பாபிலோனிய இராணுவம் உட்புகுந்து பெருமை கொண்ட நகரத்தை முற்றாக அழித்து.

6. நினிவேயின் அழிவு மகாபெரிதாக இருந்தது. இந்த நகரத்தின் நிலத்தினூடாக மகா அலெக்சாந்தர் தன்னுடை இராணுவத்தை ஒட்டிச் சென்றார், அந்த நகரத்தை பெரிய சுவர்கள் முன்னொருகாலம் பெரிய அரனாக இருந்தது, ஆனால் அது இருந்த இடமோ முற்றிலும் அழிக்கப்பட்டது. இந்த நகரம் கி.பி. 1845 ம் ஆண்டுவரையில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுத் தப்படவில்லை.

7. கர்த்தர் யோனாவை ஒருமுறை தன்னுடைய நியாயத்தீர்பிக்குப் உபயோகித்தார். (150வருடங்களுக்கு முன்பாக) இப்போது நகரம் முழுப்பாவத்திலும் காணப்படுகின்றது. ஆனால் நாகூம் இதனுடைய நியாயத்தீர்ப்பை அறிவிக்கின்றார்.

I. **கர்த்தருடைய பொறுமை** (1:1-8). “கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர் …” (ஆதி15:16; சங். 103:8.) கிழக்காசியாவின் பயத்தினால் 500 வருடங்களாக நினிவேயும் அசீரியன்களும் பயத்துடன் இருக்கின்றார்கள். கர்த்தருடைய பொறுமை நித்தியமாக இருக்காது. நியாயத்தீர்ப்பின் நாட்கள் விரைவில் வரும்.
**II. சனக்கெரிப்பின் பெருமை**. **(1:9-14).** “கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாத நினைவுகொண்டிருக்கிற துராலோசனைக்காரன் ஒருவன் உன்னிடத்திலிருந்து புறப்பட்டான். ”(1:11).

இந்த துராலோசனைக்காரன் சனகெரிப் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. கி.மு.701இல் இந்த அசீரிய ராஜா யூதாவையும் எருசலேமையும் முற்றுகையிட்டான். எருசலேம் சுவர்களை சனக்கெரிப்பின் இராணுவம் மோதியடித்தபோதிலும், சனக்கெரிப் தன்னுடை மகனாலேயே கொலை செய்யப்பட்டான். (2இரா. 19:35-37), இந்த கொடிய ஆட்சிக்காரன் நினிவேயின் பெருமைக்கு அடையாளமாகும். உண்மையிலே சனக்கெரிப் நினிவேயை மிகவும் அழகான நகரமாக்கினான். அதுமட்டுமல்லாமல் வீதிகளையும், சதுக்கங்களையும் அழகுபடு த்தினான். அங்கு அழகான மாளிகையைகட்டினான், இந்த மாளிகையின் அளவு 600 x 630 அடிகளா கும். இதற்குள் எட்டு அறைகள் இருந்தன. இவைகள் சித்திரவேலைகள் செய்யப்பட்டிருந்தன

**III. யூதாவுக்கான வாக்குறுதிகள்**. **(1:15).** “இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.” யூதா தன்னுடைய கொடிய எதிரித் தேசத்திற்காக இனிப் பயப்பட வேண்டியதில்லை.

**IV. நினிவேக்கான தண்டனை**. **(வச. 2-3).**

A. பயங்கரமான தண்டனைக்கான ஒரு உத்தரவாதம். (3:11-19).

நாகூம் நினிவேயை தீபேசிற்கு ஒப்பீடாகப் பார்க்கின்றார். (நோ அமோன். 3:8), இது எகிப்தின் பெரிய தலைநகரமாகும். இதுவும் தீ போல் வெளிச்சத்தைக் கொடுக்கின்றன, என்னை யாரும் அசைக்க முடியாது என்ற பெருமையில் இருந்தது. எரேமியா (46:25) மற்றும் எசேக்கியா (30:14-16) இதன் அழிவு முன்னறிக்கப்பட்டது. பின்பு அசீரியாவினால் அழிக்கப்பட்டது. இப்போது நினிவேயின் நாட்கள் வந்துவிட்டது.

B. **இந்தப் பயங்கர அழிவின் விளக்கம்**. “கேடயங்கள் சூரிய ஒளியில் சிகப்பாக மின்னியது! தாக்குதல் தொடங்கியது ! அவர்களின் இரத்தாம்பர உடுப்புக்களைப் பார்,! அவர்களுடைய இரதங்கள் முன்பும்பின்பும் ஓடித்திரிவதைப்பார், உன்னுடைய இரதங்களோ வீதியோரமாக நிற்கின்றன, அவை மின்னலில் ஜொலிக்கின்றன, பெரும் விளக்குகள் ராஜா தன்னுடைய அதிகாரிகளைப் பார்த்து சத்தமிடுகின்றார், அவர்களுடைய அவசரத்தில் அவர்கள் விழுகிறார்கள், சுவர்களுக்கு நேராக ஓடி பாதுகாப்பைப் பலப்படுத்துகிறார்கள், ஆனால் காலம் கடந்து விட்டது. நதியின் கதவுகள் திறக்கப்பட்டன, எதிரி உள்நுழைந்துவிட்டான்!! மாளிகை பயப்பீதியில் இருக்கிறது !நினிவேயின் ராணி அம்மணமாக வீதிக்குக் கொண்டுவரப்படுகின்றாள், துரத்திவிடப்படுகிறாள், ஒரு அடிமை அவளை வாரிச் செல்கிறான், அவள் அழுது கொண்டே செல்கிறாள், அவள் புறாவைப்போல் சத்தமிடுகிறாள். தன்னுடை நெஞ்சில் அடித்துக் கொள்கிறாள். நினிவே தற்போது வெடிப்பு ஏற்பட்ட தண்ணீர்த் தெட்டி போல காணப்படுகிறாள். அவர்களுடைய போர்வீரர்கள், தேசத்தைக் கைவிட்டு ஓடிப் போகின்றார்கள். நில், நில், என்று கத்துகிறார்கள், ஆனாலும் அவர்கள் ஓடிக் கொண்டே இருக்கிறார்கள். வெள்ளியையும், பொன்னையும் கொள்ளையிடுங்கள். அதற்கு முடிவேயில்லை அங்குள்ள செல்வங்கள் யாவும் முற்றாகக் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன. தேசம் முற்றாக கொள்ளையாக்கப்பட்டது.

இருதயங்கள் உருகிவிட்டன. முழங்கால்கள் முடங்கின, ஜனங்கள் முகங்கள் வெளிவிடப்பட்டன.” (நாகூம்2:3-10).

| நாகூம் |
|---|
| **நினிவேயின் அழிவு** |
| **அழிவின் காரணம் — கர்த்தராகும்**.<br>**அழிவின் காரணம் — பாவம்**<br>**அழிவுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயும்**. —**பாபிலோன்**<br>1. கர்த்தருடைய பொறுமை (1:8)<br>யோனாவின் ஊழியத்திலமேல் இருந்தது. கர்த்தருடைய கரம் நினிவேயின். கர்த்தருடைய பொறுமை கலைகின்றது.<br>2. அசீரிய ராஜாவின் பெருமை. (1:9-14)<br>3. யூதாவின் வாக்குறுதி (1:15)<br>இந்த கொடிய தேசத்திற்காக யூதா பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. .<br>4. நினிவேயின் தண்டனை. (ch. 2-3)<br>இதன் நிச்சயத் தன்மை (3:11-19)<br>இதன் விளக்கம். (2:3-9) |

# 8.ஆபகூக் (620-610கி.மு.)

**அறிமுகம் :**

1. ஆபகூக் என்பதன் பொருள் தழுவிக்கொள் என்பதாகும்.

2. கி.மு. 721 இல் வடக்கு ராஜ்ஜியத்திற்கு மீகா அசீரிய சிறையிருப்புக்கு முன்பாக தீர்க்கதரிசியாக இருந்த்துபோல, ஆபகூக், கி.மு.606 இல் பாபிலோனியச் சிறையிருப்புக்கு முன்பு தெற்கு ராஜ்நியத்திற்கான இறுதி சிறிய தீர்க்கதரிசியாகும்.

3. அவர் ஆலயத்தில் லேவிய பாடற்குழுவைச் சேர்ந்தவராவார். அவருடைய முடிவு அறிக்கை ஒரு பாடலாக அமைந்தது.

4. இது ஒரு ஆழமான சந்தேகம் கொண்ட புத்தகமாகும். ஆபகூக் பழைய ஏற்பாட்டு சந்தேகங் கொண்ட தோமஸ் என்று அழைக்கப்படுகின்றார். அவருடைய சந்தேகங்கள் இரண்டு பிரச்சனைகளை மையமாகக் கொண்டவையாகும்.

a. இஸ்ரவேலின் பாவங்கள் தண்டிக்கப்படுவதற்கு கர்த்தர் எப்படி அனுமதிப்பார்.? பின்பு ஏன் கர்த்தர் பாபிலோன் தண்டிக்கப்படும் என்று யூதாவுக்குச் சொன்னார்

b. கர்த்தருடன் உறவு இல்லாத தேசம் எப்படி கர்த்தருடன் உறவுள்ள யூதாவை தண்டிக்க அனுமதிப்பதை நியாயப்படுத்தலாம், சில நல்லமனிதர்கள் விலக்கப்பட்டிருத்தல் எப்படி என்று பின்பு அவர் கேட்டார்?

5. கர்த்தருடைய மகா மகிமையை ஆபகூக் பார்க்கின்றார். (3:1-16). இது சீனாய் மலையில் மோசே பார்த்தது போன்றதாகும். (யாத். 19.)

6. ஆபகூக்கின் மகாபெரிய இறையியல் பிரகடனம் “தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.” (2:4) இந்த வார்த்தை மூன்று முறைகளுக்குக் குறையாமல் புதிய ஏற்பாட்டில் கூறிக்கொள்ளப்பட்டன. (ரோம. 1:17; கல. 3:11; எபி. 10:38.)

7. இந்தப்புத்தகம் துக்கத்தோடு ஆரம்பமாகி மகிமையுடன் முடிவடைகின்றது. அவருடைய சந்தேகங்கள் முடிவில் சந்தோஷமாக மாறியது.

**I. சந்தேகங்கள்**. **(1-2**)

A. அவருடைய கேள்விகள். : “எங்கள் தேசத்தை நீர் தண்டிப்பீரோ?” தீர்க்கதரிசி யூதாவின் சீர்கேட்டினால் துக்கமடைந்திருந்தார்.

1. எங்கே திரும்பிப் பார்த்தாலும், ஒடுக்கப்படுதலும், இலஞ்சமும் தலைவிரித்தாடியது. (1:3).

2. நியாயப்பிமாணம் பாவனையில் இல்லை, எங்கும் அநீதிகாணப்பட்டது. (1:4).

**B. கர்த்தருடைய விடை.:** “யூதாவின் எதிரகளுக்கூடாக நான் நியாயம் விசாரிப்பேன்.” இது ஆபகூக்குடைய காலத்திலே நிறைவேற்றப்பட்டது. (1:5).

1. உலகிலே ஒரு புதிய சக்தியை எழும்ப்ப் பண்ணினார், கல்தேயர், செமற்றிக் கோத்திரத்தார், அவர்கள் பாபிலோனுக்கும் பெர்சிய வளைகுடாவுக்கும் இடையில் வசிப்பவர்கள், இவர்கள் அசீரியர்களுக்கு எதிராக தங்களை உருவாக்கினார்கள், இது நடைபெற்றது. இது கி.மு 630இல் (1:6).

2. அவர்கள் தங்கள் கொடிய செயல்களில் பெயரபெற்று விளங்கினார்கள். (1:7).

a. அவர்களுடைய குதிரைகள் சிவிங்கிகளிலும் வேகம் கொண்டதாக இருந்தது. (1:8).

b. அவர்களுடைய போர்வீரர்கள் சாயங்காலத்தில் திரிகிற ஓநாய்களிலும் தீவிரமுமாயிருந்தார்கள். (1:8).

**C. அவருடைய கேள்வி:** “இந்த கல்தேயரையும் நீர் தண்டிப்பீரோ?” இந்த புறஜாதிமக்கள் கர்த்தருடைய பிள்ளைகளைத் தண்டிப்பதற்கு ஏன் கர்த்தர் அனுமதிக்கின்றார் என்பதில் ஆபகூக் குழம்பியிருந்தார். என் இந்தப் பாவிகளைக் கர்த்தர் அனுமதித்தார் (1:12-17). தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே;, பின்னை துரோகிகளை நீர் நோக்கிக் கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன? இவ்வாறாகன கேள்விகளுக்கு விடையறிய ஆபகூக் விரும்பினார்.

1. கர்த்தருடைய பிள்ளைகள் மீன்களைப்போல் பிடிபட்டுக் கொல்லப்பட வேண்டுமா? (1:14).

2. அவர்களெல்லாரையும் தூண்டிலினால் இழுத்துக்கொள்ளுகிறான்; அவர்களைத் தன் வலையினால் பிடித்து, தன் பறியிலே சேர்த்துக்கொள்ளுகிறான்; அதினால் சந்தோஷப்பட்டுக் களிகூருகிறான்? (1:15). கல்தெயரைத் தண்டிப்பதா இல்லையா என்பதைக் குறித்துக் கர்த்தர் பதில் கூறுகின்றார்.

**D. கர்த்தருடைய விடை:** “என்னுடைய எதிரிகளினால் அவர்களைத் தண்டிப்பேன்.” ஆபகூக் காவற்கோபுரத்தில் ஏறிநின்று கர்த்தருடைய விடைக்காக காத்திருக்கின்றான். அவைகள் விரைவில் வரும்.

1. உண்மையிலே அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொன்னார், ஆனால் அது கர்த்தர் நியமித்த நேரத்திலே நடக்கும். (2:3). எழுபது வருடங்களுக்குப் பிற்பாடு மேதியா—பெர்சியா என்ற தேசங்களினால் பாபிலோன் தோற்கடிக்கப்பட்டது. (தானி. 5.)

2. பாபிலோன் தன்னுடைய நியாயங்களுக்காக நியாயம் தீர்க்கப்பட்டது.

a. அவர்கள் பலதேசங்களை இரக்கமின்றி கொலை செய்தார்கள். (2:8).

b. மதுபானத்தால் அவர்களைச் சீர்குலைத்தார்கள். (2:5).

c. அவர்கள் பலவிதமான பாகல் தெய்வ விக்கிரகங்களை ஆராதித்தார்கள். (2:18, 19).

d. நிச்சயமாக இடம் பெறும், "கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது." (2:20). விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டுமாயிருந்தால், நியாயாதிபதி தன்னுடைய சிங்காசனத்தில் இருக்க வேண்டும், மன்றம் அமைதியாக இருத்தல் வேண்டும்.

II. மகிழ்சியின் ஆரவாரம். (3).

A. தீர்க்கதரிசியின் ஆத்துமா உயிர்மீட்சி அடைந்தது. ஆபகூக் இதற்கு முன்பாகவே இந்தமுடிவிற்கு வந்துவிட்டார். "தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். (2:4). ஆனால் இப்போது அவர் கர்த்தருடைய மகிமையையும் இரக்கத்தையும் ஆராய்ந்து பார்க்கின்றார். கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்குப் பயமுண்டாயிற்று; கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்; கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும். " (3:2).

B. தீர்க்கதரிசியின் கண்களிலிருந்து சந்தேகம் நீங்கியது.
கர்த்தருடைய மகிமையை 3:3-16 ஆபகூக் கண்டார்.

1. சீனாய் மலையிலிருந்து அவர் வனாந்தரவழியாய் கடந்து சென்றதை ஆபகூக்கண்டார்.

2. அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் பூமி நிறைந்தது.

3. அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின

4. அவர் நின்று பூமியை அளந்தார். அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப்பண்ணினார்; பூர்வ பர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது, என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது

5. அவர் சரித்திர சம்பந்தமான தரிசனத்தைக் காண்கிறார், அதாவது செங்கடல் பிளந்து வழிவிட் சம்பவத்தைப் பார்க்கிறார். (யாத். 14.)

6. அவன் தானே முன்னின்று வனாந்தரவழியாய் இஸ்ரவேல் மக்களை பாலஸ்தீனத்திற்கு வழிநடத்துவதைப் பார்க்கிறார்.

**C. தீர்க்கதரிசியின் இருதயம் சந்தோசம் அடைகின்றது**. நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். (3:18).

**D. தீர்க்கதரிசியின் பாதங்கள் புதிதாக்கப்பட்டது**. "ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்". (3:19).

| ஆபகூக் |
|---|
| **சந்தேகங்கள். (ஆபகூக் 1-2)** |
| அவருடைய கேள்விகள்:- நீர் எங்கள் தேசத்தைத் தண்டிப்பீரா ?<br>கர்த்தருடைய மறுமொழி:- ஆம், நான் தண்டிப்பேன்—உன் எதிரிகள் மூலமாக. |

| |
|---|
| யூதாவின் பாவத்திற்கான தண்டனை இல்லாமல் போகுமோ என ஆபகூக் அங்கலாய்க்கின்றார். பாபிலோனியர்களின் சிறையிருப்பே அதற்கு விடையாக இருக்கின்றது.<br>அவருடைய கேள்விகள்:- எங்களுடைய எதிரிகளை நீர் தண்டிப்பீரோ?<br>கர்த்தருடைய மறுமொழி:- நான் தண்டிப்பேன், என்னுடைய எதிரிகள் மூலமாக.<br>யூதா தன்னுடைய எதிரியான பாபிலோனினால் தன்னைத் தண்டித்துக் கொள்ளும். என்று ஆபகூக்கிற்கு கர்த்தர் கூறினார்.<br>**“நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்” 2:4** |
| **மகிழ்சி ஆரவாரம். (3)** |
| தீர்க்கதரிசியின் ஆத்துமா உயிர் மீட்சி அடைந்தது (3:2).<br>தீர்க்கதரிசியின் கண்கள் பிரகாசித்தன.(3:3-16).<br>தீர்க்கதரிசியின் இருதயம் மகிழ்ச்சியடைந்தது. (3:18).<br>தீர்க்கதரிசியின் பாதங்கள் புதுப்பிக்கப்பட்டன. (3:19). |

# 9. செப்பனியா (625-610கி.மு.)

**அறிமுகம் :**

1. செப்பனியா என்பதன் பொருள் “கர்த்தர் மறைக்கிறார் அல்லது பாதுகாக்கிறார்.”

2. இவர் எசேக்கியாவின் பூட்டனாகும் அதனால் இவர் ஒரு அரசபரம்பரையினராவார்.

3. இவர் யூதாவின் இறுதி அரசனாகிய யோசியா ராஜாவின் காலத்தில் இவர் ஊழியம் செய்தார். இவர் யோசியாவுக்கு கிட்டத்து உறவினர்.

4. யோசியாவின் ஆட்சியில் மோசேயின் நியாயப்பிரமாணம் ஆலயம் திருத்தம் செய்யும் போது கண்டு பிடிக்கப்பட்டது. 621இல் ஏற்பட்ட பெரிய உயிர்மீட்சிக்கு இவருடைய ஊழியம் பெரிதும் உதவின. (2நாளா. 34-35.)

**I. இருண்டநாள்**—தீர்க்கதரிசி நியாயத் தீர்ப்பை வழங்கினார். (1:1–3:8).
A. தேவனுடைய நியாயத்தீர்ப்பு:

1. நியாயத்தீர்ப்பின் முக்கியம்: கர்த்தர் இந்த தேசத்தில் இருந்த சகலவற்றையும் வாரித்தரையில் கொட்டி அழித்தார். இதற்குள் மனிதர்கள் உட்பட பறவைகள், மீன்கள் என்பவையும் அடங்கும். (1:2-4).

2. இந்த நியாயத் தீர்ப்பிற்கான காரணம்: யூதா தேசத்தவர்கள் பாகால் தெய்வங்களை ஆராதித்தார்கள். (பல தெய்வ வணக்கமுள்ள கானானியரின் பெரிய தெய்வம்), அத்துடன் மில்கம் என்னும் அம்மோனியத் தெய்வத்தையும் ஆராதித்தார்கள். (1:5, 6).

3. இந்த நியாயத்தீர்ப்பின் பெயர்: “கர்த்தருடைய நாள். ” தீர்க்கதரிசி இதற்குப் பெயரிட்டார். இந்தப் பெயர் 7 தரத்திற்குக் குறையாமல் அழைக்கப்பட்டுள்ளது. 1:7, 8, 14, 18; 2:2, 3.

4. நியாயத் தீர்ப்பின் முடிவு (1:14-18).

**குறிப்பு :** செப்பனியா பாபிலோனிய(கி.மு605-586 ) முற்றுகையை மனதில் கொள்ளவில்லை, ஆனால் எதிர்காலத்தில் வரப்போகின்ற உபத்திரப காலத்தையே மனதில் கொண்டுள்ளார். (வெளி. 6:12-17.)

**B. கர்த்தருடைய எதிரிகள் மீதானவை நியாயத் தீர்ப்புக்கள்:**

1. பாலஸ்தீன நகரமாகிய காத்சா குடியற்றுப்போகும் , அஸ்கலோன்; அஸ்தோத்து எக்ரோன், வேரோடே பிடுங்கப்படும். (2:4-6).

2. யூதாவை ஏளனம் செய்ததற்காகவும், முற்றுகையிட்டதற்காகவும் மோவாப்பும், அஸ்கலோனும், சோதோம் கொமோரா மாதிரி அழிக்கப்படும். (2:8-11). (ஆதி. 19.)

3. எத்தியோப்பியராகிய கர்த்தருடைய பட்டயத்தினால் அழிக்கப்படும்.
(2:12).

4. அசீரியாவும் அதன் தலைநகராகிய நினிவேயும் முற்றாக அழிக்கப்படும். (2:13-15).

C. **கர்த்தருடைய நகரங்கள் மீதான நியாயத் தீர்ப்புக்கள்**.

1. அந்நாளிலே எருசலேமிலுள்ள மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தம் உண்டாகும். இச்சத்தமானது வாசல்களுக்கு கேடகப்பட்டு, நகரத்தின் உயர்ந்த வாசல் மட்டும் தொனிக்கும் (1:10).

2. எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதித்து, வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர்களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமைசெய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரைத் தண்டிப்பேன். (1:12, 13).

3. அதின் அதிபதிகள் கெர்ச்சிக்கிற சிங்கங்கள்; அதின் நியாயாதிபதிகள் சாயங்காலத்தில் புறப்படுகிறதும் விடியற்காலமட்டும் ஒரு எலும்பையும் மீதியாக வைக்காததுமான ஓநாய்கள் (3:1-7).

II. ஒரு மகிச்சியான நாள் —தீர்க்கதரிசி நீதியை அறிவித்தார். (3:8-20).

A. **கர்த்தருடைய எதிரிகள் மீதான நியாயத் தீர்ப்பு** (**ஒருமுறைமட்டும்**) (3:9, 10):

பின்பு, அவர்கள் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடும்படியாகவும், ஒருமனதுடன் அவர்களைச் சேவிக்கும்படியாகவும், அவர்களுடைய பாஷையைச் சுத்தமான பாஷையாக மாற்றுவேன். எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலிருந்து என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறவர்களாகிய சிதறடிக்கப்பட்டவர்களின் குமாரத்தியானவள் எனக்குக் காணிக்கை கொண்டுவருவாள்.

குறிப்பு : 3:9 இல்கூறப்பட்ட புதிய சுத்தமான பாஷை என்பது இரண்டு பொருள்களைக் கொண்டுள்ளது.

1. இது பாபேல் கோபுரத்தில் பாஷைகள் சபிக்கப்பட்டதற்கு எதிமாறானதாக உள்ளது. (ஆதி. 11:9), இது கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் சர்வதேசபாஷையாகிய இந்த மொழியைப் பேசி

சந்தோசப்படுவதற்காக அனுமதிக்கப்படும். இது சில வேளைகளில் உலகில் போசப்படுகின்ற மொழிகளை உள்ளடக்கியதாகவும் காணப்படலாம்.

2. இது சந்தேகமின்றி நன்நடத்தைக் கோலத்தைப் பரிசுத்தப்படுத்துவதாகவும் அமையும். இதில் அசுத்த எழுத்துக்கள் அடங்கவில்லை

B. கர்த்தருடைய தேசத்தின் மீதான நியாயத்தீர்ப்பு. (3:13): இஸ்ரவேலின் மீந்திருப்பவர்கள் பாவஞ்செய்யமாட்டார்கள். பொய் சொல்ல மாட்டார்கள், அவர்களுடைய நாவில் ஏமாற்றம் இடமில்லை, அவர்கள் பொய்யையும், ஏமாற்றத்தையும் விட்டுவிடுவார்கள், அவர்கள் பயப்படவும் மாட்டார்கள்.

C. **கர்த்தருடைய நகரத்தின் மீதான நியாயத்தீர்ப்பு** (3:14-20):

1. எருசலேம் மீண்டும் துதிப்பாடல் நிறைந்ததாக இருக்கும். பாடலின் கருப் பொருள் " இஸ்ரவேலின் தேவன் அங்கே வாசம் செய்கிறார்" என்பதாகும் . (3:14, 15).

2. இந்த சந்தோசமான பாடலைக் கர்த்தரே முன்னின்று நடத்துவார். (3:17).

| செப்பனியா |
|---|
| **நியாயத்தீர்ப்பு**<br>**தீர்க்கதரிசி நியாயத்தீர்ப்பை கூறுகிறார்.(1:1–3:8)** |
| **கர்த்தருடைய தேசத்தின் மீதானது**.<br>விடயம்.(1:2-4)<br>காரணம் (1:5, 6)<br>இதன் பெயர் (1:7, 8, 14, 18; 2:2)<br>அதன் முடிவு (1:14-18) |
| **கர்த்தருடைய எதிரிகள் மீதானது**.<br>பெலிஸ்தியா (2:4-6)<br>மோவாப் அம்மோன் (2:8-11)<br>எதியோப்பியா (2:12)<br>அசீரியா (2:13-15) |
| **கர்த்தருடைய நகரத்தின் மீதானது**<br>இதன் வசல்கள் மீதானது. (1:10)<br>இதன் குடிமக்கள் மீதானது. (1:12, 13)<br>இதன் தலைவர்கள் மீதானது. (3:1-7) |
| **நீதி** **நியாயம்**.<br>**தீர்க்கதரிசி நியாயத்தைக் கூறுதல். (3:9-20)** |
| **முன்னய கர்த்தருடைய எதிரிகள் மீதானது**.<br>ஆயிரம் வருட அரசாட்சியில் சகல ஜாதிகளும் கர்த்தரையே சேவிப்பார்கள். (3:9) |

| |
|---|
| **கர்த்தருடைய தேசத்தின் மீது**.<br>இஸ்ரவேல் சமாதானத்துடன் இருக்கும். (3:13) |
| **கர்த்தருடைய நகரத்தின் மீது**.<br>எருசலேம் துதிப்பாடல்களால் நிறைந்திருக்கும். (3:14, 15)<br>கர்த்தரே பாடல்களை முன்னின்று நடத்துவார். (3:17) |

# 10. ஆகாய் (520கி.மு.)

**அறிமுகம்**.:

1. ஆகாய் என்பதன் பொருள்: என்னுடைய பண்டிகை என்பதாகும்.

2. பழைய ஏற்பாட்டுப்புத்தகங்களில் இரண்டாவது சிறிய புத்தகம் இதுவாகுமேயுண்டு இதில் 38 வசனங்கள் மட்டு . (ஒபதியா சிறியபுத்தகம்),

3. **ஆகாய்**, **சகரியாவின் காலத்தின் தீர்க்கதரிசியாவார்**. எஸ்றாவின் புத்தகத்தில் குறிப்பிடப்படுகின்றார்கள். (5:1; 6:14) செருபாபேலுடன் இணைந்து தலைவர்கள் ஆலயம் கட்டுவதில் ஈடுபட்டபோது இவர்களும் உற்சாகப்படுத்தியவர்களாகும்.

4. ஆகாயின் தீர்க்கதரிசனங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

5. அவருடைய புத்தகம் புதிய ஏற்பாட்டு யாக்கோபுவின் நிருபத்துடன் ஒப்பிடப்படுகின்றது.

6. இதன் காலப்பகுதி பினவருமாறு கூறப்படுகின்றது.

a. கி.மு 536 50,000 யூதர்கள் செருபாபேல் தலமையில் எருசலேம் திரும்பினார்கள்.
b. கி.மு 536 ஏழம் மாதத்தில் அவர்கள் பலிபீடத்தையும் கட்டி பலிசெலுத்தினார்கள்.

c. கி.மு535 இரண்டாம் மாதத்தில் ஆலயவேலைகள் தொடங்கப்பட்டது, ஆனால் அது உடன் நிறுத்தப்பட்டது.

d. கி.மு520 ஆறாம் மாதத்தில் முதல் நாள் கட்டும்படி ஆகாய் அழைக்கப்பட்டார்.

(1) ஆறாம் மாதம் 24ம் திகதி கட்டிட வேலை தொடங்கியது.

(2) 7ம் மாதம் 21ம் திகதி ஆகாயின் இரண்டாம் விண்ணப்பம் கூறப்பட்டது.

(3) எட்டாம் மாதம் சகரியா ஆரம்பச் செய்தியை வழங்கினார்.

(4) ஒன்பதாம் மாதம் 24ம்திகதியில் ஆகாயின் 3ம் 4ம் விண்ணப்பங்கள் கூறப்பட்டன.

(5) பதினோராம் மாதம் 24ம் திகதியில் சகரியா தரிசனம் கண்டார்.

e. கி.மு518 9ம் மாதம் 4ம் நாள் சகரியாவின் தரிசனம்.

f. கி.மு516 12ம் மாதம் 3ம் நாள்தேவாலயம் கட்டிமுடிக்கப்பட்டது.

g. கி.மு 515 1ம் மாதம் 14ம் நாள் தொடக்கம் 21ம் நாள்வரை மகிழ்சியான பஸ்கா கொண்டாடப்பட்டது.

h. கி.மு455 எஸ்றா எருசலேமிற்கு வந்து குறிப்பிட்ட சில சீரமைப்புக்களைச் செய்தார்.
i. கி.மு445 நெகேமியா அலங்கத்தை மீளக்கட்டினார். இது மல்கியாவின் காலமாகும்.

7. இவ்வாறாக இப்புத்தகம் நான்கு பிரசங்கங்களைப் பதிவு செய்துள்ளது.

a. முதலாவது பிசங்கம் 1:1-11இல் காணப்படுகின்றது.

b. இரண்டாவது 2:1-9இல் காணப்படுகின்றது.

c. மூன்றாவது 2:10-199இல் காணப்படுகின்றது.

d. நான்காவது 2:20-23இல் காணப்படுகின்றது..

8. புதிய ஏற்பாட்டிலுள்ள 1கொரி 15: 58இல் கூறப்பட்டவை ஆகாய் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

**I. முதலாவது செய்தி :** ஜனங்களுக்கான செய்தி. **செய்து முடி என்பதாகும்** (1:1-15).
A. ஆலயத்தைக் குறித்த அக்கறையை மக்கள் மறந்துவிட்டார்கள். பதினைந்து வருடகாலத்திற்குப்பின்பும் ஆலயவேலைகள் முடிவுறாமல் இருக்கின்றது. இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் (1:2). அவர்கள் கர்த்தர்மீது அக்கறையற்று இருந்தபடியால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கவுமில்லை செழிப்படையச் செய்யவுமில்லை.

B. **கர்த்தருடைய ஆலோசனை இவ்வாறாக இருந்தது**. நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். (1:8).

C. செருபாபேலின் ( ஆளுனர்) ஆவியையும், யோசுவாவின் ( பிரதான ஆசாரியன்) ஆவியையும் கர்த்தர் தூண்டினார். இவ்வாறாக அவர்கள் இருவரும் மக்களைத் துண்டி ஆலய வேலைகளைச் செய்து முடித்தார்கள்.

**II. இரண்டாவது செய்தி.:** ஜனங்களின் இருதயத்தை வழி நடத்தினார். **அமைதியாக இருக்கும்படி கூறப்பட்டது**. (2:1-9).
A. அவர்கள் கட்டின ஆலயத்தின் முக்கியத்துவத்திற்குப் பதிலாக, எஸ்றாவில் நாங்கள் ஏற்கனவே பார்த்துபோல (எஸ்றா3:8-13), அங்கே அழுகை காணப்பட்டது, செருபாவேல் பிரதிஸ்டை செய்தபோது, சாலொமோன் ஆலயத்தின் மகிமையை அங்கு வந்திருந்த வயோதிபர்கள் நினைவு கூர்ந்தார்கள். புதிய ஆலயம் அதன் அளவிலும், செலவிலும் குறைவாக இருந்தது.

B. **கர்த்தருடைய ஆலயம் எப்போதாவது ஒரு நாள் கட்டப்படும் என்று தாம் அமைதியாக இருப்போம் என்றிருந்தார்கள்**. முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார். (2:9) இது இனிமேல் கட்டப்படவிருக்கும் ஆயிரம்வருட ஆலயத்திற்கு ஒப்பானதாகும். (எசே. 40-48.)

**III. மூன்றாவது செய்தி:** ஜனங்களுடைய தலைக்குக் கூறப்பட்டது. சிந்தனை செய் என்று கூறப்பட்டது. (2:10-23).

A. யூதாவின் களங்கம். (2:10-17). இரண்டு கேள்விகளுக்குப் பதில் தரும்படி யூதாவைக் கர்த்தர் கேட்டுக் கொண்டார்.

1. ஒருவன் தன் வஸ்திரத்தின் தொங்கலிலே பரிசுத்த மாம்சத்தைக் கொண்டுபோகையில் தன் வஸ்திரத்தின் தொங்கல் அப்பத்தையாகிலும், சாதத்தையாகிலும், திராட்சரசத்தையாகிலும், எண்ணெயையாகிலும், மற்றெந்த போஜன பதார்த்தத்தையாகிலும் தொட்டால் அது பரிசுத்தமாகுமோ என்று நீ ஆசாரியரிடத்தில் வேத நியாயத்தைப்பற்றிக் கேள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (2:12). அதற்கு ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக: பரிசுத்தமாகாது என்றார்கள்.

2. பிணத்தால் தீட்டுப்பட்டவன் அவைகளில் எதையாகிலும் தொட்டால், அது தீட்டுப்படுமோ என்று ஆகாய் பின்னும் கேட்டான்; அதற்கு ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக: தீட்டுப்படும் என்றார்கள். (2:13). இங்கு அவர்களுடைய பதில் ஆம் என்றிருக்கின்றது. இஸ்ரவேலர்கள் வைத்திருக்கும் நீதியானது தானாக அவர்களுக்குள் வந்ததல்ல. ஆனால் அவர்களுடைய சொந்த நீதி அவர்களையும், அவர்கள் பிள்ளைகளையும் தாக்குகின்றது.

B. கர்த்தருடைய தீர்மானத்திற்கான காரணம். (2:17-19). அவர்கள் ஆலயத்தைக் கட்டிமுடிப்பதாக தீர்மானம் செய்தபடியால், அந்த நாளிளிலுந்து, கட்டிட வேலைகள் முடிக்க முன்பதாகவே கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கத் தொடங்கினார்.

C. **மகா உபத்திரகாலத்திற்கான காரணம்**. (2:20-22). இவ்வளவு காலமாக இஸ்ரவேல் தேசத்தாரைப் பாழாக்கிவந்த புறஜாதியரை ஒரு நாள் கர்த்தர் அழித்துப் போடுவார். "...நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணி, ராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழித்து, இரதத்தையும் அதில் ஏறியிருக்கிறவர்களையும் கவிழ்த்துப்போடுவேன்; குதிரைகளோடே அவைகளின்மேல் ஏறியிருப்பவர்களும் அவரவர் தங்கள் தங்கள் சகோதரனின் பட்டயத்தினாலே விழுவார்கள். (2:21, 22). (எபி. 12:26; வெளி. 16:18-20.)

D. **செருபாபேலைக் கர்த்தர் உயர்த்தியதற்கான காரணம்**. (2:23). செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார். செருபாபேல்தான் ***ஆயிரம் வருட அரசாட்சியில் பிரதமந்திரியாக இருப்பார் என்று சிலர் கருதுகிறார்கள்.***

| ஆகாய் |
|---|
| **செயற்படுங்கள்** |
| கைவிடவேண்டாம் — ஆலயத்தை. |
| மேலேசெல்லுங்கள் — பர்வதம் மீது. |
| உற்சாகப்படுத்துங்கள் —கர்த்தருடைய வேலைக்காக |

| **பொறுமையாயிருங்கள் :** |
| --- |
| முக்கியமில்லாத ஆலயத்தைக் கட்டியதற்காக<br>முக்கியமான ஆலயத்தை ஒருநாள் கட்டுவார்கள். |
| **சிந்தித்துப் பாருங்கள்.:** |
| **யூதாவைக் களங்கப்படுத்தியதிய விடயத்தை (2:10–17)**<br>**கர்த்தருடைய தீர்மானத்திற்கான காரணத்தை (2:18, 19)**<br>**மகா உபத்திரபத்திற்கான காரணத்தை (2:20–22)**<br>**செருபாபேல் உயர்த்தப்பட்டதற்கான காரணத்தை (2:23)** |

# 11. சகரியா (520 கி.மு.)

**அறிமுகம் :**

1. சகரியா என்பதன் பொருள் யேகோவா நினைத்திருக்கிறார் என்பதாகும். இவர் ஒரு ஆசாரிய பரம்பரையினராவார்.

2. கிறிஸ்த்துவின் இரத்தசாட்சியாக வருவதற்காக, யோசபாஸ் ஆலயத்தில் கொல்லப்பட்டார் என்று கூறினார்.

3. இவர் ஆகாய் தீர்க்கதரிசியின் காலத்தவராவார். (2:4).

4. சகரியாவின் எழுத்துக்கள் தானியேல் புத்தகத்தை ஒத்தனவையாக இருந்தன.

குறிப்பு

a. தானியேல் பாலஸ்தீனத்தில் பிறந்திருந்தார், ஆனால் தீர்க்கதரிசனங்களை பாபிலோனில் எழுதினார்.

b. சகரியா பாபிலோனில் பிறந்தவர் ஆனால் பாலஸ்தீனத்தில் புத்தகத்தை எழுதினார்.

5. சகரியாபுத்தகம் வெளிப்படுத்தல் புத்தகத்தைப் போன்றதாகும்.

6. இவருடைய புத்தகம் வேறு எந்த சிறிய தீர்க்கதரிசிப்புத்தகங்களைவிட மேசியாபற்றிய செய்திகளை அதிகம் கொண்டுள்ளது. கீழ்க்குறிப்பிடும் விடயங்களை அவர் கூறுகின்றார்.

a. கிறிஸ்த்து கிளையாக இருக்கிறார். (3:8)

b. கிறிஸ்த்து கர்த்தருடைய ஊழியக்காரனாக இருக்கின்றார். (3:8)

c. கிறிஸ்த்து அடிக்கப்பட்ட மேய்ப்பனாக இருக்கின்றார். (13:7)

d. வெற்றி வருகை (9:9)

e. 30 வெள்ளிக்காசுக்காக காட்டிக் கொடுக்கப்படுகின்றார். (11:12, 13)

f. இயேசுவின் கால்களிலும் கைகளிலும் ஆணிகள் அடிக்கப்படுகின்றன. (12:10)

g. அவர் மீண்டும் ஒலிவமலைக்கு வருகின்றார். (14:3-8)

I. தீர்க்கதரிசியின் தரிசனங்கள் (1-6). சகரியா பத்து தரிசனங்களைக் காண்கின்றார், அவைகள் யாவும் ஒரே இரவில் காணப்பட்டவையாகும்.

**A. சிகப்பு நிறக் குதிரையை ஓட்டுபவராக (1:7-17).**

1. சகரியா பரலோக ஓட்டுனர் சிகப்புக் குதிரையை ஓட்டுவதைக் காண்கின்றார். மற்றய ஓட்டுனர்களால் சுற்றிவளைக்கப்படுகின்றார், அவர்கள் யாவரும் வித்தியாசமான நிங்களைக் கொண்ட குதிரைகளில் ஏறியிருந்தார்கள்.

2. இந்த சிப்புக்குதிரையில் இருந்த விஷேட ஓட்டுனர் இயேசுக்கிறிஸ்துவாக இருக்கவேண்டும்.

3. மற்றய ஓட்டுனர்கள் கர்த்தரால் அனுப்பப்பட்ட துதர்களாகும், அவர்கள் பூமியில் முன்னும் பின்னுமாக சுற்றி செல்வார்கள் (1:10). இதிலிருந்து நாம் அறியக் கூடியது, கர்த்தரும் தன்னுயை ஆவிக்குதிய ஒற்றர்களைவைத்து பாவம் நிறைந்த உலகை கண்காணிக்கின்றார். சாத்தான் செய்வது போல. (யோபு1:7; 2:2; 1பேது. 5:8).

4. கர்த்தருடைய தூதனானவர் (இயேசு) கலங்கியிருக்கும் எருசலேமிற்காக ஜெபம் செய்கின்றார், சீயோனைக் கர்த்தர் தேற்றுவார் என்று மீண்டும் கூறுகின்றார். எருசலேமைத் தெரிந்து கொள்ளுவார். (1:17).

B. **நான்கு கொம்புகள் (1:18, 19).**

சகரியா நான்கு கொம்புகளைக் காண்கின்றார் அவைகள் நான்கு உலக வல்லரசுகளைக் குறிப்பதாகக் கூறப்பட்டது, அவைகள் வேலையும், எருசலேமையும் சிதறடித்தன. கொம்புகள் கீழ்க்கண்டவற்றைப் பிரதிபலிக்கலாம். :

1. அசீரியா – அது இஸ்ரவேலின் வட ராஜ்ஜியத்தைக் கைபற்றியது. (2இரா. 17.)

2. பாபிலோன் –அது தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவைக் கைப்பற்றியது. (2இரா. 24.)

3. பெர்சியா – இது ஒரு முறை எல்லா யூதர்களையும் அழிப்பதற்கு திட்டமிட்டது. (எஸ்தர்.)

4. ரோமாபுரி –இது கிறிஸ்த்துவின் நாட்களில் எருசலேமை ஆளுகைசெய்து, அதிக வரிவசூலித்தது, இந்த நான்னு கொம்புகளும் தானியேலினால் கூறப்பட்ட உலக வல்லரசுகளுக்குப் பொருத்தமானவையாகும். (2:37-45; 7:2-8, 17-28.). அவைகள் பாபிலோன், பெர்சியா, கிரேக்கம், ரோமாபுரி என அடையாளம் காணப்பட்டுள்ளன.

C. **நான்கு தொழில்நுட்ப வல்லுனர்கள்**. **(1:20, 21).** தொழில்நுட்ப வல்லுனர் என்பது மரம், கல், உலோகம் என்பவற்றில் கைவேலைகளைச் செய்பவர்களாகும்.

1. இந்த வல்லுனர்களை அடையாளம் காண்போம். : இரண்டுவிதமான கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

a. அவை எசேக்கியேலினால் கூறப்பட்ட நான்கு நியாயத் தீர்ப்புக்கள். (14:21) யோவான் (வெளி. 6:1-8). இந்த நியாயத் தீர்ப்புக்களாவன:- யுத்தம், பஞ்சம், காட்டுமிருகங்கள், கொள்ளைநோய்கள்.

b. நான்கு தேசங்களையும். வெற்றி கொண்ட உலக வல்லரசுகளைக் குறிப்பிடுகின்றது.

(1) கோரேசு அவர்களில் ஒருவன், அவர் பாபிலோனை வெற்றி கொண்டார். (தானி. 5).

(2) பெர்சியாவை வெற்றி கொண்ட மகா அலக்சாந்தரும் அவர்களில் ஒருவன். (தானி. 8).

(3) கிரேக்கத்தை வெற்றி கொண்ட ரோம இராணுவத் தலைவர்களும் அவர்களுள் ஒருவராகும்.

(4) ரோமாபுரியை முற்றுமுழுதாக வெற்றி கொண்ட கிறிஸ்த்துவும் அவர்களில் ஒருவர். (வெளி19).

2. இந்த கைவினைஞர்களின் நோக்கம்: ஒருவனும் தன் தலையை ஏறெடுக்கக்கூடாதபடி அந்தக் கொம்புகள் யூதாவைச் சிதறடித்ததே, அவைகளுக்குப் பயமுறுத்துகிறதற்கும், யூதாவின் தேசத்தைப் பாழாக்கத் தங்கள் கொம்பை எடுத்த ஜாதிகளுடைய கொம்புகளை விழத்தள்ளுகிறதற்கும் இவர்கள் வந்தார்கள் என்றார். (1:21).

**D. தன் கையிலே அளவுநூல் பிடித்திருந்த ஒரு புருஷன் (2:1-13).**

1. தன்கையிலே அளவு நூல்பிடித்த ஒருமனிதனைச் சகரியா கண்டான், அவர் எருசலேமை அளவிடவந்தார். எருசலேமையோ அல்லது ஆலயத்தையோ அளவிடப்படும் என்பது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டுக்களில் இது இரண்டாவது முறையாகும்.
2. குறிப்பு:

a. உபத்திரப காலத்தில் ஆலயம் அளவிடப்படும். (வெளி. 11:1, 2.)

b. ஆயிரம்வருட அரசாட்சிக் காலத்தில் ஆலயமும் நகரமும் அளவிடப்படும். (எசே. 40:3, 5; 37:26.)

c. ஆயிரம் வருட அரசாட்சிக்காலத்தின் பின்பு நித்திய எருசலேம் அளவிடப்படும். (வெளி. 21:15.)

2. ஆயிரம் வருட அரசாட்சியில் கீழ்க்கண்ட அதிசயமான காரியங்கள் நடைபெறும் என்று சகரியா உறுதியாகக் கூறுகின்றார்.

a. எருசலேம் ஒருநாள் ஜனத்தினால் நிறைந்திருக்கும், அதனால் சிலர் நகரத்தின் சுவர்களுக்கு வெளியே இருப்பார்கள்.

b. கர்த்தர் தாமே அக்கினியின் மதிலாக இருந்து அவர்களைப் பாதுகாப்பார்.

c. அவர் நகரத்தின் மகிமையாக இருப்பார்.

d. அவர்களைத் தொடுகிறவன் அவரின் கண்ணின் மணியைத் தொடுவதாக இருக்கும். (உபா. 32:7, 10; சங் 17:8.)

3. இந்த அதிகாரத்தின் 8,9 வசனங்கள் பழைய ஏற்பாட்டின் திருத்துவம் சம்பந்தமாகக் கூறுகின்றது. சேனைகளின் கர்த்தர் தன்னை சேனைகளின் கர்த்தர் அனுப்பிவைத்தார் என்று கூறுகின்றார்.

4. வசனம் 12இல் பாலஸ்தீனம் பரிசுத்த நகரம் என்று அழைக்கப்படும். இந்தப் பெயரால் இங்கு மட்டும்தான் இந்த நகரம் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

**E. பரலோகத்தில் நேருக்குநேர் சந்தித்தல்**. **(3:1-**10).

பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் ஆடை.

பழைய ஏற்பாட்டில் இரட்சிப்பைக் குறித்ததன ஒரு அதிகாரமாக இது இருக்கின்றது. சகரியா கண்ட இந்த தரிசனத்தில் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய்த் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான். அவர் அணிந்திருந்த அழுக்கு வஸ்த்திரத்தின் நிமித்தம் சாத்தானால் குற்றம் சாட்டப்பட்டார். கிறிஸ்த்து சாத்தானைக் கடிந்து கொண்டார். அவருடைய அழுக்கு வஸ்திரத்தைக் கழைந்து கொண்டு அவருக்கு புது வஸ்த்திரம் கொடுக்க ப்பட்டது. அதன்பிற்பாடு யோசுவா கர்த்தரை உண்மையோடும் முழு இருதயத்தோடும் சேவி த்தான். ஒருநாள் இந்த தேசத்தில் கர்த்தருடைய கிளை முழைத்தெழும்பி தேசத்தைப் பரிசுத் தப்படுத்தும். இரட்சிப்பைக் குறித்ததான கீழ்குறிப்பிட்ட விடயங்கள் கீழேகூறப்பட்டுள்ளன.

**1. இரட்சிப்பு எதிரானவன்.** இந்த கருத்துக்களில் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன. இன்று சாத்தானானவன் நரகத்தில் இல்லை, ஆனால் அவன் கர்த்தருடைய சிங்காசனத்திற்கான வழியைத் தேடுகின்றான். அவன் அங்கே விசுவாசிகளைப்பற்றிக் குற்றம் சாட்டிக் கொண்டே இருக்கின்றான். (யோபு1, 2; வெளி. 12.)

**2. இரட்சிப்பின் மனிதன்**. அவர்தான் இரட்சகர். கிறிஸ்த்து சாத்தானைக் கடிந்து கொள்வதற்காக 2ம் வசனத்தில் பிதாவை அழைக்கின்றார். இங்கு திருத்துவம் பற்றிக் காணப்படுகின்றது.

a. அவருடைய பெயர்: கிளை(3:8). நான்கு பழைய ஏற்பாட்டுப் பகுதிகளில் இந்தப் பெயரால் அழைக்கப் படுகின்றார்.

**(1) தாவீதின் கிளை.** (எசா. 11:1; எரே. 23:5; 33:15). மத்தேயு இவரை யூதர்களின் ராஜா என்று கூறுகின்றார்.

**(2) கிளையாகிய என்னுடைய ஊழியக்காரன்**. **(சகரி. 3:8).** தாழ்மையான ஊழியக்காரன் என்று மார்க்கு கூறுகின்றான்.

(3) **அவருடைய பெயர் கிளை எனப்படும்** (சகரி. 6:12, 13). இது லூக்காவுடன் தொடர்புபட்டது, அவரை பூரண மனிதன் என்று கூறுகின்றார்.

(4) **யேகோவாவின் கிளை (எசா. 4:2).** இது யோவானுடன் தொடர்புபட்டது, அவர் அவரை வல்லமையுள்ள தேவன் என்று கூறுகின்றார்.

**(5) மூலைக் கல்**. **(3:9).** (எசா.28:16; 118; 22; மத். 21:42; அப் 4:11; எபே. 2:20, 21.):

(a) புற ஜாதிகளுக்கு அவர் நொருக்கிப் போடும் கல்லாக இருக்கின்றார். (தானி. 2:34, 35, 44, 45).

(b) இஸ்ரவேலர்களுக்கு அவர் தடுக்குக் கல்லாக இருக்கின்றார். (ரோம. 9:31-33).

(c) விசுவாசிகளுக்கு அவர் இரட்சிப்பின் மூலைக்கல்லாக இருக்கின்றார். (எபேசி. 2:19-22).

**b. அவருடைய ஊழியம்**. :

(1) நீதி என்னும் ஆடையால் ஒவ்வொரு விசுவாசியையும் உடுத்துவித்தல். (நீதி. 30:12; எசா. 64:6; 4:3, 4; ரோம. 10:1-4; பிலி. 3:9.)

(2) சாத்தானுடைய பொய்களுக்கு எதிராக கர்த்தருடன் பரிந்து பேசுதல். (லூக். 22:31; ரோம. 8:34; எபி. 7:25; 9:24; 1யோவ. 2:1.)

(3) ஒவ்வொரு விசுவாசியையும் ஆயிரம் வருட அரசாட்சிக்குள் கொண்டுவந்து ஆளுகை செய்தல். (வெளி. 11:15-19.)

3. இரட்சிப்பின் நோக்கம். (3:6, 7).

இந்த வார்த்தைகள் கீழ்க்கண்டவாறு விபரிக்கப்படுகின்றன. : "சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், நீ என் ஆலயத்தில் நியாயம் விசாரிப்பாய்; என் பிராகாரங்களையும் காவல்காப்பாய்; இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன். இப்போதும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவே, நீ கேள்; உனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற உன் தோழரும் கேட்கக்கடவர்கள்; இவர்கள் அடையாளமாயிருக்கிற புருஷர்; இதோ, கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப்பண்ணுவேன். இதோ, நான் யோசுவாவுக்கு முன்பாக வைத்த கல்; இந்த ஒரே கல்லின்மேல் ஏழு கண்களும் வைக்கப்பட்டிருக்கிறது; இதோ, நான் அதின் சித்திரவேலையை நிறைவேற்றி, இந்தத் தேசத்தில் அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சங். 103:20, 21; எபேசி. 2:4-10.)

F **தங்கக் குத்துவிளக்கும் இரண்டு ஒலிவ மரங்களும்**. (4:1-14).

முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும், அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப் போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது என்றேன்.

**1. குத்துவிளக்குகள் வேதாகமத்தில் உலகத்திற்கான கர்த்தருடைய சாட்சிகளாகும்**.

a. இங்கு இது இஸ்ரவேலுக்குப் பொருத்தமாக உள்ளது.
b. இது சபைக்குப் பொருத்தமானது. (வெளி. 1-3).

2. ஒலிவ எண்ணெய் பரிசுத்த ஆவிக்கு அடையாளமாக இருக்கின்றன. (லூக். 4:18; அப் 10:38; எபி. 1:9; 1யோவான். 2:20.)

சகரியா 4: 6இல் கர்த்தருடைய வார்த்தையைக் கவனிப் போமாகில் : "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். "

3. ஒலிவமரமானது இரண்டு முக்கிய குழுக்களுக்கு அடையாளமாகும். :

a. சரித்திர சம்பந்தமான குழுவாக செருபாவேலும் யோசுவாவும் இருக்கின்றார்கள். .

b. தீர்க்கதரிசக் குழுவாக மோசேயும் எலியாவும இருக்கிறார்கள். (வெளி.11.)

**G. பறக்கும் புத்தகச்சுருள்**. **(5:1-4).**

சகரியா பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் காண்கிறார் அதின் நீளம் இருபது முழமும் அதின் அகலம் பத்து முழமுமாயிருக்கிறது என்றேன். இது பூமியின் மீதெங்கும் ( **இஸ்ரவேல்**) புறப்பட்டுப்போகிற சாபம்;

.

1. **இந்த நியாயத் தீர்ப்பின் நோக்கம்**. இங்கு இரண்டு கட்டளைகள் குறிப்படுகின்றன சத்தியம் பண்ணுதலும், (மூன்றாவது யாத்: 20: 7) களவு செய்தலும். ( யாத்: 20: 15) அவைகள் எப்படியும முழுச் சட்டத்தையும் நிரப்புகின்றது.

a. சத்தியம் பண்ணுதல் ( **கர்த்தருடைய பெயரைப் பாவித்து**) கர்த்தருக்கு எதிரான எல்லாப் பாவத்திற்கும் வேராக இருக்கின்றது. இது செங்குத்தாக உள்ளது.

b. களவு செய்யும் பாவமானது மனி**தர்க**ளுக்கு எதிரான பாவமாகும், இது கிடையாக உள்ளது.

2. **இந்த நியாயத் தீர்ப்பின் குற்றவாளி.**

முழுச்சரித்திரம் முழுவதிலும் உள்ள இஸ்ரவேலர்களில் உள்ள இரட்சிக்கப்படாதோராகும். (ரோம. 9:6; மத். 23; 1தெச. 2:15, 16; எசே. 11:21; 20:38.)

3. **நியாயத் தீர்ப்பிற்கான காலம்**. .
   உபத்திரப காலத்திற்கும் ஆயிரம்வருட அரசாட்சிக்கும் இடைப்பட்ட காலம். (மத். 25:1-30.)
4. **நியாயத்தீர்ப்பிற்கான தண்டனை**. இது ஆவிக்குரிய மரணத்தையும் சரீர மரணத்தையும் விளைவிக்கும.

H. மரக்காலில் ஒரு மனுசி (5:5-11). தீர்க்கதரிசி ஒரு பறக்கின்ற ஒரு அளவீடுசெய்யும் கூடையைக் கண்டார். பின்பு அவருக்கு கூறப்பட்டதாவது.



1. கூடைக்குள் இருக்கும் பெண் பாவத்திற்கும் கொடுமைக்கும் அடையாளமாகும். வேதாகமத்தில் பாவத்திற்கான அடையாளமாகப் பெண்ணைக் கூறுவார்கள். (மத் 13:33; வெளி. 2:20; 17:1-7.)

2. தடித்த வெள்ளியிலான கவசம் பாவத்தின் மீது கர்த்தருக்குள்ள வல்லமையைக் குறிக்கின்றது.

3. இது சென்றடையும் இடம் பாபிலோன் என்று கூறப்பட்டுள்ளது, அங்கே இதற்கான தளம் உண்டாக்கப்பட்டிருக்கும், (5:11). இந்த அறிக்கையானது சரித்திரசம்பந்தமானதும், தீர்க்கதரிசனமானதுமான உட்பொருளைக் கொண்டிருக்கும். இவ்வாறாக:

a. சரித்திரசம்பந்தமானது — பாபேல் கோபுரம், அங்கேயே கர்த்தருக்கு விரோதமான செயற்பாடு தொடங்கியது. (ஆதி. 11:1-9.)

b. தீர்க்கதரிசனமாக. — பாபிலோன் நகரம், இது நிச்சயமாக உபத்திரப காலத்தில் மீண்டும் கட்டப்படும். (வெளி. 18.)

**I. நாலு இரதங்கள் (6:1-8).** இரண்டு பர்வதங்களின் நடுவாகப் புறப்பட்டு வருகிற நாலு இரதங்களைக் கண்டேன்; அந்தப் பர்வதங்கள் வெண்கலப் பர்வதங்களாயிருந்தன. ஒவ்வொரு இரதமும் வித்தியாசமான நிறங்களைக் கொண்ட குதிரைகளால் இழுத்துவரப்பட்டன. அந்த நிறங்களாவன சிகப்பு, செள்ளை, கறுப்பு, **மங்கிய பழுப்புநிறம்.** இவற்றிற்கு பலவிதமான அர்த்தங்கள் கூறப்படுகின்றன. அவைகளாவன:-:

1. வெண்கலப் பர்வதங்கள் கர்த்தருடைய நியாயத் தீர்ப்பைக் கூறுகின்றன. (எண். 21:9; யோவ 3:14.)

2. இரதங்களை இழுத்துவந்த குதிரைகள் புறஜாதிகள் மீது ஏற்படப் போகும் பலவிதமான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை கூறுகின்றன (வெளி. 7:1-3; 8:2, 7, 10, 12; 9:14, 15; 11:15; 15:1; 16:1-3.)

3. பலவித நிறங்களுடைய குதிரைகள் சந்தேகமின்றி வெளிப்படுத்தல் **6ஐக்** கூறுகின்றது.

a. சிகப்புநிறம் யுத்தத்தையும் இரத்தம் சிந்தப்படுதலையும் குறிக்கின்றது. (வெளி. 6:4.)

b. கறுப்புநிறம் பஞ்சத்தையும் பட்டினியையும் கூறுகின்றது. (வெளி. 6:5, 6.)

c. வெள்ளைநிறம் பொய்ச் சமாதானத்தைக் கூறுகின்றது. (வெளி. 6:2.)

d. **மங்கிய பழுப்புநிறம் மரணத்தைக்குறித்துப் பேசுகின்றது**. (வெளி. 6:8.)

**குறிப்பு** : பின்பு அவர் என்னைக் கூப்பிட்டு: பார், வடதேசத்துக்குப் புறப்பட்டுப்போனவைகள், வடதேசத்திலே என் கோபத்தைச் சாந்திபண்ணிற்று என்று என்னோடே சொன்னார். (6:8).
இது எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசுகின்றது, இது உபத்திரபகாலத்தில் ருஷ்ஷியாமீது ஏற்படும் நியாயத்தீர்ப்பாகும். (எசே. 38, 39.)

**J. யோசுவா முடிசூட்டப்படல். (6:9-15).**

1. பாபிலோனிலிருந்து மூன்று யூதச் சிறையிருப்பாளர்கள் விரைவில் வருவார்கள் என்று சகரியாவிற்குச் சொல்லப்பட்டது. அங்கு இருப்பவர்களிடமிருந்து வெள்ளியும்,பொன்னும்

பரிசாகக் கொண்டுவந்தார்கள். இவற்றினால் பொன்னான முடியைச் செய்து யோசுவாவின் தலையில் சூட்டும்படி சகரியா கட்டளையிட்டார், அவரே வரவிருக்கும் இஸ்ரவேலின் கிளையாகிய மேசியாவாகும் என்றும் விளங்கப்படுத்தினார்கள்.

2. இந்த ஆசீர்வதிக்கப்பட்ட யோசுவா ஒருநாள் ஆசாரியனாகவும் ராஜாவாகவும் இருப்பார். அவர் கர்த்தரின் ஆலயத்தையும் கட்டுவார்.

3. மூன்று திரும்பிவந்த சிறையிருப்புகள் கொஞ்சக் காலத்தின்பின்பு அனேகமானோர் தூரதேசங்களிலிருந்து பாலஸ்தீனத்திற்கு மீண்டுவருவார்கள் என்பதற்கு அடையாளமாகும். (எசா. 56:6-8.)

**II. ஜனங்களின் பெருமை (7-8).**

ஒரு கூட்டத்து ஜனங்கள் பெத்தேலில் இருந்து எருசலேமிற்கு வந்து, ஆசாரியர்களிடத்தில் நாங்க உபவாசித்து அழுது துக்கம் கொண்டாட வேண்டுமா என்று வினவினார்கள்.

B. நீங்கள் இந்த எழுபது வருஷமாக ஐந்தாம் மாதத்திலும் ஏழாம் மாதத்திலும் உபவாசம்பண்ணி துக்கங்கொண்டாடினபோது நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம்பண்ணினீர்கள்? நீங்கள் புசிக்கிறபோதும் குடிக்கிறபோதும் உங்களுக்கென்றல்லவா புசிக்கிறீர்கள்? உங்களுக் கென்றல்லவா குடிக்கிறீர்கள்? நீங்கள் புசிக்கிறபோதும் குடிக்கிறபோதும் உங்களுக்கென்றல்லவா புசிக்கிறீர்கள்? உங்களுக்கென்றல்லவா குடிக்கிறீர்கள்?

C. கர்த்தருடைய கிருபையினால் அவர்களுடைய உபவாச நாட்கள் பண்டிகைகளாக மாற்றப்படும் என்று கர்த்தர் வாக்குப் பண்ணினார். அத்துடன் அவர்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். (8:3, 4, 5, 8, 22, 23.)

**III. இளவரசனின் விஜயம். (9-14).**

**A.** இளவரசனின் முதலாவது வருகை.

1. பிதா கூறியது போலவே அவர் மந்தையை மேய்ப்பதற்காக வருவார். (11:7).

2. பொய்யான மேய்ப்பரகள் எப்படியும் அவரை வெறுப்பார்கள். (11:8).

3. இரண்டு கோல்களில் ஒன்றை முறித்து, இஸ்ரவேலை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்தார்கள். (11:10). (மத். 21:19, 42-46; 23:37-39.)

4. எருசலேமிற்குள் வெற்றிப்பவனியாக வந்து தன்னுடைய ஊழியத்தை முடிவிற்குக் கொண்டுவந்தார். சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார். (9:9). இது அப்படியே நிறைவேறிற்று. (மத்21:1-11. )

5. அவர் முப்பது வெள்ளிக்காசிற்காக விற்கப்பட்டார். (11:12), ஒரு அடிமையின் விலை முப்பது வெள்ளிக்காசாகும். (யாத். 21:32.) இது மத்தேயுவில் நிறைவேறியது. (மத்26:15.)

6. இப்படி வாங்கப்பட்ட வெள்ளிக்காசானது துக்கத்தோடு வெளியே எறியப்பட்டது. இது மத்தேயுவில் நிறைவேறினது. (மத்27:3-10. )

7. இரண்டாவது கோல் முறிக்கப்பட்டது, அதனால் எருசலேம் கி.பி. 70 இல் தீத்து எனபவனால் அழிக்கப்பட்டது.

8. அவர் இறுதியில் சிலுவையில் அறையப்பட்டார். (12:10).

**B.** இளவரசனின் இரண்டாம் வருகை.

1. பொய்யானமேய்ப்பர்கள் இரத்தம் சிந்துவார்கள்.

a. நல்லமேய்ப்பனை அவர்கள் முதலாம் வருகையில் புறந்தள்ளினபடியால், இஸ்ரவேல் கொடூரமான அந்திக்கிறித்துவின் மேய்பனிடம் கொடுக்கப்படுவார்கள், இது மகிமையான மேய்ப்பனாகிய கிறிஸ்த்துவின் இரண்டாம் வருகைக்கு சற்றுமுன்பாக இடம்பெறும். (11:15-17).

b. தேசமெங்கும் சம்பவிக்கும் காரியம் என்னவென்றால், அதில் இருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டுபோவார்கள்; மூன்றாம் பங்கோ அதில் மீதியாயிருக்கும். (13:8).

2. **இஸ்ரவேல் தவிக்கவிடப்படல்**. (12:10-14). நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். (12:10).

**3. அர்மகதோன் யுத்தம் (12:1-9; 14:1-3, 12-15).**

4. **வெற்றிகொடுக்கும் வில்லு (10:4).** வில்லானது மனுஷகுமாரணுக்கு உப்பானது. அவருடையதெய்வீகத்தை 13:7[இல்]பிதாவின் வார்த்தைகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. :7: தோழனாகிய புருசன் என்பது எனக்கான சமமான மனிதன் என்று பொருள்படும். அந்த அம்பானது கர்த்தரிலிருந்து பறப்பட்டுவருகின்றது.

a. குற்றப்படுத்தினவர்களை அவர் தண்டிப்பார்.. (9:1-8, 12-16.)

b. அவர் யூதாவை மீண்டும் பலப்படுத்துவார், அத்துடன் அவர்களை விசில்காட்டி சேர்த்துக் கொள்ளுவார். (10:8).

குறிப்பு.: அவர்களுடைய எதிரிகளை விசில்காட்டி அழைப்பேன் என்று கர்த்தர் முன்பு கூறியிருந்தார். (எசா. 7:18, 19). அதைப்போன்றே இப்போது தன்னுடைய பிள்ளைகளை கர்த்தர் மீண்டும் அழைக்கின்றார்.

c. இறுதியாக அவர்களுடன் தேசத்தின் சமாதானம்பற்றிப் பேசுவார். ; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள்பரியந்தமும் செல்லும். (9:10).

d. அவர் தாமே இவையாவற்றையும் சமர்ப்பிப்பார். (14:4, 8).

5. **கர்த்தருடைய ஆசீர்வாதங்கள்**.

அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும். தேச மெல்லாம் கேபாதொடங்கி எருசலேமுக்குத் தெற்கே இருக்கிற ரிம்மோன்வரைக்கும் சமபூமியாகத் திருத்தப்படும்; எருசலேமோ உயர்ந்ததாகி, தன் ஸ்தானத்திலே பென்யமீன் வாசல்தொடங்கி முதல்வாசலென்கிற ஸ்தலமட்டும் கோடிவாசல் வரைக்கும், அனானெயேல் கோபுரம் துவக்கி ராஜாவின் திராட்ச ஆலைகள்மட்டும் குடியேற்றப் பட்டிருக்கும். அதிலே ஜனங்கள் வாசம்பண்ணுவார்கள்; இனிச் சங்கரிப்பில்லாமல் எருசலேம் சுகமாய்த் தங்கியிருக்கும் (9:16, 17; 13:1, 9; 14:9, 10, 11, 16, 20, 21

| **சகரியா** | | |
|---|---|---|
| சகரியாவின் பத்து தரிசனங்கள். 1–6 | | |
| ஜனங்களின் பயனற்ற செயற்பாடுகள் 7–8 | | |
| இளவரசனின் இரண்டு விஜயங்கள். 9–13 | | |
| **பத்துத் தரிசனங்கள்** | | |
| 1. சிகப்புக் குதிரையின் மேல் சவாரி செய்பவர். (1:7–17)<br>கிறிஸ்த்துவின் சாயலாக்க் காணப்பட்டார், அவருடன் இணைந்து சில தூதர்களும் காணப்பட்டனர், அவர்கள் எருசலேமை அவதானித்துக் கொண்டிருந்தனர். | | |
| 2. நான்கு கொம்புகள். (1:18, 19)<br>புறஜாதிகளின் நான்கு உலக வல்லமையுள்ள தேசங்கள் இஸ்ரவேலைச் சிதறடிக்கும்.<br>1. அசீரியா (வடராஜ்ஜியத்தைக் கைப்பற்றியது)<br>2. பாபிலோன் (தெற்கு ராஜ்ஜியத்தைக்கைப்பற்றியது.)<br>3. பெர்சியா (எல்லா யூதர்களையும் அழிப்பதற்குச் சதி செய்தது. எஸ்தர்.)<br>4. ரோமாபுரி (சிதறடிக்கப்பட்டது, அது இஸ்ரவேலைச் சிதறடித்த்து..) | | |
| 3. **நான்கு தொழில்நுட்ப வல்லுனர்கள்**. (1:20, 21)<br>முதல் நான்கு முத்திரையிடப்பட்ட நியாயத்திர்ப்புக்கான குறிப்புக்களாகும்.(வெளிப்படுத்தல் 6:1–6) | | |
| 4. **தூக்கு நுலுடன் உள்ள மனிதன்** (2:1–13)<br>ஆயிரம் வருட அரசாட்சியில் எருசலேம் அளக்கப்படுவதற்கான முன்குறிப்பாகும். (எசே. 40:1–5; 48:30–35) | | |
| 5. பரலோகத்தில் நேருக்கு நேரான சந்திப்பு (3:1–10) | | |
| குற்றச்சாட்டு | அழுக்கான வஸ்த்திரம் தரித்திருத்தல். | |
| குற்றப்படுத்தப்படல் | யோசுவாவும் எருசலேம் மக்களும். | |
| குற்றம் சாட்டுபவன். | சாத்தான் | |
| பாதுகாப்பவர் | கிளை – இவ்வாறு நான்குமுறை பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. | |
| | தாவீதின் கிளை (எசா. 11:1; எரே. 23:5; 33:1 | சுவிஷேசம் நிறைவேறியது. —மத்தேயு |
| | இதோ, கிளை என்னப்பட்டவராகிய என் தாசன் (சகரி. 3:8) | சுவிஷேசம் நிறைவேறியது —மார்க்கு |
| யோசுவா சுத்திகரிக்கப்பட்டார். | இதோ, ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை ( 6:12) | சுவிஷேசம் நிறைவேறியது.—லூக்கா |
| | யேகோவாவின் கிளை (Isa. 4:2) | சுவிஷேசம் நிறைவேறியது —யோவான் |
| 6. பொன்குத்துவிளக்குகளும் இரண்டு ஒலிவ மரங்களும். (4:1–14) | | |
| சரித்திரசம்பந்தமான கருத்து | அபிஷேகம் பண்ணப்பட்ட செருபாவேல்,யோசுவா | |

| | |
|---|---|
| | என்பவர்களைக்குறிக்கும். |
| தீர்க்கதரிசனக் கருத்து | அபிஷேகம் பண்ணப்பட்ட மோசேயையும் எலியாவையும் குறிக்கும். (வெளி. 11:3–12.) |

7. பறக்கும் சுருள். (5:1–4)

| | | | |
|---|---|---|---|
| கருத்து | தேசத்தின் மிது கர்த்தரின் நியாயத்தீர்ப்பு . மனிதன் தன்னுடைய நல்நடத்தையையும் முறித்துவிட்டான். | | |
| காரணம் | சத்தியம் செய்த பாவம் | கர்த்தருக்கு விரோதமானது | செய்குத்தானது |
| | களவெடுத்த பாவம் | மனிதனுக்கு விரோதமானது | கிடையானது. |

8. கூடைக்குள் பெண் (5:5–11)

| | | |
|---|---|---|
| பெண் | பாவமும் அதன் கிளர்ச்சியும் | |
| மூடி | தடுத்துநிறுத்தும் கர்த்தரின் வல்லமை | |
| சேரும் இடம். | பாபிலோன் விருத்தியடையும் | |
| | ஒழுங்குசெய்யப்பட்ட கிளர்ச்சி | ஆதியாகமத்திலேயே தொடங்கிவிட்டது. (Gen. 11) |
| | ஒழுங்குசெய்யப்பட்ட கிளர்ச்சி | வெளிப்படுத்தலில் முடிவடையும். (Rev. 18) |

9. நான்கு இரதங்கள். (6:1–8)

நான்கு பரலோக தேவதூதர்கள் இந்த இரதங்களை ஓடினார்கள், இரண்டு வெண்கலப் பர்வதத்திலிருந்து அவர்கள் புறப்பட்டார்கள்.

வெளிப்படுத்தல் 6இல் குறப்பட்ட முதல்நான்கு கொள்ளை நோய்களையும் நான்கு இரதங்களும் குறிக்கின்றன, பர்வதங்கள் நியாயத்தீர்ப்பைக் குறிக்கின்றன.

10. யோசுவா முடிசூட்டப்படல். (6:9–15)

வரப்போகும் மேசியாவின் மூன்றுவகையான ஊழியங்கள். செருபாபேலின் விளக்கம்.

1. அவர் ஆலயத்தைக்கட்டுவார்.
2. அவர்பிரதான ஆசாரியனாகச் செயற்படுவார்.
3. அவர் அரசனாக ஆளுகை செய்வார்.

## சகரியாவும் இளவரசனும்.

### இரண்டு வருகைகள்

**அவருடைய முதலாவது வருகை.**

| |
|---|
| அவர் கர்த்தருடைய மந்தைகளைப் போஷிக்கவருவார். (11:7)<br>அவர் இஸ்ரவேலின் தலைவர்களால் புறக்கணிக்கப்படுவார். (11:8)<br>இவ்வாறாகவே இஸ்ரவேலும் புறந்தள்ளப்படும். (11:10)<br>(கோல்களை முறிப்பது அழகு என்று அழைக்கப்படுகின்றது. )<br>அவர் தன்னுடைய வெற்றிப்பவனியை ஆரம்பித்தார். (9:9)<br>அவர் 30 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டார். (11:12)<br>அவர் எருசலேமின் அழிவை முன்னறிவித்தார்.(11:14)<br><br>அவர் சிலுவையில் அறையப்பட்டார். (12:10) |
| **இரண்டாம் வருகை**.<br>அந்திக்கிறிஸ்த்துவின் கொடிய ஆட்சி (11:16)<br>எருசலேம் முற்றுகையிடப்படல். (14:2)<br>2/3 யூதர்கள் அழிக்கப்படல். (13:8)<br>1/3 யூதர்கள் இரட்சிக்கப்படுவார்கள் (13:9)<br>ஒலிவமலையில் கிறிஸ்த்து காட்சி கொடுப்பார். (14:4, 8)<br>அர்மகதோன் யுத்தம் இடம் பெறும். (12:3; 14:2, 3)<br>கர்த்தருடைய எதிரிகள் அழிக்கப்படுவார்கள். (12:4, 9; 14:12–15)<br>இஸ்ரவேலர்கள் கிறிஸ்த்துவை ஏற்றுக் கொள்வார்கள். (12:10–14)<br>இஸ்ரவேல் சுத்திகரிக்கப்படும். (13:1)<br>இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்தில் அமர்த்தப்படுவார்ள். (10:6–12; 8:8)<br>புறஜாதிகள் கர்த்தரை ஆராதிப்பார்கள். (14:16–19)<br>எருசலேம் சந்தோசமான இளைர்ளாலும் யுவதிகளாலும் நிரப்பப்படும். (8:5)<br>கிறிஸ்த்து ஆலயத்தைக் கட்டுவார். (6:13)<br>கிறிஸ்து ராஜாவாகவும்—ஆசாரியனாகவும் உலகம் முழுவதையும் ஆளுகை செய்வார். (6:13; 9:10) |

# 12. மல்கியா (435-396கி.மு.)

**அறிமுகம்:**

1. மல்கியா என்பதற்கான அர்த்தம் “என்னுடைய தூதன்.”

2. இவரே பழைய ஏற்பாட்டு கடைசித் தீர்க்கதரிசி என்பதைத் தவிர இவரைப்பற்றி வேறொன்றும் தெரியாது.

3. மல்கியாப் புத்தகம் முழுப்பழையஏற்பாட்டுபுத்தகத்தின் சுருக்கமாகவே இருக்கிறது. மற்றய புத்தகங்களில் காணப்படுகின்ற முக்கிய ஐந்து திறவுகோல் உண்மைகளை இது கொண்டுள்ளது. அவையாவன

a. இஸ்ரவேல் கர்த்தரால் தெரிவு செய்யப்படல். (1:2; 2:4-6, 10).

b. கர்த்தருக்கு எதிரான இஸ்ரவேலின் பாவங்கள். (1:6; 2:11, 17).

c. மேசியா வெளிப்படுத்தப்படல். (3:1; 4:2).

d. தேசங்கள் மீதான உபத்திரப காலம். (4:1).

e. முடிவில் இஸ்ரவேல் பரிசுத்தமாக்கப்படல். (3:2-4, 12, 16-18; 4:2-6).

4. மல்கியா மோசேயுடன் ஒப்பிடல்.

a. மோசேயே முதன்முதலில் மேசியா பற்றிய தீர்க்கதரிசனம் கூறினார். (ஆதி. 3:15.)

b. மல்கியாவே கடைசியான மேசியாபற்றிய தீர்க்கதரிசனத்தைக் கூறினார். (4:2.)

5. தானியேல் (9:24-27) புத்தகத்தின் ஒருபகுதித் தீர்க்கதரிசனத்தை மல்கியாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது 70 வருட முன்னறிவிப்பு என்று அழைக்கப்படும். (உண்மையில் 490 வருடங்கள்) இது கி.மு. 445தொடக்கம் மூன்று பகுதியாக வகுக்கப்பட்டுள்ளது.

முதலாவதுபிரிவு 49 வருடங்களைக் கொண்டுள்ளது.

**I. கர்த்தருடைய அன்பு தொடங்குகின்றது**. **(1:1-5).**
A. இஸ்ரவேலர்கள் கர்த்தரிடம் கேட்ட ஏழு கேள்விகளை மல்கியா இங்குறிப்பிடுகின்றார். .

ஒவ்வொரு கேள்ளிகளும் முதற் கேள்ளிக்குத் தெளிவான பதில் கொடுத்தபின் அடுத்த கேள்ளி கேட்கப்படுகின்றது. அவைகள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

1. எவ்வகையில் எங்களை நீர் சினேகித்தீர்.? (1:2).

2. உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம்? (1:6).

3. உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம்? (1:7).

4. எதினாலே உம்மை வருத்தப்படுத்துகிறோம்? (2:17).

5. நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும்? (3:7).

6. *எதிலே உம்மை வஞ்சித்*தோம்? (3:8).

7. உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம்? (3:13).

C. கர்த்தர் அவர்களுடைய முதற்கேள்ளிக்குப் பதில் கூறும் போது இரண்டு விடயங்களைச் சுட்டிக் காண்பித்தார்.

1. ஏதோமியர் என்னுடைய கண்ணின் மணியாகிய இஸ்ரவேலர்களை தவறாக நடத்தியபடியால் ஏதோமியரை செழிப்படைய நான் விடமாட்டேன்.
2. அவர் எசாவைவிட இஸ்ரவேலை நேசிக்கிறார். சிலர் கர்த்தர் யாக்கோபை நேசிக்கிறார், ஏசாவையோ வெறுக்கிறார். இங்கு சில விடயங்களை நாம் அவதானிக்க வேண்டும்.

a. ஆதியாகமத்தில் இரண்டு ஆண்பிள்ளைகள்பற்றியும் கூறுகின்றது, ஆனால் அதில் ஏசவை வெறுப்பதாகவோ அல்லது யாக்கோபை நேசிப்பதாகவோ கூறியதாக இல்லை. (ஆதி. 25, 27.)

b. அந்த இருதேசங்களும் இருமனிதர்களால் உருவாக்கப்பட்டது என்று அறிக்கைகள் கூறுகின்றன. தீர்க்கதரிசி ஒபதியா கூறியதுபோல கர்த்தர் ஏதோமியரின் செயல்களையும் அவர்களுடைய பாவச் செயற்பாடுகளையும் வெறுக்கின்றார்,

c. யாக்கோபு என்ற பெயர் முழு இஸ்ரவேலையுதம் குறிக்கின்றது

d. பலர் நம்மை வெறுப்பினும் கர்த்தருடைய கிருபை நம்மைத் தாங்கும். வெறுப்பிற்கான உதாரணங்கள்:-

(1) லேகா வெறுக்கப்பட்டதைக் கர்த்தர் கண்டபோது, அவர் அவளுடைய கர்ப்பத்தைத் திறந்தார், ஆனால் ராகேல் மலடியாக இருக்கின்றாள். (ஆதி. 29:31) யாக்கோபு தன்னுடைய முதல் மனைவியாரை வெறுத்துள்ளார் என்பதற்கான பதிவுகள் எதுவுமில்லை, ஆனால் இரண்டாவது மனைவியை விரும்புவதாக சாதாரணமாக்க் கூறப்பட்டுள்ளது.

(2) தரித்திரன் தனக்கடுத்தவனாலும் பகைக்கப்படுகிறான்; ஐசுவரியவானுக்கோ அநேக சிநேகிதருண்டு. (நீதி. 14:20). யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக். 14:26).

e. மல்கியாவின் செய்தியின்மூலமாக கர்த்தர் ஏசாவை வெறுப்பதாக இல்லை. ஆனால் அவர் யாக்கோபை நேசித்தார் என்று கூறுகின்றது. அவர் உண்மையில் பாவநோக்கம் கொண்ட மக்களை நேசிக்கின்றார், இஸ்ரவேலர்களுக்கு பிரசங்கம் செய்யும்போது மோசே பல தடவைகள் இந்த அன்பைப் பற்றிக் கூறியுள்ளார். (உபா. 4:37; 7:8, 13; 10:15; 15:16; 23:5; 33:3.)

இன்னும் சில புத்தகங்களில் கர்த்தர் இந்த அன்பைப்பற்றி கூறியுள்ளார். : எசா. 43:4; 4 14; 63:9; எரே. 31:3; ஓசியா 3:1; 11:1, 4; 14:4.)

**II. கர்த்தருடைய அன்பு வெறுக்கப்படுகிறது**.

A. தீர்க்கதரிசியினால்.

1. பொருத்தமற்ற காணிக்கைகளினால் கர்த்தரை ஏமாற்றுதல். (1:6–2:9).

a. அவர்கள் ஊனமானதும் வருத்தமுள்ளதுமான மிருகங்களை கர்த்தருக்குப் பலியிடுகிறார்கள். நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார். (1:8). (2சாமு. 24:24.)

b. கர்த்தருக்குக் கொடுக்க வேண்டி கனத்தை அவருக்குக் கொடுக்கவில்லை. :

(1) ஒரு மகன் தன் தகப்பனைக் கனம்பண்ண வேண்டும். (1:6)

(2) ஊழியக்காரன் தன்னுடைய எஜமானைக் கனம்பண்ண வேண்டும். (1:6)

(3) ஒரு குடிமகன் தன் ராஜாவைக் கனம்பண்ண வேண்டும். (1:14)

2. கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுக்காமல் ஏமாற்றியோர். (2:7-9).

B. ஜனங்களினால். .

1. அவர்களின் துரோகத்தினால் ஏமாற்றுகிறார்கள். (2:10)

2. அவர்களுடைய கலப்புத் திருமணத்தினால் ஏமாற்றுகிறார்கள். (2:11

3. அவர்களின் கெட்ட நடத்தையினால் ஏமாற்றுகிறார்கள். (2:14)

4. *அவர்களின் உண்மையற்ற தன்மைகளினால் ஏமாற்றுகின்றார்கள்.* (2:17)

5. *அவர்கள் கடன்பட்டதனால் ஏமாற்றுகின்றார்கள்.* (3:8-10)

6. *அவர்களின் குற்றங்களினால் அவரை ஏமாற்றுகின்றார்கள்.* (3:13-15)

**III. கர்த்தருடைய அன்பு காண்பிக்கப்படுகின்றது**.

A. அவருடைய பரிசுத்தவான்கள் மூலமாக அன்பு வெளிப்பட்டது. (3:16, 17).

3: 16 இல் அவருடைய பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

1. *ஏலோகிம்* — 2,570 தரம் கூறப்பட்டுள்ளது., இது கர்த்தருடைய வல்லமையையும் பராக்கிரமத்தையும் வெளிப்படுத்துகின்றது. (ஆதி. 1:1; சங். 19:1).

2. *எல்* — இதனுடன் நான்கு கூறப்பட்டுள்ள.

a. எல் எலியோன். அதிக வல்லமையுள்ளவர். (ஆதி. 14:17-20; எசா. 14:13, 14)

b. எல்றோயி :- என்னைக் காண்கின்ற தேவன். (ஆதி. 16:13)

c. எல் சடாய்.:- மார்பகத்தைக் கொண்டுள்ள தேவன். (ஆதி. 17:1; சங். 91:1)

d. எல் ஓலாம். :- நித்திய தேவன். (எசா. 40:28)

3. *அடோனாய். :_ எஜமான், கர்த்தர் . கர்த்தர் தன்னுடைய படைப்புக்கள் யாவற்றையும் ஆளுகை செய்கின்றார்.* (மல். 1:6).

4. *யேகோவா* —இது ஒரு பொதுவான பெயராகும். இருக்கிறவராக இருக்கிறேன் என்கின்ற தேவன்இவர் உடன்படிக்கையின் தேவன். 6,823 தரம் கூறப்பட்டுள்ளது. (ஆதி. 2:4).

இதனுடன் இணைந்து ஒன்பது யெர்களுண்டு. :

a. யே கோவா யீரே — கர்த்தர் பார்த்துக் கொள்வார். (ஆதி. 22:13, 14)

b. யேகோவா நிசி— கர்த்தர் என் ஜெயக் கொடியானவர். (யாத். 17:15)

c. யேகோவா *சாலோம்* — கர்த்தர் சமாதானம் தருபவராக இருக்கின்றார். (நியா. 6:24)

d. யேகோவா *சப்போத்*— சேனைகளின் கர்த்தர் (1சாமு. 1:3; எசா. 6:1-3)

e. யேகோவா *மக்காதெசோம்* — பரிசுத்தப்படுத்தும் கர்த்தர். (யாத். 31:13)

f. யேகோவா றோகி — கர்த்தர் என் மேய்பராயிருக்கின்றார். (சங். 23:1)

g. யேகோவா திஷ்கேணு — நீதியாயிருக்கிற கர்த்தர் (எரே. 23:6)

h. யேகோவா சம்மா—இருக்கிற கர்த்தரானவர். (எசே. 48:35)

i. யேகோவா ரப்பா —குணமாக்கும் கர்த்தர் (யாத். 15:26)

B. அவருடைய மகனை அனுப்பி வைத்தல்.

1. அவருடைய முதலாவது வருகை யோவான் ஸநானகனால் அறிமுகப்படுத்தப்பட்டது. (3:1).

2. இரண்டாவது வருகை எலியா தீர்க்கதரிசியினால் அறிமுகப்படுத்தப்படும். (4:5, 6). (வெளி. 11:3-14.) a. அவர் புற ஜாதிகளைத் தண்டிப்தற்காக வருகின்றார். (4:1, 3).

b. அவர் இஸ்ரவேலர்களைப் பரிசுத்தப்படுத்த வருகின்றார். (3:2-4).

## மல்கியா.

### கர்த்தருடைய அன்பு.

**அவருடைய அன்பு கூறுகின்றது.**

"நான் உன்னை நேசிக்கிறேன் என்று கர்த்தர் கூறுகின்றார். … நான் யாக்கோபை நேசிக்கிறேன், ஏசாவையோ வெறுக்கிறேன்." மல்கியா 1:2, 3.

இரண்டுவிதமான பிரச்சனைகள் இங்கு காணப்படுகின்றன.

**ஏன் கர்த்தர் ஏசாவை வெறுக்கின்றார். குறிப்பு. :**

1. ஆதியாகமத்தில் (25, 27) ஏசாவை வெறுக்கிறார் என்று பதியப்படவில்லை.

2. எபிரேய மொழியில் வெறுப்பு என்பதன் பொருளாக விருப்பம் என்றும் பொருள்படும். (ஆதி. 29:31; நீதி. 14:20; லூக். 14:26).

3. ஏசாவின் பெயர் ஏதோம் தேசத்தின் குழப்பத்திற்கு காரணமாகும். உண்மையில் கர்த்தர் ஏசாவின் வழிகளை உண்மையாக வெறுக்கின்றார்.

**கர்த்தர் யாக்கோபை ஏன் நேசித்தார்.: இந்தப்பகுதியில் இதுதான் பிரச்சனையாகும்**

**அவருடைய அன்பு புறக்கணிக்கப்பட்டது**

**தீர்க்கதரிசியினால் :**

1. தவறான காணிக்கையினால் கர்த்தரை ஏமாற்றினார்கள். (1:7, 8).

2. பிழையான நடத்தையினால் மக்களை ஏமாற்றுகின்றானார். (2:7–9).

**ஜனங்களினால். :**

1. அவர்களின் துரோகத்தினால் ஏமாற்றுகிறார்கள் அவர்களின் துரோகத்தினால் ஏமாற்றுகிறார்கள் (2:10)

2. அவர்களுடைய கலப்புத் திருமணத்தினால் ஏமாற்றுகிறார்கள் (2:11)

3. அவர்களின் கெட்ட நடத்தையினால் ஏமாற்றுகிறார்கள். (2:14)

4. *அவர்களின் உண்மையற்ற தன்மைகளினால் ஏமாற்றுகின்றார்கள்.* (2:17)

5. *அவர்கள் கடன்பட்டதனால் ஏமாற்றுகின்றார்கள்* (3:8–10)

6. *அவர்களின் குற்றங்களினால் அவரை ஏமாற்றுகின்றார்கள்* (3:13–15)

**அவருடைய அன்பு காண்பிக்கப்பட்டது.**

**அவருடைய பரிசுத்தவான்களை நினைவு கூருவதன்மூலம். (3:16).**

**அவருடைய ஒரேபேறான மகனை**

1. முதலாவது வருகை யோவான் ஸ்ஞானகனால் அறிவிக்கப்பட்டது. (3:1a).

2. அவருடைய இரண்டாம் வருகை தீர்க்கதரிசி எலியாவினால் அறிமுகப்படுத்தப்படும். (4:5).

**அவருடைய இரண்டாம் வருகையின் நோக்கம்.**

**புறஜாதிகள் சம்பந்தமாக:**
வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; (4:1, 3). துரும்பாயிருப்பார்கள்
**யூதர்கள் சம்பந்தமானவை:**
அவர்கள் கிறிஸ்த்துவை ஏற்றுக் கொள்வார்கள். (3:1b).
அவர்கள் கிறிஸ்த்துவினால் ஒன்றுசேர்க.கப.படுவார்கள். (3:17).
அவர்கள் கிறிஸ்துவினால் பரிசுத்தமாக்கப்படுவார்கள் (3:2, 3).
அவர்கள் கிறிஸ்த்துவினால் குணமாக்கப்படுவார்கள். (4:2).

**நன்றி இயேசுவே**

**திராணி**

**உசாத்துணை நூல்கள்**

**THE BIBLE READER'S COMPANION** *By* **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**HOLMAN BIBLE HANDBOOK** *General Editor* **David S. Dockery** *Editorial Team* **Trent C. Butler Christopher L. Church Linda L. Scott**

**Marsha A. Ellis Smith**
**James Emery White HOLMAN BIBLE PUBLISHERS**

Wiersbe, W. W. (1997, c1991). *With the word Bible commentary* (Ho 1:1). Nashville: Thomas Nelson.